கோகுலம்

GOKULAM

பிப்ரவரி '92 ரூ. 3/-





மத்தளத்தில் மறைந்திருப்பது யாருங்க?
மாயக்கண்ணன் இருக்கிறானா சொல்லுங்க?

கோகுலம்



1992 - பிப்ரவரி மாத இதழ்

மலர் : 10 இதழ் : 1





அருமைச் சிறுவர் சிறுமியரே,

ஆங்கிலப் புத்தாண்டு, பொங்கல் ஆகிய இரண்டுக்கும் ஏராளமானோர் வாழ்த்து அனுப்பியிருக்கிறார்கள். அவர்களெல்லோருக்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இந்த இதழில் இருந்து உங்கள் கோகுலம் தனது பத்தாவது ஆண்டில் அடியெடுத்து வைக்கிறது. இந்த ஒன்பது ஆண்டுகளில் 'கோகுலம்' சிறுவர் சிறுமியர்க்கான; தரமான; பயனுள்ள பத்திரிகை என்ற பெயரை உங்களைப் போன்ற குழந்தைகளிடையே மட்டுமல்லாது, பெரியவர்களிடமும், ஆசிரியப் பெருமக்களிடமும் பெற்றுள்ளது.

சிறுவர் பத்திரிகைகளில் 'கோகுலம்' அளவில் பெரிதாகவும், 96 பக்கங்கள் கொண்டதாகவும் வண்ணமயமாகமிருந்த செலவில் அச்சாகி வருகிறது என்பது நீங்கள் அறிந்ததுதான். தயாரிப்புச் செலவு மிகுதியாக இருந்தும், இதைக் குழந்தை உலகத் திற்குச் செய்யும் பெரிய தொண்டாகவே கருதி, 'கல்கி' நிறுவனத்தார் இதன் விலையை இன்னமும் ஏற்றாமல் இருக்கிறார்கள். இந்தத் தொண்டுள்ளம் கொண்டவர்களுக்கு நீங்கள் பதிலன்பு காட்ட வேண்டாமா? எப்படிக் காட்டுவது என்று நீங்கள் கேட்பது தெரிகிறது. கோகுலத்தை விலை கொடுத்து வாங்கித்தான் படிப்பேன் என்று நீங்கள் முடிவெடுக்க வேண்டும். உங்கள் நண்பர்களையும் இப்படி முடிவெடுக்க வைக்க வேண்டும். பிறந்தநாள் பரிசாகச் சட்டை, இனிப்பு, மற்றும் விளையாட்டுப் பொருட்களைக் கேட்காது அந்தப் பணத்தை உங்கள் பெயருக்குக் 'கோகுலம்' சந்தாவாகக் கட்டிவிடச் சொல்லுங்களேன். இதை நீங்கள் உறுதியாகச் செய்தாலே போதும்.

நீங்கள் ஆவலோடு கேட்டுக் கொண்டிருந்த 'ஸ்போர்ட்ஸ்' பகுதி, இந்த இதழில் தொடங்கி விட்டது. உங்களுக்கு மகிழ்ச்சிதானே?

கோகுலத்தில் 'கேளுங்கள் சொல்லப்படும்' பகுதியின் பக்கங்களைக் கூட்ட வேண்டும் என்ற வேண்டுகோள் அதிகரித்து வருகிறது. ஏற்கெனவே மூன்று பக்கங்களாக இப்பொழுதுதான் கூட்டினோம். எனவே போகப் போகப் பார்க்கலாம்.

கோகுலத்திற்கு உள்ள பெருமை, அதிக வாசகர்கள் பங்குகொள்ளும் ஒரே சிறுவர் பத்திரிகை என்பது. இந்த இதழில் மட்டும் 136 பேர் பங்கு கொண்டுள்ளனர் என்பது வியப்பளிக்கும் உண்மை!

கோகுலத்தில் இன்னும் என்னென்ன சேர்க்க வேண்டும் என்பதை எழுதுங்கள்.

அன்புடன்,

ரேவதி

(கௌரவ ஆசிரியர்)







உயிர்களிடத்தில் அன்பு வேணும் - தெய்வம்

உண்மையென்று தானறிதல் வேணும் - பாரதியார்.

இந்த இதழில்...



நானா பட்டிக்காட்டான்?
பக்கம் 5

பட்டாம் பூச்சிப் பண்ணை!
பக்கம் 7




கண்கள் பக்கம் 17






மின்மினி ஒளிர்வது ஏன்?
பக்கம் 29



தம்பித்துரையும் கடல் சர்ப்பமும்
பக்கம் 45

பட்டத்துக் கழுதை! பக்கம் 73



விடுகதைப் போட்டி பக்கம் 91



ஒரு நாள் கிரிக்கெட் போட்டிகள்! பக்கம் 84




காட்டில் நடந்த தேர்தல்!

காட்டில் தேர்தல் சூடுபிடித்தது.

''எவ்வளவு தலைமுறைகளுக்குத் தான் சிங்கமே ராஜாவாக இருப்பது? ஜனநாயக முறையில் தேர்தல் நடத்தி ஒரு புது ராஜாவைத் தேர்ந்தெடுக்க வேண்டும்'' என்று புலியார் எதிர்ப்புக் குரல் கொடுத்தார். யானை அதை ஆதரித்தது. மற்ற விலங்குகளும் அதை ஆமோதித்தன. எனவே, காட்டில் தேர்தலை நடத்தி புது ராஜாவைத் தேர்ந்தெடுக்கச் சிங்கராஜா அனுமதி அளித்தார்.

புலி தனது வேட்பு மனுவைத் தந்தது. யானையும் தந்தது. 'நான் மட்டும் குறைந்தவனா என்று கழுகும் தனது வேட்பு மனுவைத் தாக்கல் செய்ய, தேர்தல் சூடுபிடித்தது. சிங்கம் போட்டியிடவில்லை. ''எனக்கு இந்தப் பதவியால் தொல்லைதான். இந்த மிருகங்களையும் பறவைகளையும் யாரால் மேய்க்க முடிகிறது? வரவர எதுவுமே நம் சொல்லுக்குக் கட்டுப்படுவது இல்லை. எனக்கு இந்தப் பொறுப்பு தொல்லைதான். நிம்மதியாக இருக்க என்னை விடுங்கள்'' என்று கூறி விட்டது அது.



தேர்தல் நாள் வந்தது. பறவைகள் பறந்து வந்து, கழுகுக்கு ஆதரவாக ஓட்டளித்தன. தங்கள் இனத்தை அவை விட்டுக் கொடுக்குமா? பறவைகளின் ஓட்டு சிதறாமல் மொத்தமாகக் கழுகுக்குக் கிடைத்தது. ஆனால், விலங்குகளின் ஓட்டுதான் யானை, புலி, ஓநாய் என்று மூன்றிடமும் பிரிந்தன. அதனால், கழுகுக்கே வெற்றி வாய்ப்பு பிரகாசமாக இருந்தது.

ஓட்டு நேரம் முடிந்ததும், ஓட்டுப் பெட்டிகளை ஒன்றாகச் சேர்த்தார்கள். ஒட்டகச் சிவிங்கி காவல் காத்தது. பொதுவான நல்லவர் என்று கழுதையை கண்காணிப்புப் பணியில் ஈடுபடுத்தியிருந்தனர்! மறுநாள் காலை ஓட்டுகளை எண்ணும் பணி தொடங்க இருந்தது.

பாதி இரவில் கழுதையாருக்குப் பசித்தது! ஏதாவது உணவு கிடைக்குமா என்று பார்த்து வர, கம்பளியைப் போர்த்திக் கொண்டு கிளம்பியது.

அந்த நேரத்தில், ஒட்டகச்சிவிங்கியின் ஆதரவோடு கள்ளச் சாவி போட்டு ஓட்டுப் பெட்டிகளைத் திறந்து, கழுகுக்கு சாதகமாக விழுந்திருந்த ஓட்டுகளைத் தனியே பிரித்து எடுத்து விட்ட புலியார், அவைகளை ஆற்றில் எறிந்து விடப் போனார். அங்கே வந்த கழுதையார், புலிக்கு சாதகமாக விழுந்திருந்த ஓட்டுகளை ஆனந்தமாக மென்று சுவைத்துப் பசியாறினார். அவர் கடைசி ஓட்டைத் தின்னும் போது மற்ற விலங்குகள் பார்த்து விட்டன. அவ்வளவுதான்! தர்ம அடிதான்! காட்டை விட்டுக் கழுதையார் நகரத்துக்கு வந்து விட்டார்! இன்னும் காட்டுக்குத் திரும்பவில்லை!

- வசந்தா வேணுகோபால்,
சென்னை - 8.



நானா பட்டிக்காட்டான்!

பட்டிக்காட்டுச் சிறுவனான வேலன் வெகுதூரம் நடந்து பக்கத்து ஊருக்குப் போய்ப் படித்து வந்தான். வேலன் நல்ல புத்திசாலி.

ஒருநாள் பள்ளிக்குப் போகும் போது அவனுடைய ஒரு கால் செருப்பு அறுந்து விட்டது. பள்ளிக்கோ நேரமாகி விட்டது. செருப்புத் தைப்பவனைத் தேடிச் சென்று தைத்துப் போட்டுக் கொண்டு போக நேரம் இல்லை. செருப்பை வீசி எறிந்து விட்டுப் போகவும் மனம் வரவில்லை. தைத்துப் போட்டுக் கொண்டால் இன்னும் ஆறு மாதம் தாங்கும். செருப்பைக் கையில் எடுத்துச் சென்றால், நகரத்துப் பையன்கள் கேலி செய்வார்களே என்று ஒரு நிமிடம் தயங்கினான். பிறகு வந்தது வரட்டும் என்று இரண்டு செருப்பையும் கைகளில் மாட்டிக் கொண்டு நடந்தான்.

''டேய், கால்ல போட்டுக்கற செருப்பைக் கைல மாட்டிக்கிட்டு வராண்டா பட்டிக்காட்டு வேலன்'' என்று நண்பர்கள் கேலி செய்து அவனை வரவேற்றனர். மற்றவர்களும் அவர்களோடு சேர்ந்து கொண்டனர். ஆசிரியர் இன்னும் வரவில்லை. அதனால் மாணவர்களின் அட்டகாசம் அதிகமாக இருந்தது.


வேலன் பதில் கூறவே இல்லை. ஆகாயத்தைப் பார்த்து, ''முருகா, அறியாமல் கேலி செய்யும் இவர்களை மன்னித்து விடு'' என்று கூறினான்.

''என்னடா! யாருமே தெரியலே! யார்கிட்டே பேசறே?'' என்று வியப்புடன் கேட்டான் ஒரு நண்பன்.

''பால முருகன்டா. வேலோடும் மயிலோடும் காட்சி தர்றார்டா! இரண்டு செருப்பையும் கையில மாட்டிக்கிட்டு மனமுருகித் தொழுதால் முருகப் பெருமான் தென்படுவார்னு ஒரு சாமியார் சொன்னார். அதனால தான் என் செருப்பைக் கைகளில் மாட்டிக்கிட்டேன்'' என்று திறமையாகப் புளுகினான் வேலன்.

''அப்ப நாங்களும் கைல மாட்டிக்கிட்டு வேண்டிக்கிட்டால் முருகன் காட்சி தருவாரா?'' என்று ஆவலோடு கேட்டான் கலாட்டா செய்த பையன்.

''தரலாம்!'' என்றான் வேலன் அழுத்தலாக.



உடனே தனது இரண்டு செருப்புகளையும் கைக்கு ஒன்றாக மாட்டிக் கொண்டு தொழுதான் அவன்!

சிறிது நேரம் பார்த்து விட்டுத் ''தெரியலையேடா முருகனை?'' என்று பொறுமையிழந்து கூறினான் நண்பன்.

மனதுக்குள் சிரித்துக் கொண்டே வேலன், ''எனக்கு நல்லாத் தெரியறார்டா. உனக்கு மட்டும் எப்படித் தெரியாது போகும்? ஒருவேளை நீ பாவம் பண்ணினவனோ?'' என்றான் வேலன்.

''இல்லேடா'' என்று சமாளித்த அவன், ''இப்போ தெரியறார்டா முருகன். ஆகா! என்னமா மயில் ஜொலிக்குது! வேல்ல நவரத்னம் கூடப் பதிச்சிருக்கு போல இருக்குடா'' என்று புளுகினான். ''டேய், நாங்களும் முருகனைப் பார்க்கணும்டா'' என்று மற்ற நண்பர்களும் தங்கள் செருப்புகளைக் கைகளில் மாட்டிக் கொண்டனர். ஆசிரியர் வந்த போது, யார் காலிலும் செருப்பு இல்லை! எல்லாம் அவர்கள் கைகளில் இருந்தன!

''என்னடா இது!'' என்று திகைத்தார் ஆசிரியர்.

வேலன் முன்னால் வந்தான். ''என் கால் செருப்பு அறுந்து போச்சு. அதனால கைகளில் தூக்கி வந்தேன். இவங்களெல்லாம் கேலி பண்ணினாங்க. இவங்களையும் தங்கள் செருப்பு களைக் கையில் சுமக்க வைக்க இப்படித் தந்திரம் பண்ணினேன்'' என்றான்.

''பட்டிக்காட்டான்டா'' என்று அலட்சியமாக வேலனை ஏளனத்தோடு பார்க்கும் அனைவரும் தலை குனிந்தனர்!

– ஜெ. சலீம், வந்தவாசி.


பட்டாம்பூச்சிப் பண்ணை!



பால் பண்ணை, கோழிப் பண்ணை தெரியும். பட்டாம்பூச்சிப் பண்ணை தெரியுமா? ரீல் இல்லை! பட்டாம்பூச்சிகளுக்காக உண்மையாகவே ஒரு பண்ணை நடக்கிறது!

பட்டாம் பூச்சி சேகரிப்போரின் நீண்ட நாள் கனவைப் பூர்த்தி செய்ய பிரிட்டனின் ஸ்ட்ரூஃபோர்டில் உலகத்தின் முதல் பட்டாம்பூச்சிப் பண்ணை அமைக்கப்பட்டது. நகரத்தின் நெரிசல், ஓசை, போக்குவரத்து ஊர்திகளின் நச்சுப் புகை போன்ற பல குறைபாடுகள் இதைப் பாதித்தாலும், ஸ்ட்ரூஃபோர்டு பண்ணை உலகத்தின் அதிசயமாக, பட்டாம்பூச்சி சேகரிப்பவர்களின் புண்ணியத்தலமாகப் பல ஆண்டுகள் திகழ்ந்தது. ஆனால், பினாங் பட்டாம்பூச்சிப் பண்ணை 1986, மார்ச்சில் அமைக்கப்பட்ட பிறகு அந்தப் பெருமைகளையெல்லாம் பினாங் பண்ணையே தட்டிக் கொண்டது.

உலக அதிசயங்களில் ஒன்றாக இப்பொழுது பெயர் பெற்று விட்ட பினாங் பட்டாம்பூச்சிப் பண்ணை, பினாங் தீவின் வளமான வடமேற்குப் பகுதியில் அழகு சொட்டும் இயற்கைச் சூழலில் 0.8 ஹெக்டர் பரந்த நிலப் பரப்பில் அமைந்துள்ளது. இது



அமையக் காரணமாக இருந்தவர் டேவிட் கோ.

குழந்தைப் பருவத்தில் இருந்தே 'கோ'விற்கு பட்டாம்பூச்சிகளிடம் அளவிட முடியாத ஆர்வம். இயற்கை மலைவளம் நிறைந்த பினாங் பகுதி மனங்கவரும் பட்டாம்பூச்சிகள் நிறைந்த கனவு உலகம். எவ்வளவோ எதிர்ப்புகளுக்கு இடையே பட்டாம்பூச்சிகளின் அதிசயிக்கத்தக்க வாழ்க்கை முறைகளை நேரடி அனுபவத்தின் மூலமாக படாத பாடுபட்டு அறிந்து கொண்டார் கோ. பினாங் பண்ணை இவரது கனவுதான்! விலைமதிப்பில்லாத இவரது அனுபவ, அறிவுத் திறமையை உணர்ந்து, இவருக்கு உதவ முன்வந்தார் கிளைவ் ஃபேரெல் என்பவர்.



பினாங் பட்டாம்பூச்சிப் பண்ணையின் உரிமையாளர் இவர்தான். 'கோ'வின் திட்டங்களுக்கு ஆர்வமூட்டி நிழலாக இருப்பவர் அவரது மனைவி வனீசா. இந்த மூவரின் உழைப்பும்தான் பண்ணையை உலக அதிசயங்களில் ஒன்றாக்கியிருக்கிறது.

இந்தப் பண்ணையில் பட்டாம்பூச்சி வளர்ப்போடு, அவைகளை உற்சாகப்படுத்த உதவும் வகையில் தேன் சொட்டும் மலர்கள், வண்ணமலர் நிறைந்த மரங்கள், அருவிகள், குட்டைகள் எல்லாம் உள்ளன. குட்டைகளில் குள்ள வாத்துகள், மீன்கள், எல்லாம் இருக்கின்றன. பட்டாம்பூச்சிகளோடு அவைகளைச் சார்ந்த இனமாகிய விட்டில் பூச்சிகளும் மற்ற பூச்சிகளும் கூட இங்கு வளர்க்கப்படுகின்றன. இவைகளில் உள்ள மொத்தம் 1,40,000 வகைகளும் இங்கு உள்ளன! இதற்காக 'கோ' போட்ட திட்டத்தில் எதுவுமே குறைவைக்காது அப்படியே நிறைவேற்றித் தந்துள்ளார் கிளைவ் ஃபெரல். இது அமைய ஆறு ஆண்டுகளுக்கு மேல் ஆகியுள்ளது என்றால் பாருங்களேன்.

உலகத்தின் மிகவும் அரிதாகி வருகின்ற பட்டாம்பூச்சிகள், மற்ற பகுதிகளில் காணக் கிடைக்காத பூச்சி இனங்கள் எல்லாம் இங்கே குடும்பம் நடத்துகின்றன. பொழுதுபோக்காக இவைகளைக் காண வருவோர், இந்த இனங்களைச் சேகரிப்போர், இந்தப் பூச்சிகளைப் பற்றி ஆராய்ச்சி செய்வோர் அனைவருக்கும் இந்தப் பண்ணை ஓர் அறிவாலமாகத் திகழ்கிறது. பட்டாம்பூச்சிகளில் மட்டும் 120 வகைகள் உள்ளன.

உலகத்தின் அரிய பெரிய பட்டாம்பூச்சி வகையான 'ராஜா புருக்' இங்கே சர்வ சாதாரணம்! இதன் சிறகுகளின் நீளம் 25 செ.மீட்டர்! சாரவாக் என்ற தீவை ஆண்ட எகிப்திய மாமன்னர் புருக்கின் நினைவாக இடப்பட்ட பெயர்.

இரவில் மட்டுமே திரியும் 'அட்லாஸ் மோத்' என்ற அதிசய பட்டாம்பூச்சி வகை இங்கே இருக்கிறது. இதன் சிறகின் நீளம் 30 செ.மீ.!

இவற்றிற்கு நேர்மாறாக 3 மிலி மீட்டர் நீளமே உள்ள 'பிக்மி நீலம்' என்ற வகையையும் கூட்டம் கூட்ட




மாக இங்கே காணலாம். எப்படிப் பட்டவர்களையும் கவர்ந்திழுப்பவை பட்டாம்பூச்சிகளின் அற்புதமான வேலைப்பாடுகள் அமைந்த வண்ணச் சிறகுகளே. இவைகளை இந்தப் பண்ணையில் காட்சியாக வைத்திருக்கிறார்கள்.


பட்டாம்பூச்சி மற்றும் மற்ற பூச்சி இனங்களைப் பற்றி ஆராய்ச்சி செய்வோருக்குத் தனியான வசதிகள் செய்து தரப்படுகின்றன. மற்றவர்களுக்கு முதலில் வீடியோ படம் போட்டுக் காட்டப்படுகிறது. பூச்சிகளை எப்படி அதிர வைக்காது இருந்து அவைகளைக் கண்டுகளிக்கலாம் என்பது சொல்லிக் கொடுக்கப்படுகிறது. அவைகளை மீறாது இருந்தால் கற்பனைக்கு எட்டாத பட்டாம்பூச்சிகள் வண்ணக் கலவை உலகத்தைக் கண்டுகளிக்கலாம் என்று ஆசை காட்டி அடிமையாக்குகிறார்கள்.

பட்டாம்பூச்சிகள் மட்டுமல்ல. அவை பூச்சிகளாக வெளிவருமுன், அவற்றின் முட்டைகளும் கூட பல்வேறு வடிவங்களில் பல்வேறு வண்ணங்களில் இருக்கும் அதிசய உண்மையை இங்கே காணலாம்!

உலக சாதனை படைத்த சில பூச்சி இனங்கள், பட்டாம்பூச்சி வகைகளைக் கொண்ட ஒரு அருங்காட்சியகம் இங்கே இருக்கிறது. பட்டாம்பூச்சிகளை சேகரிப்போர்களுக்கு ஒரு விற்பனை நிலையமும் இருக்கிறது. இவற்றை எப்படி சேகரிக்க வேண்டும், எப்படி வகை பிரிப்பது, எப்படிப் பாதுகாக்க வேண்டும் என்பது பற்றி ஒரு வகுப்பே நடத்துகிறார்கள்.

மற்ற பூச்சி இனங்களைக் கூட இங்கே விலைக்கு வாங்கலாம். உயிருடனும் கிடைக்கும். பதப்படுத்தப் பட்டும் கிடைக்கும்.







பார்ப்பவர்களைப் பரபரப்பில் ஆழ்த்த வைப்பது இந்தப் பண்ணையில் உள்ள தேன் பொந்து! இதில் மலேசியாவின் அரிதாகி விட்ட, வண்ணமான தேள் வகைகளை உயிருடன் கண்டு திகைக்கலாம். ஆர்வம் இருந்தால் ஆராய்ச்சியே செய்ய உங்களுக்கு வசதி செய்து தருகிறார்கள்.


பூச்சிகளைத் துன்புறுத்தி வேடிக்கை பார்ப்பவர்களுக்கு உடனே 'கல்தா' கொடுத்து அனுப்பி விடுகிறார்கள். இதில் தயவு தாட்சண்யம் இல்லை. பண்ணைக்குள் எந்தவிதமான வாகனங்களையும் அனுமதிப்பதில்லை. எப்படிப்பட்ட பெரிய மனிதராக இருந்தாலும் சரி. புகை பிடிக்கக் கூடாது. துப்பக் கூடாது!

''அவசரக்காரர்களுக்கு இது ஏற்ற இடமில்லை. வீடியோ பார்த்து விட்டுப் போகலாம்'' என்று அறிவிப்புத்தான் முதலில் வரவேற்கும்! உள்ளே சென்று பார்க்க அவர்களே பைனாகுலர் தருகிறார்கள்!

8,50,000 மலேஷிய டாலர் செலவில் அமைந்துள்ள இந்தப் பண்ணைக்கு நுழைவுக் கட்டணம் உண்டு. பெரியவர்களுக்கு 2 டாலர். குழந்தைகளுக்குப் பாதிக் கட்டணம். எல்லா நாட்களிலும் இது திறந்திருக்கிறது. காலை எட்டு மணிக்கு மேல் மாலை



நான்கு மணிக்கு உட்பட்ட நேரமே இதைக் கண்டுகளிக்க ஏற்ற நேரம் என்கிறார்கள். லட்சக்கணக்கில் பணத்தைக் கொட்டிக் கொடுப்பதாக இருந்தாலும் சினிமா படப்பிடிப்பை அனுமதிப்பதில்லை!



''உங்கப்பா அம்மா சண்டை போட்டா நீ யாரு பக்கம்?''

''ரோடு பக்கம்!''

- கே. சோமசேகர்

''இந்த உலகத்து ஊர்கள் எல்லாமே நம்ம ஊரா? எப்படிச் சொல்றே?''

''நாமதான் ஊர்க்குருவிங்களாச்சே!''



கேளுங்கள் சொல்லப்படும்



★ ஓா. கண்ணத்தாள், குளச்சல்.


தேசியத் திருநாட்களில் அரசு அலுவலகங்களில் மிகப் பெரிய தேசியக் கொடிகளை ஏற்றிப் பறக்க விடுகிறார்களே... இவை கிழிந்தோ, சாயம் போனாலோ என்ன செய்வார்கள்?

இந்தக் கேள்வி நீயாகக் கேட்டிருப்பதாக எனக்குத் தோன்றவில்லை. எப்படியிருந்தாலும் பதில் இதோ.

சாயம் போன, கிழிந்து போன கொடிகளைப் பறக்க விடக் கூடாது. இவைகளை ஒன்று திரட்டி, ஆறடி



ஆழமுள்ள குழிகளில் புதைத்து விட வேண்டும். அதுவும், மறுபடியும் எந்தக் காலத்திலும் இவை தோண்டி எடுக்கப்பட முடியாத இடத்தில்! உரிய அறிவிப்பு இந்த இடத்தில் இருக்க வேண்டும். இதை நான் கூறவில்லை! இதற்கான விதிமுறைகள் NATIONAL HONOURS ACT 1971 கூறுகின்றது.



★ து. தமிழ்மணி, கூடலூர்.

'இமிட்ரான் (IMITRAN) என்பது என்ன? இது எதற்குப் பயன்படுகிறது?

எக்ஸ்ரே படங்களை எங்கோ தொலை தூரத்தில் உள்ள டீ.வி. திரையில் விழச் செய்யும் கருவி இது. எக்ஸ்ரே படம் ஒலிச் சைகைகளாக மாற்றி தொலைபேசியின் வாயிலாக அனுப்பப்பட்டு, மீண்டும் ஒளிச் சைகைகளாக்கப்பட்டு, தொலைக் காட்சித் திரையில் விழும். இன்னும் நமது நாட்டிற்கு வரவில்லை. இது வந்து விட்டால், சென்னையில் எக்ஸ்ரே எடுத்து, அமெரிக்காவில் உள்ள டாக்டர் வீட்டு டீ.வி. திரையில் விழச் செய்து, அவரது ஆலோசனையைப் பெற்று சிகிச்சை செய்ய இயலும்!



★ சா. பிலமினா, திருச்சி - 3.

அரவுண்டு தி வேர்ல்ட் இன் 80 டேஸ் (80 நாட்களில் உலகத்தைச் சுற்றி) என்ற நாவலை எழுதியது யார்? ஜூலஸ் வெர்னேதானே? நான் பார்த்த ஒரு புத்தகத்தில் 'ஜேம்ஸ்போ' என்ற ஒரு குறிப்பு இருந்தது. எது சரி?

உலகப் புகழ்பெற்ற இந்த நாவலை எழுதியவர் ஜூலஸ் வெர்னேதான். அதில் சந்தேகமே இல்லை. இது திரைப்படமாக எடுக்கப்பட்டது. இதற்

சேரநம்பி

கான திரைக்கதையை மூன்று பேர் அமைத்தார்கள். அதில் ஒருவர்தான் 'ஜேம்ஸ்போ'. இந்தப் படத்திற்குப் பிறகு இவர் பல வெற்றிப் படங்களுக்குத் திரைக்கதை அமைத்துப் புகழ் பெற்றார். தனது அனுபவங்களை வைத்து அவர் ஒரு புத்தகம் எழுதியிருக்கிறார். நீ பார்த்துக் குழம்பிப் போனது இ ந் த ப் புத்தகத்தைப் பார்த்துத்தான்.



★ ப. சத்தியநாராயணன், நாமக்கல்.

மறதிப் பேராசிரியர் (ABSENT MINDED PROFESSOR) திரைப் படத்தை வால்ட் டிஸ்னி தயாரித்தாரே, இதன் கதையையும் அவரேதான் எழுதினாரா?

இல்லை. சாமுவேல் ஜாக்சன் டபுள்யூ டெய்லர் என்பவர் எழுதிய நாவல் இது. எப்ஃடி பில்வாட் என்பவர் திரைக்கதை வசனம் எழுதினார்.

★ பூ. முத்துமாணிக்கம், காளையார்கோவில்.

உலகின் முதல் பெண் மருத்துவர் யார்?

அமெரிக்காவின் எலிசபெத் பிளாக்வெல் என்பவர். (1821-1910). பெண்கள் மருத்துவம் படிப்பதற்கும் பெண்களை மருத்துவக் கல்லூரியில் சேர்த்துக் கொள்வதற்கும் பலமான எதிர்ப்பு



இருந்த காலம் அது! மருத்துவம் படிக்க இவருக்கு எல்லாத் தகுதிகள் இருந்தும், கல்லூரியில் இடம்கோரி இவர் பதினொரு முறை விண்ணப்பித்தும், அது ஏற்கப்படவில்லை! கடைசியில் 12வது முறைதான் கல்லூரி நிர்வாகம் மனம் இளகி இடம்தந்தது. ஆண்களுக்கு இடையே அவர் ஒரே ஓர் மாணவி. இப்பொழுது கல்லூரி மாணவர்கள் தங்கள் ஜூனியர்களைச் செய்யும் கிண்டல்களை விட மோசமான கிண்டல்கள்! அத்தனையையும் அந்தப் பெண்மணி தாங்கிக் கொண்டாள். விடா முயற்சியுடன் படித்து அதிகச் சிறப்பெண் பெற்று டாக்டர் படிப்பை முடித்தார். பிறகும் துன்பங்கள் தொடர்ந்தன. ஒரு பெண்ணை டாக்டராக அமர்த்திக் கொள்ளவோ, தனியாகத் தொழில் நடத்தவோ ஏகப்பட்ட தடை. மனம் வெறுத்து பிரான்சுக்குப் போனார். மறுபடி நியூயார்க் வந்தார். பலத்த எதிர்ப்புகளுக்கிடையே மருத்துவத் தொழிலைத் துவக்கினார். நோயாளிகள் வரவில்லை! இறுதியில் 'நியூயார்க் ஹெரால்டு' என்ற பத்திரிகையின் நிருபர் தற்செயலாக அவரைப் பேட்டி கண்டு ஒரு கட்டுரை வெளியிட்டார். அதுவே புதுவாழ்வு வகுத்தது. அவரது இலட்சியம் கைகூடியது. 1867 ஆம் ஆண்டு பெண்களுக்கான முதல் மருத்துவக் கல்லூரியை இவரே தொடங்கினார்.

எ லி ச பெ த் பிளாக்வெல்லின் வாழ்க்கை விடாமுயற்சிக்கு ஒரு எடுத்துக்காட்டு.

★ உ. தனசேகரன், சாத்தூர்.

ஒன்றுக்கு மேற்பட்ட இதயம்

கொண்ட உயிரினம் ஏதாவது இருக் கிறதா?

இருக்கிறதே! கட்டில் பிஷ் என்று ஒரு மீன் வகை. கடலில் மட்டுமே வாழக்கூடியது. இதற்கு மூன்று



இதயங்கள்! இரண்டு இதன் செதில்களுக்குக் கீழே. 3வது உடலுக்கு நடுவில்!



★ சி. சரசுவதி, தர்மபுரி.

குதிரையின் வயதை எப்படிக் கண்டுபிடிக்கிறார்கள்?

அதன் பற்களைக் கொண்டு.

★ கு. பட்டாபி, கு. விவேக், மதுரை.

கிரிக்கெட் வீரர்களின் வாழ்க்கை சுவையானதுதானா?

அது அவர்கள் புரியும் சாதனை களைப் பொறுத்தது. கவாஸ்கர் ஆஸ் பத்திரியில் பிறந்த போது, அதே ஆஸ் பத்திரியில் ஒரு மீனவப் பெண்ணுக்குப் பிறந்த குழந்தையுடன் மாறிப் போக



இருந்தாராம். நல்லகாலமாக அவரது தாய் மாமன் இதைக் கண்டுபிடித்து குழந்தை கவாஸ்கர் தன் தாயுடன் சேர்க்கப்பட்டாராம்! இதை இன்று நாம் படிக்கும் போது எத்தனை அதிசய மாக இருக்கிறது! எல்லா மனிதர்களின் வாழ்க்கையிலும் சுவையான நிகழ்ச் சிகள் இருக்கத்தான் செய்கிறது!



★ வ. கலைமணி, வ. தென் மொழி, வ. இன்மொழி, அண்ணாமலை நகர்.

எழுத்தாளர் ஜெயகாந்தன் குழந்தை களுக்காக நூல் எழுதியிருக்கிறார் என்கிறார்களே? அது எங்கு கிடைக்கும்?

பாரதியாரின் பாடல்களைக் கொண்டு அவரது கருத்துகளை மைய மாக வைத்து, குழந்தைகளுக்கு உயிரினங்கள், பண்பாடு, சமயம் போன்றவற்றை விளக்கி, பயற்சிப் பாடமாக தந்துள்ளார் ஜெயகாந்தன். குழந்தைகளுக்கான பாடத் திட்டங்கள், பாடப் பயிற்சிகள் எப்படி இருக்க வேண்டும் என்பதைக் கூறுவதே நூலின் நோக்கம். வானொலியில் தொடராக ஒலிபரப்பாகி 'பாரதி பாடம்' என்ற பெயரில் புத்தகமாகியுள்ளது. வெளி யிட்டோர் கலைஞன் பதிப்பகம், சென்னை - 17.

தந்திரக்காரச் சிறுவன்

வணக்கம் கூறி அதிகாரியின் அறையில் நுழைந்த சிறுவன், ''எனக்கு ஓர் உதவி வேண்டும்'' என்றான் பணிவுடன்.

அது ஒரு பத்திரிகை அலுவலகம். 'ஃப்ரீ பிரஸ்' என்று பெயர். அமெரிக்காவில் 'டெட்ராய்டு' நகரில் உள்ளது.

அதிகாரி, ''யாரப்பா நீ.....? என்ன உதவி?' என்று கேட்டார்.

''நான் பத்திரிகை விற்கும் சிறுவன். டெட்ராய்டு நகருக்கும் ஹ்யூரன் நகருக்கும் இடையில் ஓடிக் கொண்டிருக்கும் 'கிராண்ட் டிரங்க்' ரயிலில் பத்திரிகைகளை விற்று வருகிறேன். ஹ்யூரன் ரயில் நிலையத்தில் எனக்கு ஒரு பத்திரிகை விற்பனைக் கடையும் உள்ளது. தற்போது தினமும் உங்கள் பத்திரிகையின் 300 பிரதிகளை விற்று வருகிறேன்.... இன்று எனக்கு ஆயிரம் பிரதிகள் வேண்டும், ஐயா.....'' என்றான் சிறுவன்.

''ஆயிரமா....?'' என்று திகைத்த அதிகாரி, ''திடீரென்று ஒரே நாளில் ஆயிரம் பிரதிகளை விற்க முடியுமா உன்னால்....?'' என்றார்.

''முடியும் ஐயா....'' என்றான் அந்தச் சிறுவன் மிகுந்த தன்னம்பிக்கையுடன்.

''அப்படியா? சரி... பணத்தைச் செலுத்திவிட்டு வாங்கிச் செல்......'' என்றார் அதிகாரி.

உடனே சிறுவன், ''அதற்குத்தான் உங்கள் உதவி தேவை ஐயா.... என்னிடம் கையில் முந்நூறு பிரதிகளுக்குத் தான் பணம் இருக்கிறது. அதைக் கட்டி விடுகிறேன். மீதி எழுநூறு பிரதிகளை எனக்கு நீங்கள் கடனாகத்தந்து உதவ வேண்டும்... விற்று விட்டு உடனே பணத்தைக் கொண்டு வந்து கட்டிவிடுகிறேன்....'' என்றான்.

அதிகாரி மிகவும் நல்லவர். அத்துடன் அச்சிறுவனின் துணிவும் தன்னம்பிக்கையும் அவரை மிகவும் கவர்ந்தது. எனவே, அவர் பத்திரிகையின் ஆயிரம் பிரதிகளைக் கடனாகக் கொடுத்து உதவினார்.

ஒரு சிறுவன் தன் விற்பனையை எப்படி முந்நூறிலிருந்து ஆயிரத்துக்கு திடீரென்று ஒரே நாளில் உயர்த்த முடியும் என்ற ஐயம் ஏற்படுகிறது அல்லவா? அவன் அதற்கான முன்னேற்பாடுகளை ஏற்கெனவே செய்து வைத்து விட்டுத்தான், பிரதிகளைக் கடனாகப் பெற்றுச் செல்ல வந்திருந்தான். அது என்ன ஏற்பாடு?

இந்த நிகழ்ச்சி நடந்த போது, அடிமை முறை வேண்டுமா வேண்டாமா என்ற பிரச்னை காரணமாக, அமெரிக்காவில் உள்நாட்டுப் போர் நடந்து கொண்டிருந்தது. தென் மாநிலத்தவர்கள் தொடர்ந்து அடிமை முறை இருக்க வேண்டும் என்றனர். அரசாங்கம் வட மாநிலத்தவர்களின்

ஜானகி மணாளன்

கருத்தையே கொண்டிருந்தது. எனவே தென் மாநிலங்களில் சில அமெரிக்க ஐக்கியத்திலிருந்து பிரிந்து செல்ல முயன்றன. அதைத் தடுக்க அரசு ராணுவத்தை அனுப்பியது. அவர்களும் ராணுவத்தை எதிர்த்துப் போரிட்டனர். பல இடங்களில் இரு படைகளும் மோதிக் கொண்டன. இவ்வாறு, அமெரிக்க உள்நாட்டுப் போர் உச்சக் கட்டத்தை அடைந்திருந்த நேரம் அது.



அன்றைய தினம், அதாவது, அந்தச் சிறுவன் அதிகப் பத்திரிகைகள் வாங்கிய தினம் - 1862 ஏப்ரல் 8 ஆம் நாள். பரபரப்பான ஒரு செய்தி! 'டென்னெஸ்ஸி' என்ற இடத்தில் கடும் சண்டை. ஊரெங்கும் அதே பேச்சு. மக்கள் கூட்டம் கூட்டமாக நின்று, அதைப் பற்றியே பேசிக் கொண்டிருந்தனர். டெட்ராய்டு நகரின் பத்திரிகை அலுவலகங்கள் முன்பு பெரும் கும்பல். எனக்கு உனக்கு என்று அடித்துப் பிடித்துக் கொண்டு செய்தித்தாள்களை வாங்கி, மிகுந்த ஆர்வத்துடன் படித்தனர். அதைப் பார்த்த அச்சிறுவனுக்கு திடீரென்று ஒரு எண்ணம் பளிச்சிட்டது.

அவ்வளவுதான்! அவன் அங்கிருந்து ஓட்டமும் நடையுமாகத் தந்தி அலுவலகத்துக்குச் சென்றான். ஹ்யூரன் ரயில் நிலையத்துக்கும், டெட்ரொய்டுக்கும் அதற்கும் இடையில் இருக்கும் ரயில் நிலையங்களுக்கும், போர் நிலவரம் பற்றிய சூடான செய்தியைச் சுருக்கமாகத் தெரிவித்து, அதை அப்படியே அங்கெல்லாம் உள்ள அறிவிப்புப் பலகையில் எழுதிப் போடுமாறு செய்துவிட்டான். அவ்வளவுதான். அதைப் படித்த மக்கள் மிகுந்த ஆர்வத்துடன் செய்தித்தாள் எப்போது வரும் என்று ரயில் நிலையங்களில் காத்திருக்கத் தொடங்கி விட்டனர். இப்படி நடக்கும் என்று முன்கூட்டியே கணக்கிட்டுத்தான் அந்தச் சிறுவன், 'ஃப்ரீ பிரஸ்' அலுவலகத்துக்கு ஓடி ஆயிரம் பிரதிகளைக் கடனாக வாங்கி வந்தான்!

அவன் எதிர்பார்த்தபடியே ஹ்யூரன் நிலையம் சென்று அடைவதற்குள் எல்லாப் பத்திரிகைகளும் விற்றுத் தீர்ந்து விட்டன. அன்று அவனுக்கு நல்ல லாபம்.

இப்படித் தந்திரமாகவும், புத்திசாலித்தனமாகவும் நடந்து கொண்ட அந்தத் துணிவுமிக்க சிறுவன் யார் தெரியுமா? அவன்தான் பிற்காலத்தில் மாபெரும் விஞ்ஞானியாகத் திகழ்ந்து, அரிய பல கண்டுபிடிப்புகளை நிகழ்த்திய தாமஸ் ஆல்வா எடிசன்! 1847 பிப்ரவரி 11 ஆம் நாள் பிறந்த அவனுக்கு அப்போது பதினைந்தே வயது!

எடிசன் கண்டுபிடித்த கருவிகள் ஆயிரக்கணக்கானவை. கிராமபோனைக் கண்டுபிடித்தவர் அவரே! அப்போது அதற்கு 'போனோ கிராப்' என்று பெயர். மின் விளக்கு, காஸ்லைட் போன்றவற்றை ஒழுங்குபடுத்தியவர் எடிசனே! சினிமா எனப்படும் திரைப்படத்தைக் கண்டவர் எடிசனே! அதற்கு அப்போது 'சினிடோ கிராஃப்' என்று பெயர். பிற்பாடு அதையே பேசும் படமாக்கியவரும் அவரே!

"முருகனுக்குப் பிடித்த கடிதம் எது?"

"ஏறுமயில் (AIR MAIL) லெட்டர்தான்!"

- சீர்காழி. வி. ரேவதி





செல்லப் பாப்பா - நெல்லை செல்வம் - **பக். 80 - ரூ. 10/- செல்லப் பாப்பா பதிப்பகம், 6, கஸ்தூரிபாய் நகர், 4வது தெரு, அனகாபுத்தூர், சென்னை - 600070.**

மாணவர்களிடையே தொண்டு, துணிவு இரண்டையும் வளர்க்கும் ஒரு பள்ளி, அதில் பயிலும் கால் ஊனமுற்ற மணிமாறன், அவனது அன்பைக் கவர்ந்த பண்பு நிறைந்த சிறுமி செல்லப் பாப்பா, வங்கியைக் கொள்ளையடிக்க முயன்று செல்லப் பாப்பாவால் ஏமாற்ற மடையும் கொள்ளைக்காரர்கள், அவர்களால் சிறைப்படும் செல்லப் பாப்பா, அவளைத் தேடி மீட்டு வரும் மணிமாறன் ஆகியோர்களின் சாகசங்களைக் கொண்டு நாவலை விறுவிறுப்பாக ஓட்டியிருக்கிறார் ஆசிரியர். இடையிடையே அம்பேத்கார், பாரதி, பாரதிதாசனாரின் தொண்டும், கருத்துக்களும் தூவப்பட்டுள்ளன. குழந்தைகள் விரும்பிப் படிப்பார்கள்.

புலி வளர்த்த பிள்ளை - வாண்டுமாமா **- பக். 138-ரூ 20/- வானதி பதிப்பகம், சென்னை - 17.**

குழந்தை இலக்கியத்தில் தனக்கென்று ஒரு சிறப்பான இடத்தைக் கைப்பற்றியுள்ள வாண்டுமாமாவின் விறுவிறுப்பான நாவல் இது. நியாயப்படி ஒரு இளவரசனுக்குக் கிடைத்திருக்க வேண்டிய அரச பதவியை, வஞ்சகர்கள் தங்கள் மாய தந்திரங்களால் கிடைக்காது செய்து விடுகிறார்கள். புதைபொருள் ஆராய்ச்சியாளர் ஒருவர் இதைக் கண்டுபிடித்து, மாய தந்திரங்களில் சிக்கித் தவித்து, இறுதியில் இளவரசனுக்கு அவனது அரசை மீட்டுத் தருகிறார். கதையின் நிகழ்ச்சிகளும் ஓவியர் செல்லப்பனின் நெஞ்சை அள்ளும் படங்களும் ஏதோ சினிமா படம் பார்க்கும் பிரமிப்பைத் தருகின்றன. ஒரே மூச்சில் படித்து முடிக்கத் தூண்டும் நாவல்.

இரு நண்பர்கள் - ஆர். ஆடம் சாக்ரடீஸ் **- பக். 70 - ரூ. 7.50 விற்பனை உரிமை, சங்கர் பதிப்பகம், 21, ஆசிரியர் சங்கக் குடியிருப்பு, ராஜாஜி நகர் விரிவு, வில்லிவாக்கம், சென்னை - 49.**

ஊரில் திருவிழா நடக்கும் நேரத்தில் வெளியே எடுக்கப்படும் கோவிலின் புராதன நகைகளைத் திருடவும், சர்க்கஸ் நடத்துவதன் மூலமாகக் கள்ள ரூபாய் நோட்டுகளைப் புழக்கத்தில் விடவும் திட்டம் தீட்டுகிறது ஒரு அயோக்கியக் கூட்டம். இதை அறியும் நண்பர்கள் கண்ணனும், செழியனும். பல சாகசங்களைச் செய்து, நாவலுக்கு நல்ல விறுவிறுப்பை ஊட்டி, இறுதியில் சமூக விரோதிகளைப் பிடித்து, பரிசையும் பாராட்டையும் பெறுகிறார்கள். கதை நன்றாகத்தான் இருக்கிறது. ஆனால், அயோக்கியர்களில் ஒருவனான சர்க்கஸ் கோமாளி, தங்கள் சர்க்கஸ் முதலாளியின் திட்டம் கள்ள நோட்டைப் புழக்கத்தில் விடுவதுதான் என்று கண்ணனிடமும் செழியனிடமும் வெளியிடுவது (பக்.42) கதையில் பெரிய ஓட்டையல்லவா? இந்த உண்மையைத் தாங்களே அல்லவா கண்ணனும் செழியனும் முயன்று அறிய வேண்டும்?


முட்டாள் கதைகள் III - பேராசிரியர் எ. **சோதி, பக், 76 - ரூ.7.50, நன்மொழிப் பதிப்பகம், 53, அரவிந்தர் வீதி, புதுவை - 605 001.**

ஆசிரியர் கோகுலம் வாசகர்களுக்கு ஏற்கெனவே நன்கு அறிமுகமானவர். சிரிக்க வைப்பதில் வல்லவரான இவரது 29 சிறந்த சிறுகதைகள் இதில் உள்ளன. சிரிக்கவே கூடாது என்று உறுதியெடுத்துக் கொண்டு படித்தால் கூட, கண்டிப்பாகத் தோல்விதான் கிடைக்கும். உம்மணா மூஞ்சிகளையும் கூடச் சிரிக்க வைக்கும்! மற்றவர்களும் படித்துச் சிரிக்கலாம். தரமான படைப்பு.

மதிப்புரைக்குப் புத்தகங்களை அனுப்புவோர் இரண்டு பிரதிகளை அனுப்ப வேண்டும். சிறுவர்களுக்கான நூல்கள் மட்டுமே மதிப்புரை செய்யப்படும். கட்டணம் இல்லை. அனுப்ப வேண்டிய முகவரி : ஆசிரியர், கோகுலம், ரேஸ் கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை - 32.


கண்கள்


ஆழி



ஒரு பொருளின் மீது பட்ட ஒளி, கண்களை அடைகிறது. கண்ணில், முன்புறம் உள்ள பாவை, லென்ஸ் இவற்றின் வழியாகக் கண்ணுக்குள் செல்லும் ஒளிக் கதிர்கள் விழித்திரையில் விழுகின்றன. இதனால் நரம்பணுக்களில் ஒருவித மாற்றம் ஏற்படுகிறது. இந்த மாற்றத்தைப் பார்வை நரம்பு, மூளைக்கு உணர்த்துகிறது. மூளை அப்பொருளை அறிந்து கொள்ளுகிறது. இப்படித்தான் நாம் ஒரு பொருளைப் 'பார்க்கிறோம்.'

நாம் பார்க்கும் ஒரு பொருளின் பிம்பம் நம் விழித்திரையில் தலைகீழாகத்தான் விழுகிறது. ஆனால், நம் மூளைதான் அதை நேராகப் புரிந்து கொள்ளுகிறது! இது இயற்கைப் படைப்பின் விசித்திரம்!






மனிதனின் கண்கள் ௨00 விதமான வர்ணச் சேர்க்கைகளைப் பகுத்துப் பார்க்க முடியும்!

தாயின் வயிற்றில் ஒரு குழந்தை உருவாகும் போது முதன் முதலில் அதற்குத் தோன்றும் உறுப்பு கண்களே!





ஒரு வல்லூறுவின் கண்கள், மனிதனின் கண்களைவிட, சுமார் 8 மடங்கு அதிகம் பார்க்கும் சக்தி உடையவை. அது வானத்தில் சுமார் ௫ கி.மீ. உயரத்தில் பறந்தபடி, கீழே உள்ள ஒரு சுண்டெலியைத் தெளிவாகப் பார்க்க முடியும்; மனிதனால் பார்க்க முடியாது!



உயிரினங்களில் அதிகப் பரப்பளவைப் பார்ப்பது பறவைகள்தாம்.

பறவைகளுக்குப் பார்வை கூர்மையாக இருப்பதற்குக் காரணம், அவற்றின் விழித்திரையில் சுமார் 15 லட்சம் பார்வை செல்கள் இருக்கின்றன. ஆனால், மனிதனுக்கு ௨ லட்சம் பார்வை செல்களே இருக்கின்றன!



பறவையின் கண்



வெகு தூரத்திலிருந்து ஒரு சுண்டெலியைப் பார்க்கும் போது வல்லூறுவின் கண்களுக்கு இப்படித் தெரியும்:




அதே தூரத்திலிருந்து மனிதன் பார்க்கும் போது இப்படித்தான் தெரியும்! :





பறவைகளுக்கு அவற்றின் மூளையைவிட கண்களே அளவில் பெரியவை.

பறவைகளில், நெருப்புக் கோழியின் கண்களே மிகப் பெரியவை. ஒரு டென்னிஸ் பந்தின் அளவில் இருக்கும்!



உயிரினங்களில் 'வுட் பெக்கர்' என்னும் மரங் கொத்திதான் அதிக மான பரப்பளவை— ஏறக்குறைய முழு வட்டமாகப் பார்க்கிறது. காரணம், கண்கள் அதன் தலையின் பின் பகுதியில் இருக்கின்றன.




பறவைகளில், ஆந்தையின் கண்கள் மட்டுமே மனிதனின் கண்களைப் போல் சமதளத்தில் அமைந்துள்ளன. அதன் விழிகளை உருட்ட முடியாது. பார்க்க வேண்டிய திசையை நோக்கித் தலையைத் திருப்ப வேண்டும். அது உட்கார்ந்தபடியே தன் தலையை முழுவட்டமாக பின்பக்கம் கூடத் திருப்ப முடியும். ஆந்தையினால் கும்மிருட்டில் கூட வெகு தூரத்திலும் தெளிவாகப் பார்க்க முடியும்!


மீன் கொத்திப் பறவை உயரத்தில் பறக்கும் போது இரண்டு பக்கங்களிலும் பார்க்க முடியும். ஆனால் மீனைக் கொத்த நீரில் பாயும் போது, அதன் பார்வை ஒன்றாகிவிடுகிறது!




பறவைகள் மஞ்சள், ஆரஞ்சு, சிவப்பு, நீலம், ஊதா போன்ற பல நிற பேதங்களையும் அறிந்து கொள்ளுகின்றன.



ஈ-யின் கண்களில் ஆயிரக் கணக்கான மிகச் சிறிய கண்கள் இருக்கின்றன. இதற்குக் 'கூட்டுக் கண்கள்' என்று பெயர். இதனால் தலையைத் திருப்பாமலே பக்கவாட்டிலும், பின்பக்கமும் பார்க்க முடியும்!





தேனீயின் கூட்டுக் கண்களில் சுமார் 12,000 விழி லென்சுகள் உள்ளன.



யானையின் கண்களுக்கு ஓர் உருவம் — மனிதனோ, புலியோ — உண்மையான அளவை விடப் பெரிதாகத் தெரியும் என்கிறார்கள் ஆராய்ச்சியாளர்கள்.


பச்சோந்தி, தன் உடலை அசைக்காமல், தலையைத் திருப்பாமல், தன் விழிகளை மட்டுமே திருப்பி எல்லா திசைகளிலும் — பின் பக்கம் கூட — பார்க்க முடியும்! ஒரே சமயத்தில் இரண்டு விழிகளாலும் இரண்டுவிதக் காட்சிகளைப் பார்க்க முடியும்!





வௌவாலுக்குக் கண்கள் இருந்தாலும், கண்களை மறைத்துக் கட்டிவிட்ட போதிலும், 'கேளா ஒலி அலைகளை' எழுப்பி, அவற்றின் எதிரொலிகளைச் செவிகளின் மூலம் கிரகித்துத் தடுமாறாமல் பறக்கின்றன.


ஓர் ஈயை அல்லது ஒரு சிறிய பூச்சியை எதிர்பார்த்துக் கொண்டு இருக்கும் தவளையின் விழித் திரையில் செடி கொடி முதலிய எவையும் நிலைப்பதில்லை; எதிரே உள்ள இரை மட்டுமே தெரியும்!




பூனைக்குக் கண்ணின் மணிகள் மேலும் கீழுமாக இருக்கின்றன. எனவே, பூனையால் புதர்மேல் இருக்கும் பறவையையும் தரையில் இருக்கும் சுண்டெலியையும் ஒரேசமயத்தில் தெளிவாகப் பார்க்க முடியும். ஆனால், அதற்கு வெவ்வேறு நிறங்களைப் பற்றிய பேதம் தெரியாது! அதன் கண்களுக்கு எல்லாகாட்சிகளும் கறுப்பும் வெளுப்புமாகவே தெரியும்!




மீனின் கண் அமைப்பு:






உயிரினங்களில் பறவைகளுக்கு அடுத்தபடி அதிகமான பரப்பைப் பார்ப்பது மீன்தான்!


'ஸோல்' என்னும் 'தட்டை மீனுக்குத் தலையில், பக்கத்துக்கு ஒன்று என்ற அமைப்பில் கண்கள் இல்லை. தலையில் ஒரு பக்கமாக இரண்டு கண்களும் இருக்கின்றன. மறுபக்கம் கண்களோ இல்லை. ஆனால், குஞ்சாக இருக்கும் போது, பக்கத்துக்கு ஒன்றாக அமைந்திருந்த கண்கள் நாளடைவில் இப்படி மாறி விடுகின்றன!




எந்த ஓர் உறுப்பையும் பயன்படுத்தாவிட்டால் காலப்போக்கில் அது பயன்படாமலே அதன் சக்தி அழிந்துவிடும் என்கிறார்கள் விஞ்ஞானிகள். மெக்ஸிகன் குகைமீன்கள் ஆழ்கடலில் இருட்குகைகளில் வாழ்கின்றன. இருளிலேயே இருப்பதால் அவற்றுக்குப் பார்வையே கிடையாது. கண்களும் நாளடைவில் மறைந்து விட்டன!



தென் அமெரிக்காவில் உள்ள அனாபிலப்ஸ் என்னும் மீன்களுக்கு இரண்டு ஜோடி கண்கள் இருக்கின்றன. ஒவ்வொரு கண்ணும் இரண்டு பிரிவுகளாக இருக்கிறது. இதனால் ஒரே சமயத்தில் கண்ணின் மேல்பகுதி, நீர் மட்டத்துக்கு மேல் பார்க்கும்; கீழ்ப்பகுதி நீருக்குள் பார்க்கும்!





மீன்களில் டெலஸ்கோப் மீனும் இருக்கிறது— சீனாவில்! அதன் கண்கள் டெலஸ்கோப் போன்று தொலைவில் இருப்பதையும் பார்க்க முடியும்!

மன்னர் தந்த மாலை!



மாயூரன்

அரச மண்டபத்தில் சோழ மன்னரின் எண்பேராயத்தினரின் கூட்டம் கூடியிருந்தது. மன்னரே தலைமை வகித்தார்.

''சோலையப்பரே, பிறந்தநாள் பரிசாக வந்த காணிக்கைப் பொருள்கள் மதிப்பீடு செய்யப்பட்டு விட்டனவா?'' என்று கேட்டார் சோழ மன்னர்.

''இன்னும் முடியவில்லை மன்னவா. ஏராளமான பொருள்கள் வந்து குவிந்துள்ளன. பணியாளர்கள் இரவு பகல் பாராது தொடர்ந்து அவற்றை மதிப்பீடு செய்து கொண்டிருக்கிறார்கள். பெரும்பாலும் அப்பணி இன்று முடிந்து விடும் என்று நினைக்கிறேன்,'' என்றார் கருவூல அதிகாரி சோலையப்பர்.

அறை வாசலில் நிழலாடியது. காவலன் வந்து வணங்கி, ''கருவூல துணையதிகாரி வீரதேவர் வந்திருக்கிறார்'' என்றார்.

''அரசே, வீரதேவரின் கண்காணிப்பில்தான் பரிசுப் பொருள்களை மதிப்பீடு செய்யும் பணி நடந்து வருகிறது'' என்றார் சோலையப்பர்.

''அரசே! அயல்நாட்டு மன்னர்கள் அளித்த பரிசுப் பொருள்களில் இந்தப் பெட்டியும் இருந்தது,'' என்று கூறிய தேவர் பெட்டியை சோலையப்பரிடம் அளிக்க, அவர் அதை மன்னரிடம் அளித்தார்.

மன்னர் பெட்டியைத் திறந்தார். எட்டுச் சரம் கொண்ட அழகான முத்து மாலை ஒன்று அதில் இருந்தது. நிலவே பெட்டிக்குள் அடக்கமானது போல், குளிர்ந்த ஒளி சிந்தியது மாலை! வானத்துத் தாரகைகளைக் கோர்த்தது போன்ற ஒளிச் சிதறல்!

''எத்தனை அற்புதமான மாலை!'' என்று வியந்த மன்னர் ''இதன் மதிப்பு எவ்வளவு இருக்கும்?'' என்று கேட்டார்.

''எங்களால் இதன் விலை மதிப்பை முடிவு செய்யவில்லை மன்னவா. நமது கருவூலத்தில் உள்ள விலைமதிப்பில்லாத பொருள்களில் இதுவும் இடம்பெறப் போகிறது'' என்றார் வீரதேவர்.

''விலைமதிப்பில்லாத பொருள் என்றால், அது முடிவும் முதலும் இல்லா இறைவனுக்கே சேர வேண்டியது. அடுத்த மாதம் உறையூருக்கு விஜயம் செய்யப் போகிறோம் அல்லவா...? அப்பொழுது இந்த மாலையை திருவானைக்கா ஈசனுக்குக் காணிக்கையாக்கி விடுவோம்'' என்று கூறிய மன்னர், ''தேவரே நான் என்னுடைய விருப்பத்தைக் கூறி விட்டேன். ஒருவேளை இந்த ஒளி சிந்தும் முத்து மாலையைக் கண்டதும், இதைத்தானே அணிந்து அழகு பார்க்கலாம் என்று அரசியார் விரும்பலாமல்லவா? அதனால், எனது எண்ணத்தை அரசியாரிடம் வெளியிடாது, அவர் என்ன விரும்புகிறார் என்பதை அறிந்து வாருங்கள்,'' என்று பணித்தார்.

''எவ்வளவு அற்புதமான மாலை! வானத்து விண்மீன்களையே சரமாகக் கோர்த்தது போல் ஒளி உமிழ்கின்

றனவே!'' என்று மாலையைக் கையில் வாங்கி வியந்தார் சோழமாதேவி.

''தேவரே... இதன் ம தி ப் பு எவ்வளவு இருக்கும்?''

''எங்களாலேயே முடிவு செய்ய இயலாது திணறுகிறோம் அரசியாரே.''

''விலைமதிக்க இயலாத உயர்ந்த பொருள்கள் இறைவனை அலங்கரிக்கவே பயன்பட வேண்டும் என்று உயர்ந்த கொள்கையுடையவர்கள் எம் முன்னோர்கள். இதைக் கண்டிப்பாக நான் அணிந்து அழகு காண விரும்பவில்லை. உலக நாயகனான அந்த முழு முதற் கடவுளுக்கே காணிக்கையாக்க விரும்புகிறேன். எனது விருப்பத்தை மன்னரிடம் கூற வேண்டாம். ஒரு வேளை இந்த விலைமதிக்க இயலா அற்புத மாலையைத் தான் அணிய அவர் விரும்பலாம் அல்லவா?'' என்று பயபக்தியுடன் அதைப் பெட்டியிலடக்கிக் கொடுத்தார் சோழமாதேவி!

தேவர் சிரித்துக் கொண்டார் மனதிற்குள். திருவானைக்கா ஈசனுக்கு சோழ மன்னர் அந்த விலைமதிக்க



இயலா முத்து மாலையைக் காணிக்கையாகப் போகும் செய்தி ஊரெங்கும் பரவியது. அதோடு கூடவே மன்னருக்கும் அரசியாருக்கும் இடையே இருந்த அதிசயிக்கத்தக்க மனஒற்றுமையும் தெரியவந்தது. அந்த வியப்பான மன ஒற்றுமை அறிஞர் பெருமக்களுக்கு ஒரு மாபெரும் அதிசயமாக இருந்தது.



''முத்துமாலையின் சிறப்பைக் கேள்விப்பட்டதும் அது மாமன்னரின் திருமார்பை அலங்கரிக்கப் போகிறது என எண்ணினோம். தவறினால், சோழ மாதேவியின் அழகுக்கு அழகூட்டப் போகிறது என எதிர்பார்த்தோம். ஆனால், அது ஒப்புயர்வில்லலா ஈசனுக்குக் காணிக்கையாகப் போகிறது என்பதை எதிர்பார்க்கவே இல்லை. அரசரும் அரசியாரும் போட்டி போட்டுக் கொண்டு எங்களை ஏமாற வைத்து விட்டீர்கள். அன்பிலும், கொடைத் தன்மையிலும், இறைஉணர்விலும் பாரம்பரியப் புகழ்மிக்க உங்கள் முன்னோர்களையெல்லாம் மிஞ்சி விட்டீர்கள்'' என்று அவைப் புலவர் பாடியதும் மன்னரும் சோழ மாதேவியும் ஒருவரை ஒருவர் பார்த்துப் பெருமையுடன் சிரித்துக் கொண்டனர்.

'முன்னோர்களையெல்லாம் மிஞ்சி விட்டீர்கள்!' என்று புலவர்களும் அரசு அதிகாரிகளும் சமயத் தலைவர்களும் சாதாரண மக்களும் புகழ்ந்த புகழ்ச்சிப் போதையில் சோழ மன்னரும் சோழமாதேவியாரும் தங்களை மறந்தனர். புகழ் பூத்த நமது முன்னோர்களை விட நாம் உயர்ந்து விட்டோம் என்ற ஒரு இறுமாப்பு அவர்களையறியாது அவர்களிடம் வந்து ஒட்டிக் கொண்டது! புதிதாக யாராவது ஒருவரைச் சந்தித்தால் 'ஏன் இவர்கள் நம்மைப் புகழவில்லை?' என்று எதிர்பார்க்கும் அளவுக்கு புகழ் என்னும் போதையில் அவர்கள் திளைத்திருந்தனர்.

முடிவு செய்தபடியே முத்து மாலையை திருவானைக்கா ஈசனுக்குக் காணிக்கை தர அரசனும் அரசியும் கிளம்பி உறையூர் வந்தனர். பலரும் கேட்டுக் கொண்டதன் பேரில் அந்த ஒப்பில்லாத முத்துமாலை ஆனைக்கா ஆலயத்தில் காட்சிப் பொருளாக வைக்கப்பட்டது. அதைக் காண வந்த மக்கள் கூட்டம் அலைமோதியது.



''என் பையன் ரொம்ப கறு கறுப்புங்க! நான் என்னுன்னு சொன்னால் அவன் எண்ணெய்னு சொல்லு வானே!''

''அப்படிப் பார்த்தால் என் மகன் ரொம்ப ரொம்ப கறுகறுப்புங்க. நான் என்னுன்னு சொன்னா அவன் புண்ணாக்குன்னு சொல்லுவானுங்களே!''

- க. வேங்கடேசன்

'இத்தகைய ஒரு விலையில்லா ஆபரணத்தை ஈசனுக்குக் காணிக்கை யாக்க எத்தகைய உயர்ந்த உள்ளம் இருக்க வேண்டும்! தம் முன்னோர் களைக் காட்டிலும் அரசரும் அரசி யாரும் பல மடங்கு உயர்ந்தவர்களே!' என்று மக்கள் வியந்து புகழ்ந்து பேசி யதைச் சோழ மன்னரும் சோழமா தேவியும் கேட்டுப் பெருமகிழ்ச்சி யடைந்தனர். ஏற்கெனவே இருந்த இறுமாப்பு இன்னும் அதிகமாகியது.

முத்துமாலையைக் காணிக்கை யாக்கக் குறித்திருந்த நாள் வந்தது. அன்று காலை அரசியார் பரபரப்போடு ஓடி வந்தார்.

''வைத்திருந்த அழகிய பெட்டி யோடு மாலையைக் காணவில்லை!'' என்று அரசியார் கூறிய செய்தி, மன்ன ரைத் திடுக்கிட வைத்தது.

''இறைவனுக்குக் காணிக்கையாக்க எடுத்து வந்த ஒப்பில்லாத மாலை யையா காணவில்லை!'' என்று மன்னர் கலக்கத்துடன் கேட்டார்.

''ஆம் அரசே! இது ஏதோ அப சகுனமாக எனக்குத் தோன்றுகிறது'' என்று கண்கலங்கினாள் தேவி.

''என் மூதாதையரை விட உயர்ந்த வனாகி விட்டேன் என்று எல்லோரும் புகழ்வதைக் கேட்டதும், எனக்குத் தலைக்கனம் கூடி செருக்கு ஏற்பட்டது தேவி. ஒருவேளை அந்த செருக்கு அழிய வேண்டும் என்பதற்காகத்தான் இறைவன் திருவிளையாடல் புரிகி றானோ?'' என்று விம்மினார் அரசர்.

''எனக்கும் கூட அந்தச் செருக்கு ஏற்பட்டிருந்தது அரசே. அந்தப் பாவ உணர்வுக்காகத்தான் இறைவன் இப் படித் தண்டித்து விட்டானோ'' என்று தலைகுனிந்தாள் சோழமாதேவி.

மன அமைதியை நாடி இருவரும் காவிரிக் கரைக்கு விரைந்தனர்.

''மன்னவா, காவிரிச் சோலையில் இந்தப் பெட்டி கிடந்தது'' என்று ஓர் அழகிய சிறு பெட்டியை எடுத்து வந்து காட்டினர் காவலர்கள்.

''முத்துமாலையை வைத்திருந்த அதே பெட்டிதான்!'' என்று பரபரப் படைந்தார் சோழமாதேவி.

''இதுவரை பெட்டியோடு முத்து மாலையைக் கொண்டு வந்த திருடன், மாலையை மட்டும் எடுத்துக் கொண்டு, பெட்டியை எறிந்து விட்டு, காவிரியில் நீந்திப் போயிருக்க வேண் டும்'' என்றார் அமைச்சர்.

அரசனும் அரசியும் காவிரியில் இறங்கிக் குளித்தனர். தூரத்தில் திரு வானைக்கா கோபுரம் தெரிந்தது.

''என் முன்னோர்கள் செய்யாத ஒரு செயலைச் செய்து அவர்களை மிஞ்சப் போகிறேன். நான் தரப் போகிறேன். நீ ஏற்கப் போகிறாய் என்ற இறுமாப்பில் திளைத்திருந்தேன். அது எத்தனை பெரிய முட்டாள்தனம் என்பதை எனக்கு உணர்த்தி விட்டாய். உனக்கு நான் கொடுப்பதாவது? உனக்கு விருப்பமில்லாது; நீ விரும்பாது எதை யாவது நான் உனக்குத் தந்து விட முடி யுமா? மனப்பூர்வமாக நாங்கள் உனக்கு அதைக் காணிக்கையாக்க எண் ணியது உண்மை. ஆனால், அதன் காரணமாக ஏற்பட்ட செருக்கு இப் பொழுது அழிந்து விட்டது. அது உனக்

காகக் கொண்டு வந்த மாலை. செருக்கு அழிந்த உள்ளத்தோடு இப்பொழுது வேண்டுகிறோம். அ தை ஏற்றுக் கொள். எங்கிருந்தாலும் அதை வர வழைத்து ஏற்றுக் கொள்'' என்று உள்ளம் உருக ஈசனை வேண்டிக் கொண்டு நீராடினார் மன்னர்.

அன்று மாலை, அரசியோடு மன்னர் திருவானைக்கா ஆலயம் வந்தார். ஈசனுக்கு அபிஷேகம் செய்யத் தொடங்கினார்கள். மாலையை ஈசனுக்குக் காணிக்கை தர முடிவாகியிருந்த நேரம் அதுதான்.

மன்னராலும் தேவியாலும் துக்கத்தை அடக்கிக் கொள்ள முடியவில்லை.

ஆலயமணிகள் முழங்கின. இன்னிசை எழுந்தது. ஓதுவார்கள் பண்ணிசைக்க, வேத கோஷம் எழுந்தது. தலைமை சிவாச்சாரியார் வெள்ளிக் குடத்தில் எடுத்து வந்திருந்த காவிரி நீரை ஈசனுக்கு அபிஷேகம் செய்தார்.

அப்பொழுது அங்கே ஒரு அதிசயம் நிகழ்ந்தது. குடத்தின் புனித நீரோடு, ஒரு முத்துமாலையும் வெளியே வந்து ஈசனின் திருமேனியில் விழுந்து ஒளிர்ந்தது!

சோதித்தனர். சந்தேகமே இல்லை! அது ஈசனுக்குக் காணிக்கையாக்க எடுத்து வரப்பட்டு திருட்டுப் போன அதே ஒளிசிந்திய முத்துமாலைதான்!

''திருடன் முத்துமாலையை இடுப்பில் கட்டிக் கொண்டு காவிரியைக் கடக்க முயன்றிருக்க வேண்டும். என்ன காரணமோ மாலை அவிழ்ந்து நீரில் விழுந்து அபிஷேக நீர் மொள்ள நடு ஆற்றுக்குச் சென்ற சிவாச்சாரியார் குடத்தில் அது புகுந்து கொண்டு ஈசனிடமே திரும்பி வந்திருக்கிறது!'' என்று விளக்கினார் அமைச்சர்.

''என் இறுமாப்பு அழிந்தது. நான் உனக்குக் காணிக்கை தர எண்ணினேன். நீ திருவுளம் வைத்து என் இறுமாப்பை அழித்து ஏற்றுக் கொண்டாய்!'' என்று கரங்கூப்பி வணங்கினார் அரசர். சோழ மாதேவி கண்ணீர் சிந்தினாள். அது பக்திப் பரவசக் கண்ணீர்!



★ பிரான்ஸ் நாட்டில் பான்டெஸ் டோம்ப் என்ற இடத்திலுள்ள குகையில் உள்ள நீர் ஊற்றில், முப்பத்தாறு நிமிஷம் முப்பத்தாறு செகண்டுக்கு தொடர்ந்து வரும் நீர் அடுத்த செகண்டுலே நின்னு போகும். அப்புறம், சரியாக முப்பத்திரண்டு நிமிஷம் முப்பது செகண்டுக்கு நீர் வராது!

மீண்டும் முப்பத்தாறு நிமிஷம் முப்பத்தாறு செகண்டுக்கு நீர் வரும். முப்பத்திரண்டு நிமிஷம் முப்பது செகண்டுக்கு நீர் நின்று விடும்!

இப்படியே ஆண்டாண்டு காலமாக இந்த நீர் ஊற்றில் நீர் வந்து கொண்டும் நின்று கொண்டும் இருக்கிறது! கடிகாரங்களே இந்தக் காலத்தில் மாறும் போது, இயற்கையின் இந்த மாற்றமில்லாத செயல் அதிசயமானதுதானே?''

- எஸ். கண்மணி, குரும்பட்டி.



★ வேறு எந்தப் பறவைகளுக்கும் இல்லாத ஆற்றல்மிகு இறக்கை ஆந்தைகளுக்கு மட்டும் உள்ளது. இது எவ்வளவு வேகமாகப் பறந்தாலும் கொஞ்சம் கூட சப்தம் எழுப்பாது. இதனால் எளிதாகத் தன் இரையை லாவகமாக பிடித்து உண்ணும். இது போன்று எந்தப்பறவைகளுக்கும் இறகு அமைப்பு கிடையாது.

- ஆறுபாதி புகழேந்தி,
மயிலாடுதுறை.

பிருந்தாவனக்



குட்பை!

அக்கம் பக்கம் குப்பை
அள்ளிக் கொட்டும் தப்பை
மக்கள் நாமும் உணர்ந்து
முடித்து வைப்போம் இன்றே!

குப்பை எல்லாம் ஒழுங்காய்
கூட்டிக் குவிப்போம் ஒன்றாய்.
குப்பைத் தொட்டி தேடி
கொட்டி விடுவோம் இனிமேல்.

குப்பை கூளம் ஒழிந்தால்
கொசுவும் கூட ஒழியும்.
இப்பச் செய்யும் பழக்கம்
இனிய வாழ்வின் துவக்கம்.

குப்பையே உனக்குக் குட்பை!
கொசுவே உனக்குக் குட்பை!
எப்பவும் உமக்குக் குட்பை!
என்றும் செய்யேன் தப்பை!

- எம். சரோஜா.

பெண்கள் ஆண்டு!

திருவிழாவாம் திருவிழா!
திகைக்க வைக்கும் திருவிழா!
பெருமை சேர்க்கும் திருவிழா!
பெண்கள் ஆண்டாம் திருவிழா!

கியூரி அம்மை தெரசாவும்
கண்ணகி இந்திரா ஜான்சியும்
செய்த சாதனை பட்டியல்
சொல்லி ஊக்கம் கொள்ளுவோம்!

அரசியல் இலக்கியம் போர்க்கலையும்
அறிவியல் அத்தனை துறைகளிலும்
தரணி வியக்க பெண்களும்
தனித்த திறமை காட்டிடுவோம்!

அன்பு வழியில் நின்றாலும்
அறியாமை அச்சம் விலக்கிடுவோம்!
பெண்கள் என்று இகழ்வோரை
பாடம் புகட்டி மாற்றிடுவோம்!

- வா.மா. விஜயலக்ஷ்மி



கவியரங்கம்!



கேளுங்க!

எந்தன் பேரு சிந்துங்க
எங்கப்பா பேரு நந்துங்க
எந்தன் அண்ணன் குண்டுங்க
எந்தன் அக்கா இந்துங்க.

வந்து பார்த்தால் தெரியுங்க
வாசல் சிறிசு குனியுங்க.
சிந்தை மறந்தால் போச்சுங்க
சிதறும் நெற்றிப் பொட்டுங்க!

அண்ணன் சுத்த முசுடுங்க
அடிக்கு முன்னே ஓடுங்க!
சொன்னால் இதைக் கேளுங்க
சொல்லி விட்டேன் பாருங்க!

- ர. அலமேலு

தமிழ்நாடு

இனிய தமிழ் நாடு
இதற்கு இல்லை ஈடு!
இனிக்க இதனைப் பாடு
இதற்கு ஒன்றாய்க் கூடு!

வள்ளுவர் பாரதி கம்பர்
வாழ்ந்த புண்ணிய பூமி
எல்லை இல்லா அறிஞர்
இதற்குப் பொலிவைத் தந்தார்.

வானை முட்டும் மலைகள்
வழிந்து வரும் நதிகள்
விண்ணைத் தொடும் கோவில்
வியக்க வைக்கும் காண்பீர்!

- வி. வெங்கடேஷ்.



தஞ்சாவூருப் பொம்மை



தலையைத் தலையை ஆட்டிடும்
தலையை ஆட்டிப் பொம்மை!
தரையில் வைத்தால் எழுந்திடும்
தஞ்சா ஊருப் பொம்மை!
தட்டி விட்டால் நிமிர்ந்திடும்
தஞ்சா ஊருப் பொம்மை!
வெட்டி வெட்டி ஆடிடும்
தலையை ஆட்டிப் பொம்மை!
பருத்த உடல் பானை வயிறு
தஞ்சா ஊருப் பொம்மை!
ஜரிகை மடிப்பு சிரிக்க வைக்கும்
தலையை ஆட்டிப் பொம்மை!
அறிவுத் திறன் அடங்கியிருக்கும்
தஞ்சா ஊருப் பொம்மை!
தரணி எங்கும் புகழ் பரப்பும்
தலையை ஆட்டிப் பொம்மை!

- எஸ். ஸ்ரீராம்

குதிரை பாருங்க.....!



குதிரை குட்டை தானுங்க
குதிச்சு ஓடும் பாருங்க.
எதிரே வந்தால் போச்சுங்க
எங்கே போகணும் சொல்லுங்க.

கொள்ளைக் கொஞ்சம் காட்டுங்க
கணத்தில் பணியும் பாருங்க!
மெள்ள மெள்ள நெருங்குங்க
மெதுவாக் கொள்ளைத் தின்னுங்க.

சவுக்கைக் கொஞ்சம் சொடுக்குங்க
சண்டித் தனமும் ஒடுங்குங்க
பாவம் பார்த்தால் போச்சுங்க
பறந்து ஓடும் பாருங்க!

- சி. ஜெயசந்திரன்.

காகம்!



காகம் நல்ல காகம்
கறுப்பு நிறக் காகம்
காகா என்றே கரையும்
களத்து மேட்டில் அமரும்

யாரும் இல்லை என்றால்
அருகே வந்து பார்க்கும்
சோற்றுப் பானை திறக்கும்
சுற்றும் முற்றும் பார்க்கும்.

உண்ண உணவு கிடைத்தால்
உடனே கத்திக் கரையும்
சுற்றத் தாரை அழைக்கும்
சொகுசாய் கொத்தி உண்ணும்.

நாமும்! காக்கை போல
நாளும் கூடி வாழ்வோம்!
சேமத் தோடு வாழ
சிறந்த வழி இதுவே!

- ஆர். முகமத் மியான்தாத்





மறவாதே!

துன்பம் கண்டு துவளாதே
துவண்டு நீயும் தூங்காதே
இன்பம் எனக்கு இல்லையென
இனியும் வீணில் கலங்காதே

காலும் கையும் இருக்கும்வரை
கவலை என்பது நமக்கில்லை.
நாளும் நன்கு உழைத்திட்டால்
நன்கு உயரலாம் மறவாதே!

ஒழுங்காய் கடமைகள் செய்திடுவாய்
ஒவ்வாத பழக்கம் கைவிடுவாய்.
உழைப்பால் எதையும் சாதிக்கலாம்
உண்மை இதுவே மறவாதே!

- பி.கே. நித்யகல்யாணி



காற்றாடி

வானில் பறக்கும் காற்றாடி
வண்ண வண்ணக் காற்றாடி
விண்ணைக் கிழிக்கும் காற்றாடி
விந்தை மிக்க காற்றாடி.

கரணம் போட்டிடும் காற்றாடி
கண்ணைச் சிமிட்டும் காற்றாடி
சுறுசுறுப் புடனே நூல்கண்டை
சுத்தமாய் இழுக்கும் காற்றாடி

போட்டிக்கு அழைக்கும் காற்றாடி
பிள்ளைகள் விரும்பும் காற்றாடி
விட்டால் நழுவிடும் காற்றாடி
விண்ணில் மறைந்திடும் காற்றாடி.

வயது வரம்பு இல்லாது
வியக்க வைப்பது காற்றாடி
தயக்கம் இன்றி அனைவரையும்
துரத்திட வைப்பது காற்றாடி.

- எல். பத்மாவதி



உப்போ உப்பு!

உப்பு உப்பு உப்பு
உணவு சுவைக்க உப்பு
உப்புக்காக காந்தி
உரிமைக் குரல் தந்தார்


அரசன் ஆண்டி யார்க்கும்
ஒன்றுபோலக் கரிக்கும்.

வரம்பு மீறி உண்டால்
வருந்த வைக்கும் உப்பு

கடலில் உள்ள நீரில்
கலந்து வாழும் உப்பு
வடிந்த பாத்திக் குழியில்
விளைந்து சிரிக்கும் உப்பு

உரங்கள் மருந்து செய்ய
உதவி செய்யும் உப்பு
பெருமை எல்லாம் கூறிப்
போற்றி செய்ய வாரீர்.

- இரா. செல்லதுரை



மின்மினி ஒளிர்வது ஏன்?

விளக்கை நிறுத்தி, கதவுகளையும் மூடி இருட்டாக்கிவிட்டு கண்ணாடிப் புட்டியை உற்றுப் பார்த்தான் முத்து. புட்டிக்குள் அடைபட்டுக் கிடந்த மின்மினிகள் புட்டியின் கண்ணாடிச் சுவரில் ஒட்டி மெல்லப் பறந்தன. முதுகின் மேல் இருந்த மெல்லிய சிறகுகள் விரிய, கீழேயிருந்த அசையாச் சிறகுகளுக்குப் பின்னால் இருந்த நுனிப் பகுதியில் இருந்து 'பளிச்' 'பளிச்' என்று ஒளி பிறந்தது! அந்த இருட்டறைக்குள் ஆரஞ்சு வண்ண 'மினுக்' 'மினுக்' ஒளி கண்கொள்ளாக் காட்சியாக, மனதுக்கு மகிழ்வூட்டுவதாக இருந்தது.

முத்து மகிழ்ச்சி மிகுதியில் புட்டியைக் கையில் எடுத்தான். அவ்வளவு தான்! ஒளிர்வது நின்று விட்டது!

கதவுகளைத் திறந்து, விளக்கைப் போட்டு, மகிழ்ச்சியோடு ''மல்லி, மல்லி!'' என்று தங்கையை அழைத்தான். மல்லி ஓடி வந்தாள். அவள் கையிலும் ஒரு புட்டி. அதிலும் நாலைந்து மின்மினிகள்!

''புட்டியை இருட்டான இடத்தில் வைத்துத் தொடாமல் இருந்தால் ஒளிர்கின்றன! நான் கண்டுபிடித்து விட்டேன். நீ வேண்டுமானால் பரிசோதனை செய்து பார்!'' என்றான் முத்து.

''இங்கயே பார்க்கலாம்'' என்றாள் மல்லி.

தங்கையின் புட்டியையும் வாங்கி, தன் புட்டிக்கு அருகே வைத்த முத்து, கதவுகளை மூடி, விளக்கை அணைத்து இருட்டாக்கினான். இருவரும் புட்டிகளுக்கு அருகே வந்து உட்கார்ந்து ஆவலுடன் அதையே நோக்கினர். பலமாகக் கூட மூச்சு விடவில்லை!

அவர்களது பொறுமையைச் சோதிக்கும்படி சிறிது நேரம் பொறுத்து இரண்டு புட்டிகளிலும் இருந்த மின்மினிகள் புட்டிக்குள்ளேயே பறந்து ஒளி சிந்தின! அற்புதமான இந்தக் காட்சியை அவர்கள் இருவரையும் தவிர, இன்னொருவரும் அந்த இருட்டில் இருந்து பார்த்து ரசித்துக் கொண்டிருந்தார். அது வேறு யாரும் இல்லை. அவர்கள் வீட்டு 'மியாவ்'தான்!

பாட்டில்களில் அடைபட்டுக் கிடந்த மின்மினிகள் ஒளிரத் தொடங்கியதும், பூனை பரபரப்படைந்தது. தனக்கு வேண்டிய இரை ஏதோ அங்கு இருக்கிறது என்று எண்ணிய பூனை, புட்டிகளை நோக்கித் தாவியது. இரண்டு புட்டிகளும் கீழே விழுந்து உடைந்து சிதறின! அடைபட்டுக் கிடந்த மின்மினிகளுக்கு விடுதலை! நொடியில் அவை 'வெண்டிலேட்டர்' வழியாகத் தோட்டத்திற்குள் மறைந்தன! மியாவுக்கு சரியான அடி!

''சரியான பிசாசுப் பசங்க! நாம்ப

ரேவதி



ஒளிர்வதை எல்லாக் குழந்தைகளும் தான் பார்த்து மகிழ்ச்சியடைவாங்க. ஆனால் இப்படியா/ வலை போட்டுப் புடிச்சு, கண்ணாடிக் குப்பியில் அடைச்சுத் திணறவைப்பாங்க?'' என்று திட்டியது விடுதலை பெற்ற மின்மினிகளில் ஒன்று.

''நல்லாச் சொன்னே! இந்தத் தங்க அரளிச் செடி மகரந்தத்துக்காக நான் இங்கே வந்து இவங்க கிட்டே சிக்கிக்கிட்டேன். இரண்டு நாள் பாட்டில் சிறைவாசம். ஏதோ ஆண்டுக் கணக்கில் சிறையில் இருந்த மாதிரி இருந்தது'' என்றது மூத்த மின்மினி.

''நம்ம நிலை எத்தனையோ தேவலை. நாம் சிக்கிக்கிறத்துக்கு முந்தின நாள் என்னவாச்சு தெரியுமா? அந்தப் பொண்ணு ஓட்டையில்லாத மூடியைப் போட்டு மூடிடுத்து! மூச்சு விட முடியாம தவிச்சு நம்ப ஆளுங்கள்ல இரண்டொருத்தர் போயிட்டாங்க. அப்புறம் அவங்க அண்ணன் வந்து பார்த்து மூடியில ஓட்டை போடச் சொன்னான். அதுனால நாம புழைச்சிக்கிட்டோம்'' என்றது இன்னொரு மின்மினி.

பேசாமல் மினுக்கிய மூத்த மின்மினி, விடுதலை பெற்றுப் பறந்து கொண்டிருந்த புதிய மின் மினியிடம் கேட்டது:

''என்ன தம்பி? உன்னை எங்கே புடிச்சாங்க?''

''நானு கல்யாணம் செஞ்சுக்க பொண்ணு தேடி மினுக்கிக்கிட்டு வந்தே



ணுங்க. இந்தத் தங்க அரளிச் செடியின் மகரந்தம் மனசை இழுத்துதுங்க. வந்தேன். இந்தப் பொண்ணு போட்ட வலையில் சிக்கி, புட்டிச் சிறை வாசம் அனுபவிச்சேனுங்க. இந்த வரை அந்தப் பூனைக்கு நாம்ப நன்றி சொல்லணுங்க. அது தாவி, புட்டி உடையாட்டி நமக்கு ஏதுங்க விடுதலை?'' என்று பதில் கூறிய அந்த மின்மினி, ''ஏங்க? எனக்கு ஏத்த மாதிரி இங்கே பொண்ணு ஏதாவது கிடைக்குமாங்க?'' என்று மூத்த மின்மினியிடம் கேட்டது.

''தம்பி, நாங்களெல்லாம் நொடிக்கி இரண்டு தடவை மினுக்கிற வகை. நீ நொடிக்கி ஒரு தடவை மினுக்கிற வகை. உன் வகை இனம், இங்கே யாருமில்லே. இப்படியே போனால், ஒரு சாமந்தித் தோட்டம் வரும். அங்கே உன் மாதிரியே நொடிக்கி ஒரு தடவை மினுக்கிற வகை மின்மினிப் புழுப் பெண்கள் நிறைய இருக்கு. மினுக்கிக்கிட்டே போனால் அவங்களே உன்னை அடையாளம் கண்டு வரவேற்பாங்க. ஒளிமயமான வாழ்க்கையை நடத்த எனது வாழ்த்துகள்!'' என்று அந்த மின்மினியை அனுப்பி வைத்தது மூத்த மின்மினி.

அது சென்றதும் தங்க அரளிச் செடியை அதன் மகரந்தத்துக்காக எல்லாம் முற்றுகையிட்டு மினுக்கின. நொடிக்கு இரண்டு மினுக்கல்கள்!

''ஐயோ! பூனைங்க!'' என்று பரிதாபமாகப் பீதியுடன் குரல் கொடுத்து நடுங்கியது ஒரு சின்ன மின்மினி.

''தா! ஏன் இப்படி அலறிக் கூச்சல் போடறே? பூனை என்ன... யானையே வந்தால் கூட நாம்ப பயப்படத் தேவையே இல்லை. பாட்டில்ல ரெண்டு நாள் அடைஞ்சு கிடந்த பயம் உனக்கு இன்னும் தெளியலே. நான் என்ன பண்றேங்கறதைப் பாரு. என்னோடு கூடவே நீங்க எல்லோரும் அதே மாதிரிப் பண்ணுங்க. பூனையார் எப்படி மிரண்டு ஓடப் போறார் என்பதையும் பாருங்க!'' என்று தைரியம் கூறிய மூத்த மின்மினி, ஒளி சிந்திக் கொண்டே பூனையின் முகத்தைச் சுற்றிச் சுற்றி வந்தது. மற்ற மின்மினிகளும் அதையே செய்தன! பிறகு சற்று உயரப் பறந்து அம்பு போல் 'சர்'ரென்று பறந்து ஒளி சிந்தி வந்தன! பூனை மிரண்டு ஓட்டம் பிடித்தது!

திடீரென்று காட்டரளிச் செடியில் ஒரு மினுமினுப்புத் தோன்றியது! அதுவும் நொடிக்கு இரண்டு முறை ஒளி சிந்தி மினுக்கிக் கொண்டிருந்தது ஒரு மின்மினிப் புழு! ஆமாம், அதுதான் மின்மினிப் பெண்மணி!

மூத்த மின்மினி அங்கே பறந்து ஓடியது.

''அட! நீ இங்கேயா இருக்கே!''

''இங்கே இல்லாம எங்க போவேன்? இப்பவெல்லாம் நான் மினுக்கறதே இல்லை. எங்கே வலை போட்டுப் புடுச்சிக்கிட்டுப் போய்டு வாங்களோன்னு பயமாவே இருக்கு.

வலையில் சிக்கிக்கிட்ட நீ என்ன பாடு படறியோன்னு நான் தவிச்சுக்கிட்டிருக்கேன். நீயானா, இப்படி என் நினைவே இல்லாம சுத்திக்கிட்டிருக்கே!'' என்று குற்றம் சாட்டியது மின்மினிப்புழு.

மனைவியிடம் மன்னிப்புக் கேட்ட மூத்த மின்மினி நடந்த கதையைக் கூறியது. இரண்டும் மகிழ்ச்சியோடு தங்க அரளிச் செடியில் ஒளிசிந்தின. மகிழ்ச்சி அதிக நேரம் நிடிக்கவில்லை. முத்து போட்ட கைப்பிடி வலையில்



இரு கை சாதனையாளர்கள்

★ அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த ஜேம்ஸ் ஏ. கார்ஃபீல்டு ஒரு கையால் லத்தீன் மொழியால் எழுதிக் கொண்டே மற்றொரு கையால் கிரேக்க மொழியில் எழுதக்கூடியவராம். அதேபோல் மோனோலிசா ஓவியம் தீட்டிய 'லியோனார்ட்டோ-டா-வின்சியும்' ஒரு கையால் ஓவியம் தீட்டிக் கொண்டே இன்னொரு கையால் எழுதக் கூடியவராம்.

- தக்கோலம், அ. முஸ்தபா.

இரண்டும் வகையாகச் சிக்கிக் கொண்டன!

மின்மினிப் புழு பயந்து நடுங்கியது.

''ஏன் பயப்படறே? நம்மை ஒரு ஓட்டை போட்ட மூடி உடைய புட்டியில் போட்டு அடைப்பாங்க. அவங்களுக்கு 'மின்மினி'ன்னாலே பூச்சி என்ற நினைப்புதான். ஆண் மின்மினிதான் பூச்சி. பெண் மின்மினி புழுதான் என்ற உண்மையே அவர்களுக்குத் தெரியாது. அதனால், உன்னைப் பார்த்ததும் வெளியே எடுத்துப் போட்டுடுவாங்க. அதனால் உடனே உனக்கு விடுதலை கிடைத்து விடும். ஆனால் ஒன்று, அது வரை நீ மினுமினுக்காமல் இருக்கணும். மறந்து போய் எங்கேயாவது மினுக்கி வைச்சே, அப்புறம் என்னவாகும்னு சொல்ல முடியாது'' என்று தைரியமூட்டி, தப்பிக்க வழியும் சொல்லிக் கொடுத்தது மூத்த மின்மினி.

''ஆமாம்... உங்க கதி....?''

''நானும் அவங்க என்ன செஞ்சாலும் பொறுமையா மினுமினுக்காம இருப்பேன். இது மின்மினி இல்லே போலிருக்குன்னு அவங்க வெளியே தள்ளிடுவாங்க. விடுதலை கிடைச்சுடும்,'' என்று நம்பிக்கையோடு கூறியது மூத்த மின்மினி.

அறிவியல் உண்மைகள்

★ மின்மினிகளில் பல இனங்கள் உண்டு. பெரும்பாலான வகைகளில் ஆண் மட்டுமே பூச்சி வடிவில் இருக்கும். பெண்ணுக்குச் சிறகுகள் இருக்காது. புழு வடிவில் இருக்கும்.

★ ஆண் பூச்சியை விட, பெண் புழுவுக்கே அதிக ஒளிதரும் ஆற்றல் உண்டு. இவற்றைப் பொதுவாக Glow Worms என்று புழுவின் பெயராலேயே குறிப்பிடுகிறார்கள்.

★ ஒளி, சிவப்புக் கலந்ததாகவோ, பச்சை கலந்த நீலநிறமாகவோ இருக்கும். வால் பக்கத்தில் உள்ள அடிப்பகுதியே ஒளிரும். இந்த அடிப் பகுதியில் உள்ள ஒளிவிடும் அணுக்கள், இவை மூச்சுவிடுகையில் பிராணவாயுவோடு கலந்து விடுவதன் விளைவே ஒளியாக வெளிப்படுகிறது. ஆனால், இந்த ஒளியில் வெப்பம் இருக்காது.

★ ஒவ்வொரு குறிப்பிட்ட வகையும் ஒரு குறிப்பிட்ட அளவு இடைவெளி கொடுத்து ஒளிரும். இதன் மூலம் தான் சார்ந்துள்ள வகையை இவை மற்ற பூச்சிகளுக்கு அறிவித்து, பெண் தேடிக் கொள்கின்றன!

★ இந்த ஒளிரும் தன்மை பகைவர்களைப் பயப்படுத்தி விரட்டவும் பயன்படுகிறது!

★ இவற்றின் உணவு மகரந்தம் மட்டுமே!

கலை • கல்வி எதற்கு?

மங்கோலியக் கதை

தமிழில் : தம்பி சீனிவாசன்

மங்கோலியாவின் பரந்த புல்வெளி கிராமங்களில் ஒரு கிராமம். இரண்டு சிறுவர்கள் நல்ல நண்பர்களாக இருந்தார்கள். தோகன் நல்ல உழைப்பாளி. ஏழை நெசவாளியின் பிள்ளை. மற்ற வன் பெயர் பென்போ. வசதிபடைத்த வீட்டுப் பிள்ளை.

ஏழை நெசவாளி ஒருநாள் தன் மகட ; தோகனை அழைத்து, ''மகனே, இங்கேயே இந்தக் கிராமத்தில் இருந்து கொண்டே எத்தனை நாள் சிரமப் படுவது? நீயாவது நகரத்துக்குப் போ. அங்கே படிக்கக் கற்றுக் கொள். எனக்குத்தான் படிக்கும் வாய்ப்புக் கிடைக்கவில்லை. உனக்காவது கிடைக்கட்டுமே? படிப்புடன் கூடவே ஏதாவது வித்தையும் தெரிந்து கொள். உழைத்துப் பிழைத்து முன்னுக்கு வரலாம்,'' என்றார்.

பட்டணம் போகப் போகிறேன்
படிக்கக் கற்கப் போகிறேன்!
புல்லாங் குழல் ஊதுவேன்!
சதுரங்கம் ஆடுவேன்!

என்று உற்சாகத்துடன் பாடிக் கொண்டே தோகன் தனது நண்பன் பென்போவைப் பார்க்கப் போனான்.



''நீயும் என்னுடன் வாயேன். இருவருமாகப் பட்டணம் போகலாம். இரண்டு பேரும் சேர்ந்து படிக்கலாம். புல்லாங்குழல் கற்கலாம். சதுரங்கம் ஆடத் தெரிந்து கொள்ளலாம்'' என்று நண்பனையும் அழைத்தான் தோகன்.

''எனக்கு எதற்குப் படிப்பு? அதைக் கொண்டு நான் என்ன பயனடைய முடியும்? புல்லாங்குழல் இசைப்பதும் சதுரங்கம் ஆடுவதும் பெரிய சாதனைகளா? என் அப்பா படித்தாரா என்ன? நிலமும் பண்ணையும் ஏராளமான ஆடுகளும் இருக்கும் போது படிப்பு எதற்கு? மற்றவை தான் எதற்கு?'' என்று உறுதியாக மறுத்து விட்டான் பென்போ.

தோகன் எல்லாரிடமும் விடை பெற்றுக் கொண்டு பட்டணத்தைப் பார்க்கப் போனான். இயற்கையிலேயே நல்ல உழைப்பாளியான அவன் அங்கே பொழுதை வீணாக்காமல் கவனமாகப் படித்தான். எழுதப் படிக்கக் கற்றுக் கொண்டதோடு புல்லாங்குழல் வாசிக்கவும் பழகினான். சதுரங்க ஆட்டம் ஆடுவதிலும் திறமைசாலியானான்.

சில ஆண்டுகள் கழிந்தன. சொந்த ஊருக்குப் போகக் கிளம்பினான் தோகன். வந்து பார்த்தால் ஊரில் எத்தனையோ மாறுதல்கள்! அவன் அப்பா காலமாகி விட்டிருந்தார். தெரிந்தால் கவலைப்படுவானே என்று அவனுக்குச் செய்தி கூட அனுப்பாமல் இருந்து விட்டனர்! அன்புத் தோழன் பென்போவைப் பார்க்கப் போனான் தோகன்.

திடீரென்று கிராமத்தில் பரபரப்பு! எல்லோர் முகத்திலும் பீதி நிறைந்தது. மங்கோலிய முரட்டுக் கொள்ளையர் கூட்டம் ஒன்று கிராமத்துக்குள் வந்தது. கிராம மக்கள் எல்லாரையும் பணிய வைத்தது. உருவிய கத்தியுடன் கொள்ளையர் கூட்டம் திரிய, உள்ளூர் கிராமவாசிகள் தரையிலே குனிந்து மண்டியிட்டு அவர்களுடைய கருணைக்காகக் கெஞ்சிக் கொண்டிருந்தனர்!

பென்போவைப் பார்க்கப் போன தோகனை, நண்பனோடு மடக்கினர் கொள்ளையர்கள். தோகன் அஞ்சவில்லை. தைரியமாக கொள்ளையர் தலைவனிடம் போய், ''என்னையும், நண்பன் பென்போவையும் விட்டு விடுங்கள். எங்கள் வழியே நாங்கள் போய் விடுகிறோம்'' என்று கேட்டான் துணிவுடன்.

கொள்ளையர் தலைவனுக்கு தோகனின் துணிவு மிக்க கோரிக்கை பிடித்திருந்தது. ஆனாலும், அவனுடைய வேண்டுகோளை ஏற்க அவன் தயாராக இல்லை.

''என்னடா தம்பி! இத்தனை மக்கள் எங்களிடம் சிக்கித் திண்டாடித் தவிக்கும் போது, ஏன் உன்னையும் உன் நண்பனையும் மட்டும் நான் விடுவிக்க வேண்டும்? நீங்கள் இவர்களை விட எந்தவிதத்தில் ஒசத்தி? கொள்ளைக்காரனுக்குத் தெரியாத வித்தை ஏதாவது உனக்குத் தெரியுமா?'' என்று பரிகாசமாகக் கேட்டான் கொள்ளையன்.

''நான் அருமையாகக் குழல் ஊதுவேன். நான் குழல் இசைத்தால் உங்களையே மெய்மறக்க வைப்பேன்'' என்று சொன்ன தோகன் தன் இடுப்பில் செருகியிருந்த புல்லாங்குழலை எடுத்து இசைக்கலானான். இனிய இசை வெள்ளம் பொங்கியது. சுற்றிலும் நின்று கொண்டிருந்த கொள்ளையர்கள், அவர்களுக்கு அடிமைப்பட்டு உயிரைக் காத்துக் கொள்ளத் தயாராக இருந்த கிராம மக்கள், ஏன் சுற்றிலும் இருந்த மரங்கள், அதில் வசித்த

''பல் இருந்தும் கடிக்காதது எது?''
''சீப்பு.''

- ஆர். மகாதேவன்,
திருநெல்வேலி - 6.





பறவை இனங்கள், வீசிய காற்று எல்லாவற்றையும் புல்லாங்குழலில் இருந்து பிறந்த இசை வெள்ளம் ஆழ்த்தி, மெய்மறக்க வைத்தது! கொள்ளையரின் இறுகிய கல் மனங்கள் கூடக் கனிந்து கொடுத்தன! தன்னையறியாது கொள்ளையர் தலைவனின் முகத்திலே புன்னகை பூக்கத் தொடங்கியது! அது இதுவரை அவன் அனுபவித்தறியாத ஒரு இனிய உணர்வு!

நெடுநேரம் தொடர்ந்து குழல் இசைத்த பின்னர் தோகன் நிறுத்தினான். கொள்ளையர் தலைவன் அவன் அருகே வந்து அவன் தோள்களைத் தட்டிக் கொடுத்து, ''நீ என்ன வாசித்து விடப் போகிறாய் என்று அலட்சியமாக இருந்தேன். நீ என்னையே உருக வைத்து விட்டாய்! உன் இசை அற்புதமானது. இவ்வளவு அற்புதமான இசைக் கலைஞனான நீ எங்களிடம் அடிமையாக இருக்கத் தோன்றியவன் அல்ல. உனக்கு மட்டும் விடுதலை. நாளை காலை உன் வழியே போய் விடு! என் ஆட்கள் யாரும் உன்னைத் தடுக்க மாட்டார்கள்'' என்றான்.

''ஐயா, என் நண்பன் பென்போ?''

''அவனுக்கு என்ன வித்தை தெரியும்? நீ குழல் ஊதியது போல அவனுக்கு ஏதாவது தெரியுமா? அறபுதக் கலைகள் ஒன்றாவது அவனுக்குத் தெரியுமா?'' என்று கொள்ளையர் தலைவன் கேட்டான்.

பென்போ திருதிரு என்று முழித்தான். நகரத்திற்கு படிக்கப் போன போது நண்பன் விடுத்த அழைப்பை மறுத்தது அவன் நினைவுக்கு வந்தது. இப்பொழுது உணர்ந்து என்ன செய்வது? தனக்கு ஒரு வித்தையும் தெரியாது என்பதை ஒப்புக் கொண்டான்.

''அப்படியானால் நீ எங்களிடம் அடிமையாக இருக்க முற்றிலும் தகுதி உள்ளவன். எங்களுடனே இருந்து விடு. வேறு எதற்கும் லாயக்கு இல்லாதவன் எல்லாம் கொள்ளைக்காரனாகத்தானே வேண்டும்?'' என்று வேடிக்கையாகச் சொன்னான் கொள்ளையர்

தலைவன்.

தோகன் விடுதலை பெற்றுத் தனி ஆளாக நடந்தான். வேறு ஊர்களைப் பார்க்கப் போனான். ஒருமுறை ஒரு சிற்றூரில் அவன் ஏராளமான ஏழை உழைப்பாளிகளைக் கண்டான். ஒரு புதுமை. அந்த ஊரில் உள்ள எல்லா வீடுகளும், நிலங்களும், தொழில்களும் ஒரே ஓர் முதலாளிக்குச் சொந்தம்! வாரா வாரம் தன்னிடம் வேலை செய்பவர்களுக்கு அவர் கூலி தருவார். எப்படித் தெரியுமா? ஒவ்வொரு ஆளிடமும் ஒரு சீட்டு எழுதிக் கொடுப்பார். அந்த ஊர்க் கடையில் அந்தச் சீட்டைக் காட்டினால் வீட்டுக்கு வேண்டிய உணவுப் பொருட்களை வாங்கிக் கொள்ளலாம். ஆனால், அவை போதும் போதாமல் அரை வயிற்றுக்குக் கூடக் காணாமல் இருக்கும். முதலாளி ஒருவருக்குத்தான் எழுதப் படிக்கத் தெரியும். எல்லாரும் கடினமாக உழைத்து விட்டு உழைப்புக்கு ஏற்ற கூலி பெறாமல் கஷ்டப்படுவதைப் பார்த்தான் தோகன்.

அவனுக்குத்தான் எழுதப் படிக்கத் தெரியுமே. ஒரு யோசனை தோன்றியது. அந்த வாரத்துச் சீட்டுகளை அவன் தானே தயாரித்தான். ஒவ்வொரு தொழிலாளிக்கும் கணிசமான அளவு உணவுப் பொருள்களைத் தரும்படி சீட்டுகளை மாற்றித் தானே எழுதினான். அந்தச் சீட்டுகளை எடுத்துக் கொண்டு கடையிலே காட்டி, தாராளமாகப் பொருள்களை வாங்கி எல்லாரும் சந்தோஷப்பட்டார்கள். அவனை வாழ்த்தினார்கள்.

சில வாரங்களில் அங்கிருந்து புறப்பட்டான் தோகன். முரட்டு முதலாளிக்கு விஷயம் தெரிந்தால் தோகன் தொலைந்தான்! மங்கோலியாவில் முன்னெல்லாம் கொலைவாள்தான்



எதற்கும் பேசும்!


தோகன் தொடர்ந்து நடந்தான். சில நாள் கழிந்ததும் சாக்கிம் என்ற ஒரு நாட்டுப் பகுதிக்கு வந்து சேர்ந்தான். அங்கே திரும்பிய பக்கமெல்லாம் மக்கள் சதுரங்கம் ஆடிக் கொண்டிருந்தார்கள். அவனுக்கு ஒரே ஆச்சரியமாக இருந்தது. விசாரித்தான். சாக்கிம் அரசர் விநோதமான ஒரு சதுரங்கப் பைத்தியம் என்று தெரிந்தது. அந்த முரட்டு அரசன் தினமும் ஒரு ஆளுடன் சதுரங்கம் ஆடுவானாம். தோற்றவர் தலையை வெட்டி விடுவானாம்!

தோகனுக்கு இதைக் கேட்டதும் கோபம் வந்தது. ''என்ன அநியாயம்? இந்த அக்கிரமத்தைக் கேட்பார் இல்லையா?'' என்று வெகுண்டு அரசனைப் பார்க்கப் போனான்.

அன்று அங்கே அரசனுடன் சதுரங்க ஆட்டம் ஆட ஒரு கைதியைக் கொண்டு வந்திருந்தார்கள். உற்றுப் பார்த்த போதுதான் அந்தக் கைதி தனது பழைய நண்பன் பென்போதான் என்பதைக் கண்டுபிடித்தான் தோகன்! கொள்ளையர்களிடம் அடிமையாகச் சிறைப்பட்ட பென்போ எப்படியோ இங்கே கைதியாகியிருந்தான்!

''எனக்குச் சதுரங்கம் ஆடத் தெரியாதே! என்னை விட்டுடுங்க'' என்று புலம்பிக் கொண்டிருந்தான் பென்போ.

தோகன் என்ன நடக்கிறது என்று கவனித்தான். வேடிக்கை பார்க்க வந்த மக்கள் கூட்டம் அலைமோதியது! மிக ஆடம்பரமாகவும் ஆவேசமாகவும் அங்கே வந்து அமர்ந்தான் அரசன். சதுரங்கப் பலகை மீது காய்களை நகர்த்தினான். எதிரே தடுமாறி நின்றிருந்த பென்போவிடம் இரண்டே நிமிஷத்தில் ''ஜெயித்து விட்டேன்'' என்று அட்டகாசமாகக் கத்தினான். ''எங்கே உன் கழுத்தைக் காட்டு இப்போதே வெட்டுகிறேன்'' என்று வாளுடன் எழுந்தான்.



அதென்னவோ மனிதத் தலைகளை வெட்டுவதில் அவனுக்கு ஒரு மூர்க்க மான வெறி!

அப்போது தோகன் அங்கே குறுக்கே வந்தான். ''அரசே! சதுரங்க ஆட்டத்தில் தன்னிகரில்லாத மன்னர் மன்னனே... பெரிய மனது செய் யுங்கள்! இந்த ஆள் எனது நண்பன். இவனைக் கொல்லு முன்பு தாங்கள் என்னுடன் சதுரங்கம் ஆடுங்கள். உங்களுடன் சதுரங்கம் ஆடும் பாக்கி யத்தை எனக்குக் கொடுங்கள். நான் தோற்று விட்டால் எங்கள் இருவரை யும் சேர்த்து ஒன்றாகக் கொன்று விடுங்கள்'' என்று கேட்டுக் கொண் டான்.

அரசனுக்குப் பரம சந்தோஷம். ஒரே நாளில் இரண்டு முறை சதுரங்கம் ஆட முடிகிறதே என்று ஏக மகிழ்ச்சி. ஒரே மூச்சில் இரண்டு தலைகளை வெட்ட அருமையான வாய்ப்புக் கிடைக்கப் போகிறது என்று மட்டில்லாத ஆனந்தம்!

''சரி. உட்கார் ஆடலாம்'' என்றான் அரசன்.

''அரசே! ஒருவேளை நான் ஜெயித்து விட்டால் நான் கேட்பதைத் தாங்கள் தர வேண்டும்'' என்றான் தோகன்.

அரசன் கடகடவென்று சிரித்தான். ''என்னை ஜெயிப்பதா? முட்டாளே! என்னிடம் யார் இதுவரை ஜயித்திருக் கிறார்கள்? ஒருவேளை அப்படி நீ ஜயித்தால், நீ கேட்பதைக் கண்டிப் பாகக் கொடுத்து விடுகிறேன்'' என்று எல்லார் எதிரிலும் அட்டகாசமாகக் கூறினான்.

கூட்டம் அமைதியாகவும் ஆர்வத் தோடும் பார்க்க, சதுரங்க ஆட்டம் தொடங்கியது. தனது திறமை அனைத் தையும் காட்டி மிகவும் கவனமாக ஆடி னான் தோகன். நீண்ட நேரம் நடந்த அந்த ஆட்டத்தில் கடைசியில் அரசன் தோற்று விட்டான். தோகன் ஜயித்து விட்டான்.

''ஆ, ஊ' என்று கத்தினான் அரசன் கோபத்துடன். இருந்தாலும் என்ன செய்வது? கூடி நின்ற கூட்டம் அரசன் தோற்றதையும், தோகன் ஜெயித்ததை யும் பார்த்து ஆரவாரம் செய்த போது தோல்வியை ஒப்புக் கொள்ள வேண் டியதாயிற்று.

''உனக்கு என்ன வேண்டும்? கேட்டுத் தொலை?'' என்று வெறுப் புடன் கேட்டான் அரசன்.

''அரசே! நன்றி. இன்று முதல் இந்த நாட்டிலே தலைவெட்டும் மரண தண்டனையை நிறுத்தி விடுங்கள். இதுவே என் வேண்டுகோள்'' என் றான் தோகன்.

கூட்டத்தினர் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர். எல்லார் எதிரிலும் வாக்கு தந்திருந்ததால் அந்த முரட்டு அரசன் தன் வாக்குக்குக் கட்டுப்பட்டு மரண தண்டனையை அன்று முதல் நிறுத்தி விட்டான். விடுதலை பெற்ற நண்பன் பென்போவுடன் தன் பயணத்தை மகிழ்ச்சியோடு தொடர்ந்தான் தோகன்.


'கலை எதற்கு கல்வி எதற்கு' என்று கேட்ட பென்போ கண் திறக்கப்பட்ட வனாக நடந்தான்!

''அந்த டாக்டர் ஏன் தவழ்ந்து கிட்டே போறாரு?''

''அவர்தான் குழந்தை மருத்துவ ராச்சே!''

– எல். பத்மாவதி






''நம்ம வாயில இல்லாத பல் எது?''

''கப்'பல்''

– கா. எழில்காந்தி



உடையார் உடைத்தது!

சமஸ்தானங்களும் ஜமீன்களும் இருந்த காலத்தில், ஸ்ரீ ஜெகவீர பராக்ரம உடையார், தன்னிடம் வரும் பண்டிதர்களையும், கலைஞர்களையும். ஆதரித்து உபசரித்து ஏற்புடைய பரிசுகளையும் வழங்கிக் கௌரவிப்பதைத் தன் கடமையாகக் கொண்டிருந்தார்.

அவர்கள் அவையில் எப்பொழுதும் பண்டிதர்களும், நல்லறிஞர்களும் நிரம்பி இருப்பார்கள்.

ஒரு சமயம், உடையார் அவர்ளைக் காண வறுமையால் மிகவும் நலிவுற்ற புலவர் ஒருவர் அவைக்கு வந்தார். உடையார் அவர்கள், புலவரை எதிர் கொண்டழைத்து, வணக்கங்கூறி வரவேற்றார்.

புலவரும் தான் கொண்டு வந்த தேங்காய் ஒன்றினை உடையாரின் கையில் கொடுத்து வணங்கியும், அவையில் உள்ள எல்லாப் பண்டிதர்களுக்கும் வணக்கங்கூறியும் அமர்ந்தார்.

அதுசமயம் உடையார் தன் அருகில் நின்றிருந்த பணியாளரிடம் புலவர் கொடுத்த தேங்காயைக் கொடுத்து அதை உடைத்து வரக் கூறினார். பணியாளர் தேங்காயை உடைத்து வந்து, அழுகியிருப்பதாகக் கூறி அவையின் முன்னே வைத்தார்.

அவையில் உள்ள பண்டிதர்களில் ஒருவர் ஏளனத்துடன் நகைத்துக் கொண்டே புலவரைப் பார்த்து, "என்னைய்யா புலவரே! நமது பராக்ரம உடையாருக்குக் காணிக்கை தர உமக்கு அழுகிய தேங்காய்தான் கிடைத்ததோ?" எனக் கேட்டுப் பரிகாசம் செய்தார்.

புலவரும் பண்டிதரின் ஏளன வார்த்தையைக் கேட்டுப் புரிந்து கொண்டு சமயோசிதமாக "இது உடையாரின் சமஸ்தானம் என்றறிவேன், ஆனால், அவர் இப்படி உடைப்பார் என்றறியேன்! மன்னிக்கவும்" என்று பதில் கூறினார்.

செருக்குடன் கேட்ட பண்டிதரின் முகத்தில் அசடுவழிய மற்றவர்கள் மகிழ்ச்சியுற்றனர்.

- ஜெ. அருள்மொழி, குத்தாலம்.

ஜப்பானில் ஒலிக்கும் சலங்கைகள்!

தமிழ்நாட்டின் பரதநாட்டியச் சலங்கைகளுக்கு வரவேற்பளிக்காத நாடுகளே இல்லை எனலாம்! பரத நாட்டியம் ஒரு ஆடல் கலை மட்டுமல்ல; அது ஒரு உடற் பயிற்சிக் கலையும் கூட! ஈடுபாட்டோடு இதை ஆடுகிறவர்களை இது மெய்மறக்க வைக்கிறது. தெய்வ அருளில் திளைக்கும் உன்னத உணர்வை ஊட்டுகிறது என்கிறார்கள் அறிவியல் அடிப்படையில் இதை ஆராய்ந்தவர்கள்! இப்படி உள்ளத்தைச் சிலிர்க்க வைக்கும் கலைகள் ஒரு சிலவே.



✦ ஸயாகா பிதோமே - பரதப் பயிற்சி உடையில்

எதையும் அறிவியல் கண்ணோடு காணும் ஜப்பானில், பரத நாட்டியச் சலங்கை ஒலி கேட்கிறது என்றால் பெருமையாக இருக்கிறது அல்லவா? இதன் தலைநகர் டோக்கியோவில் ஒரு பரத நாட்டியப் பள்ளி இயங்கி வருகிறது! இதன் பெயர் என்ன தெரியுமா? ஆனந்த நடனம்! இதை நடத்தி வருபவர் யுமி கோடனாகா.



இந்தப் பள்ளியில் பரத நாட்டியம் கற்று வரும் சிறுமி நான்கு வயது ஸயாகா பிதோமே. சிறுமியின் அன்னை மாகி ஒகடாவுக்கு ஆசிய நாகரிகம், பண்பாடு, கலைகளைப் பற்றி அளவில்லாத ஆர்வம். தன் மகள் இவைகளைப் பற்றி அறிவதுடன் ஒப்பில்லாத பரதக் கலையையும் பயில வேண்டும்



✦ கனாகோ அபே டி பரதப் பயிற்சி உடையில்




✱ பயிற்சியில் அடவு சரி செய்யப்படுகிறது

என்பது இவரது கனவு. தன் மகளை பரதம் பயில வைத்ததோடு தானும் இப்பொழுது பரதம் கற்று வருகிறார் இந்த அதியசப் பெண்மணி!

'ஆனந்த நடனத்தில்' பரதம் பயின்று வரும் இன்னொரு ஜப்பானியச் சிறுமி 'கனாகோ அபே'. 12 வயது. பள்ளியை நடத்தி வரும் யுமிகோ டனாகா ஆசிய மரபுக் கலை, பண்பாடுகளில் ஊறிப்போனவர். பிறக்கும் குழந்தை பெண்ணாக இருந்தால் தன்னிடம் பரதம் கற்க அனுப்ப வேண்டும் என்று அபேயின் பெற்றோர்களிடம் வேடிக்கையாக நிபந்தனை போட்டாராம் இந்த ஆசிரியை. பெண் குழந்தை பிறந்ததும், இந்தியாவிலிருந்து வெள்ளிச் சலங்கை வாங்கி வந்து தனது எதிர்கால மாணவிக்குப் பரிசளித்தாராம் இந்த அதிசய ஆசிரியை! பிறந்ததுமே வெள்ளிச் சலங்கையை மாட்டிக் கொண்டு விட்ட இந்த கனாகோ அபே பரதத்தில் அலாரிப்பை முடித்திருக்கிறாள்.

தமிழ் நாட்டுக்கு வரவேண்டும், இங்குள்ள ரசிகர்கள் முன்னிலையில் பரதம் ஆடிப் பாராட்டைப் பெற வேண்டும் என்று ஏங்கும் இந்த ஜப்பானியச் சிறுமிக்கு, நமது உடைகள் நகைகள் எல்லாவற்றிலும் கொள்ளை ஆசை!




✱ ஸயாகா பிதோமே - ஜப்பானிய உடையில்

அமெரிக்க நாகரிகம் புயலென வீசிக் கொண்டிருக்கும் ஜப்பானில் பரதத்தின் பெருமைகளை ஒலித்து வரும் ஸயாகா பிதோமே, அவரது அன்னை மாகி ஒகடா, சிறுமி கனாகோ அபே, ஆசிரியை யுமிகோ டனாகா ஆகியோரை எவ்வளவு பாராட்டினாலும் தகும்!

- ஆனந்தி



நெருப்பு



ஒரு நாள் முல்லா வெளியூருக்குப் பயணமாகச் செல்ல வேண்டியிருந்தது.

இரவு நேரமாகி விடவே வழியில் இருந்த ஒரு சத்திரத்தில் தங்கி இரவுப் பொழுதைக் கழிக்கலாம் என்று நினைத்தார். அந்தச் சத்திரம் மிகவும் பெரியதாகவும் வசதிகள் நிரம்பியதாகவும் இருந்தது. முல்லா சென்ற சமயம் செல்வந்தர்களான பலர், சத்திரத்தில் தங்கியிருந்தார்கள். சத்திரக்காரன் செல்வந்தர்களைக் கவனிப்பதிலேயே கண்ணும் கருத்துமாக இருந்தானே தவிர, சாமானிய ஏழை போல் தோன்றிய முல்லாவை அவன் லட்சியம் செய்யவேயில்லை.

முல்லாவை அவன் சத்திரத்திற்குள் கூட அனுமதிக்கவில்லை. சத்திரத்துத் திண்ணையிலேயே அவரைப் படுக்க வைத்து விட்டான். வேண்டா வெறுப்பாகக் கொஞ்சம் உணவு மட்டும் கொடுத்தான். குடிப்பதற்குத் தண்ணீர் கூடக் கொடுக்கவில்லை.

திண்ணையில் படுத்திருந்த முல்லாவுக்கு நடு இரவில் தாகம் எடுத்தது. மூடி இருந்த சத்திரக் கதவைத் தட்டி ''ஐயா சத்திரக்காரரே, எனக்குக் குடிக்கக் கொஞ்சம் தண்ணீர் தாருங்கள்'' என்று கேட்டார் முல்லா.

சத்திரக்காரன் விழித்துக் கொண்டுதான் இருந்தான். ஆயினும், முல்லாவின் குரலுக்கு சற்றும் மதிப்பளிக்கவில்லை. இரக்கப்பட்டு ஒரு வாய் தண்ணீர் கூட அவன் கொடுக்க முன்வரவில்லை.

சத்திரக்காரனுடைய நடவடிக்கை முல்லாவுக்கு மன வேதனையை அளித்தது. சத்திரக்காரனுக்குத் தகுந்த பாடம் கற்பித்து எப்படியாவது தண்ணீர் வாங்கிவிட வேண்டும் என்று அவர் நினைத்தார்.

திடீரென்று அவர் பெருங் குரலெடுத்து ''ஐயோ நெருப்பு! நெருப்பு. ஓடி வாருங்கள்! ஓடிவாருங்கள்'' என்று கத்தினார்.

அடுத்த கணத்தில் சத்திரக்காரன் மட்டுமல்லாமல், அங்கே தங்கியிருந்த அத்தனை பேரும் ஆளுக்கு ஒரு பாத்திரத்தில் தண்ணீரை எடுத்துக் கொண்டு வெளியே ஓடி வந்து ''எங்கே நெருப்புப் பிடித்துக் கொண்டது?'' என்று பரபரப்போடு கேட்டார்கள்.


முல்லா சிரித்துக் கொண்டே தண்ணீருடன் வெளியே வந்த சத்திரக்காரரின் கையிலிருந்த பாத்திரத்தை வாங்கி அதில் இருந்த நீரை நிதானமாக அருந்தினார்.


பிறகு ''என் தொண்டையில்தான் தாக வறட்சி நெருப்புப் பற்றிக் கொண்டு விட்டது. இப்போது நீரை அருந்தியதன் மூலம் தாகத்தைத் தணித்துக் கொண்டு விட்டேன். தொண்டையில் பற்றிய நெருப்பும் அணைந்து விட்டது. இனி நீங்கள் போகலாம்'' என்றார் முல்லா.

அவருடைய சாதுரியமான பேச்சைக் கேட்ட சத்திரக்காரன், அவர் ஒரு மேதையாக இருக்க வேண்டும் என்று எண்ணி அவரை உள்ளே அழைத்துச் சென்று எல்லா வசதிகளும் செய்து கொடுத்தான்.

– ரெ. இராமாதேசிகன், மாத்தூர்.

எந்தத் தேனீ தேன்கூட்டை அடையும்




Don't miss the February issue of
GOKULAM
THE MONTHLY MAGAZINE FOR CHILDREN
1992
* Billy Beg and his Bull
— an Irish Tale of Adventure
* Atul and the Skeleton
— about a boy who fears Biology
* Plus all our regular features
96 PAGES FOR
JUST Rs. 3/-
GOKULAM, GUINDY,
MADRAS - 600 032.

தம்பித்துரையும் கடல் சர்ப்பமும்

கதை - குமரன்

படம் - கரோ


அண்ணாமலையும் தம்பித்துரையும் சகோதரர்கள்...






கரடிகளை நண்பர்களாகப் பெற்றனர்.
அதோ, இரு ஓநாய்கள்!
எங்களைக் கொல்லாதீர்கள்! உங்களுக்கு உதவுகிறோம்...
இவ்வாறு இரு விலங்குகளும் நண்பர்களாயின ...
நல்ல நண்பர்களை உடையவர்கள் எதற்கும் பயப்பட வேண்டியதில்லை...
கானகத்துக்கு அப்பால்...
அந்த மரத்தின் இருபுறமும் பாதை பிரிகிறது. நான் கிழக்கே ...
நான் மேற்கே போகிறேன் ...
இருவரும் தங்கள் கத்திகளை மரத்தில் குத்தினர், பிரிந்தனர் ...
நம்மில் ஒருவருக்கு ஆபத்து என்றால், அவன் குத்திய கத்தி, துரு ஏறிக் கறுக்கும்...
அண்ணன்
அதோ கோட்டை! ஆனால் மனித நடமாட்டமே இல்லையே?


கோட்டையை நெருங்க சாளரத்தில் ஓர் அழகி...
பெண்ணே! ஏன் வருத்தமா இருக்கே? எல்லோரும் எங்கே?
வெள்ளை மானைத் தேடிப் போனார்கள், திரும்பி வர-வில்லை. நாட்டின் ராஜாவான என் அப்பாவும் அவர்களில் ஒருவர்!
அழகியே, கவலைப்-படாதே! நான் அவர்களை கண்டு பிடித்து வருகிறேன்...
உனக்கும் ஆபத்து நேரும்!
அவர்கள் தனியே சென்றனர். எனக்கோ நாலு நண்பர்கள். அதனால் கவலையில்லை!
பிடித்து வந்தால் நான் உன் மனைவியாவேன்.
அண்ணாமலை பயணம் தொடர...
அதோ, வெள்ளைமான்! விடமாட்டேன் அதை!



வெள்ளை மானைத் துரத்திச் செல்ல, ஓரிடத்தில்...
அட, மாயமாய்த் திடீரென்று மறைந்து விட்டதே, மான்!
அங்கு ஒரு கிழவி...
பாட்டி, நான் களைத்திருக்கிறேன். பனிக் காலம். இருட்டி வருது. சற்று குளிர் காயட்டுமா?
ஆஹா!
எத்தனை நல்ல நண்பர்கள், உனக்கு! தட்டிக் கொடுக்கிறேன்...
பாட்டி தட்டித் தடவிக் கொடுக்க...
ஐயோ! எல்லோரும் கல்லாகி விட்டார்களே!
ஹி... ஹி... கல்லாய்ப் போச்சு!
பாட்டி தொட்டதும் அண்ணாமலையும் கல்லானான்!
ஹ... ஹ... ஹா!




இதற்கிடையில் தப்பித்தவரை வேறு ஒரு நாட்டை அடைந்து, மன்னனின் ஆடுகளை மேய்த்து வந்தான்.
இருட்டுது, ஆடுகளை ஓட்டிப் போய் கொட்டடியில் அடைக்கணும்!
ஒருநாள்...
ஐயோ! ஐயோ!
ஏன் ஓடறீங்க?
கடலிலிருந்து பயங்கர சர்ப்பம் தோன்றி, நம் ராஜாவின் மூன்று பெண்களையும் சாப்பாட்டுக்கு அனுப்பி வைக்கச் சொல்லுது!
மன்னனுக்குச் செய்தி எட்டியது...
மூன்று நாட்களுக்குள் அனுப்பி வைக்கலேன்னா சர்ப்பம் கடலைக் கடைய, கடல் பொங்கி இந்த நாட்டையே மூழ்கடித்து விடுமாம்!
மனமுடைந்த மன்னன் தண்டோரா போடச் செய்தான்...
சர்ப்பத்தைக் கொன்று, நாட்டைக் காப்பவனுக்கு மன்னனின் கடைசி மகள் மனைவியாவாள்...!


பயத்தில் யாரும் முன்வரவில்லை...
மூன்று நாள் கெடு முடிஞ்சு விட்டது, என்ன செய்வேன்?
எங்களை வண்டி-யேத்தி சர்ப்பத்திடம் அனுப்பிடுங்க, நாட்டைக் காக்க அதான் வழி!
மன்னர் வருத்தத்துடன் அனுப்ப, வழியில்...
எங்கே போறீங்க?
கடற்கரைக்-குத்தான்! சர்ப்பத்துக்குச் சாப்பாடு கொண்டு போறேன்...
நம்பித்துரை மூன்று இரவுகளில் தான் தயாரித்த கத்தியுடன் பின் தொடர்கிறான்...
நான் பார்க்கிறேன், வீரம் காட்ட வேண்டிய தருணம் இது...
கடற்கரையில்...
சீக்கிரம் இறங்கிக்குங்க, எனக்குப் பயமா இருக்கு; நான் போறேன்!
நாட்டைக் காக்க உயிர்த் தியாகத்-துக்குத் தயாரா-யிருக்கிறோம்!
வண்டிக்காரன் திரும்பிச் செல்லும் போது...
அட! இப்பய வந்திருக்காங்க, உங்களைக் காப்பாத்த! வா வா வா!


சற்று நேரத்தில்...
ஆகா!
நம்பித்துரையின் நண்பர்கள் சர்ப்பத்தைத் தாக்கின...
பயப்படாதீங்க! தாக்குங்க!
நம்பித்துரையும் வீரத்துடன் போரிட்டு சர்ப்பத்தை வீழ்த்தினான்.
அழிந்து போ!
சர்ப்பத்தின் நாக்குகளை அறுத்து என் தோள் பையில் போட்டுக்க- றேன்...
கடைசி ராஜகுமாரி தன் மோதிரத்தைத் நம்பித்துரைக்கு அணிவித்தாள்.
எங்களைக் காப்பாற்- றியதற்கு நன்றி!



யுத்தத்தையும், சர்ப்பம் செத்துப் போனதையும் தூரத்திலிருந்து பார்த்த வண்டிக்காரன்...
ஒரு தந்திரம் பண்ணலாம்!
வண்டிக்காரன் திரும்பி வந்து...
ராஜகுமாரிகளே, ஏறிக்குங்க... அரண்மனை திரும்பலாம்!
தம்பித்துரையை ஏற்றிக் கொள்ள மறுத்துவிட்டான் வண்டிக்காரன்...
இது ராஜகுமாரிகள் ஏறும் வண்டி! உனக்கும் உன் மிருகங்களுக்கும் இடமில்லை!
வண்டி விரைய, தம்பித்துரை...
வண்டிக்காரன் ஏதோ சூழ்ச்சி பண்றான்னு தோணுது. வேகமா நடப்போம்...
அரண்மனையில்...
அரசே! சர்ப்பத்தைக் கொன்று, உங்கள் பெண்களைக் காப்பாற்றி வந்தேன்!
என் கடைசி மகள் உனக்குத்தான்!



அப்போது கடைசி ராஜகுமாரி...
அப்பா, என் மோதிரம் யாரிடம் இருக்கோ அவரைத்தான் மணப்பேன்!
அப்போ என் வாக்குறுதி என்ன ஆவது?
இவன் சர்ப்பத்தைக் கொன்றதற்கு என்ன சாட்சி?
அப்பன்னா யார் உன்னைக் காப்பாற்றியது...?
மேல்மாடத்திற்குச் சென்ற ராஜகுமாரி...
அதோ! மூட்டை தூக்கிட்டு வராரே, அவரைக் கூப்பிட்டு விசாரியுங்கள்!
தம்பித்துரை மன்னன் முன் அழைத்து வரப் பட்டான்...
ராஜகுமாரியின் மோதிரம் உன்னிடம் இருக்கா?
ஓ! மோதிர சாட்சியும் போதாதுன்னா இந்த மூட்டையும் இருக்கு!
மூட்டையில் சர்ப்பத்தின் நாக்குகளைப் பார்த்த மன்னன்...
இந்த வண்டிக்காரனைச் சிறையில் தள்ளு!




கடைசி ராஜகுமாரிக்கும், தம்பித்துரைக்கும் திருமணம்...
சில நாட்கள் சென்று...
என் அண்ணன் ஞாபகம் வந்துடுத்து... அவனைப் பார்க்கப் போகணும்!
சீக்கிரம் திரும்பிருங்க...
அண்ணனைப் பிரிந்த இடத்தை அடைந்தான் தம்பித்துரை...
ஆ! கத்தி துரு ஏறிக் கருத்திருக்கு... அண்ணனுக்கு ஆபத்து!
அண்ணன் சென்ற வழியில் போய், கோட்டையை அடைந்தான்...
பெண்ணே! நீ மட்டும் ஏன் தனியா இருக்கே?
ஒரு சாபத்தால் நான் கோட்டையை விட்டு வெளியேற முடியலை...
அந்தப் பெண் நடந்ததையெல்லாம் கூற...
நானும் வெள்ளை மானைப் பின்தொடர்ந்து போய் எல்லோரையும் மீட்டு வரேன்...
ஜாக்கிரதை!


சீக்கிரமே வெள்ளைமான் தென்பட...
அதோ! விடாதீங்க! துரத்துவோம்...
ஓரிடத்தில்...
அட, திடீர்னு மாயமாய் மறைஞ்சிடுத்தே!
மான் மறைந்த இடத்தில் தீ மூட்டிக் குளிர் காயும் மாயக் கிழவி...
பாட்டி! இங்கே இருக்கும் பாறைகள், கற்கள் எல்லாம் என்ன?
சொல்றேன், அதுக்கு முன் உன் தோழர்களைத் தட்டிக் கொடுக்கிறேன்!
நம்பித்துரை சந்தேகப்பட்டு...
பாட்டி! நீ தந்திரக்காரிதான்; ஆனா நானும் கெட்டிக்காரன்! என் கத்தி எவ்வளவு கூர்மை, பார்த்தாயா!
சூனியக்காரி பயந்து போய் உண்மையைக் கூற...
ம்! இவர்களையெல்லாம் எப்படி மீட்பது?
அந்த நெருப்பைக் கிளறி, சாம்பலைத் தூவினால் போதும்!


தம்பித்துரை சாம்பலைப் பாறைகள் மேல் தூவ...
தம்பி!
அண்ணா!
உயிர் பெற்ற மிருகங்கள் சூனியக்காரி மேல் பாய்ந்தன...
ஐயோ, செத்தேன்!
பாறையாகி இருந்த எல்லோரும் மனிதராய் மாறி கோட்டைக்குத் திரும்பினர்...
மகளே! உன்னை அண்ணாமலைக்கு மணமுடிக்கிறேன்.
கிழவி செத்ததும் ராஜகுமாரி மீது இருந்த சாபம் நீங்கி விட்டது...
நான் இனி எங்கும் போகலாம்! பொல்லாத வெள்ளை மானும் நல்ல மானாகி விட்டது!
அண்ணாமலையிடம் தம்பித்துரை விடை பெற்றான். இருவரும் இரு ராஜ்யங்களை ஆண்டனர்.
போய் வரேன்!
கொஞ்ச நாள் சென்று உங்க ராஜ்யத்துக்கு வரோம்!
ஒரு ரஷ்ய நாடோடிக் கதை.


சிரிப்...
001 க்கு ஃபோன் செய்தால் என்ன ஆகும்?
ஒரு போலீஸ்காரர் தலைகீழாக நம் வீட்டிற்கு வருவார்!
பன்னீர் சோடா கேட்டால் சாதா சோடா கொடுத்துட்டீங்களே?
என் பெயர் பன்னீருங்க!
சரணாலயத்திற்கு வரும் பறவைகள் எங்கிருந்து வருது தெரியுமா?
முட்டையிலிருந்து, சார்!
காலில்லாமல் தரையில வேகமாக ஓடுவது எது?
தண்ணீர்
நெல்லை மணியன்
என்னங்க, தோசை சாப்பிடறவங்களுக்கு இலவச இணைப்பா ஒரு இட்லி தராங்க?
பேன் காத்துல தோசை பறக்காமல் இருக்கத்தான்!
இரா. ராமலட்சுமி



பாவம் மருது

மற்றவர்களைத் துன்பப்படுத்தி அதில் சந்தோஷம் காணுவதில் மருதுவுக்குத் தனி ஈடுபாடு! பெற்றோர் எத்தனை முறை கண்டித்தும் அவன் கேட்கவில்லை. ஒரு நாள் சில நண்பர்களை அழைத்தான். குப்பை மேட்டில் காகிதம் மேய்ந்து கொண்டிருந்த கழுதையின் வாலில் ஒரு வெடிச் சரத்தை மெதுவாகக் கட்டினான். 'எல்லோரும் கை தட்டுங்கடா' என்றான். சுற்றி நின்ற நண்பர்கள் எல்லோரும் கை தட்டவே, கழுதை மிரண்டு ஓடியது. பையன்கள் துரத்தினர். அது ஊர்க் கோடியை அடைந்து, கோயில் சுவற்றுப்பக்கமாக ஒளிந்து நின்றது! மருது அதை விடவில்லை. வாலில் வெடி கட்டியிருக்கிறானே? நண்பர்களோடு ஓடி வந்தான். கழுதை அசந்த சமயம் பார்த்து அதன் வாலில் இருந்த வெடிக்குத் தீ வைத்தான்.

வெடி வெடிக்கவும் கழுதை அரண்டு அலறிக் கொண்டு ஓடியது. ஆனால்,கல் நெஞ்சக் காரனான மருதுவுக்கு அது பாவமாக தோன்றவில்லை. மாறாக ''ஹா! ஹா!'' என விழுந்து விழுந்து சிரித்தபடி அதை விடாமல் துரத்தினான். கழுதை பயந்து, நன்கு வளர்ந்து கதிர் முற்றி அறுவடைக்குத் தயாராய் இருந்த நெல் வயல்களில் புகுந்து ஓடியது. அப்போது வெடித்த வெடியால் நெருப்பு பயிர்களைப் பற்றியது. 'மள மள'வென்று எரிந்து அவ்வளவும் கரியானது! ஊர் மக்கள் ஓடிவந்து தீயை அணைத்தனர். அந்த வயல்களில் பெரும் பகுதி மருது வீட்டாருடையது.

நஷ்டமடைந்த ஒரு சிலர், மருதுவைப் பிடித்துத் தண்டிக்க ஓடினர். மருது சிட்டாய்ப் பறக்க, மற்றவர்கள் துரத்த, ஓர் ஓட்டப் பந்தயமே அங்கு நடந்தது! தன் நிலத்துப் பயிர்களோடு மற்றவர்களது பயிர்களையும் தன் மகனின் அபாய விளையாட்டால் நாசமடைந்ததை எண்ணி மருதுவின் அப்பா வேதனையும், கோபமும் அடைந்தார்.

துரத்துபவர்களிடமிருந்து தப்பிக்க வீட்டுக்கு ஒளிய வந்த மருதுவை இழுத்து ஆத்திரம் தீர உதைத்தார்! ஊராரும் தர்ம அடி போட்டனர்! வலி தாளாமல் மருது வாய்விட்டுக் கத்தி அழுதான். தன்னை அறியாமல் கழுதை வேதனை தாங்காது கத்திய காட்சி அவன் நினைப்பில் வந்தது! அந்த வாயில்லாத ஜீவனை வதைத்ததற்குத் தான் கடவுள் தண்டனை தந்திருப்பதாக அவனுக்குத் தோன்றியது. இனி மேல் மற்ற உயிர்களை வதைக்கக் கூடாது என உறுதி கொண்டான்.

- ஆர்.எஸ். மாதவன், மன்னார்குடி.

வண்ணந் தீட்டுங்கள்





35,000 பேர்களில் முதல் பரிசு பெற்றவன்!



எதிர்ப்பக்கத்தில் உள்ள வண்ண ஓவியத்தை ஓர் முறை கவனமாகப் பாருங்கள். இதை கோகுலம் வாசகர்களுக்காக வரைந்திருப்பவன் உங்களைப் போன்ற ஒரு சிறுவன்தான். அவனுடைய படமும் கூட மேலே உள்ளது.

இந்தச் சிறுவன் ஏற்கெனவே உங்களுக்கு நன்கு அறிமுகமானவன். என்ன திகைக்கிறீர்கள்! யாரென்று ஊகிக்க உங்களால் கூடவா முடியவில்லை! சரி, கொஞ்சம் துப்புக் கொடுக்கிறேன்.

குழந்தைகள் தினம்!

தபால்தலை!

மதுரை...!


அப்பாடி! இப்பொழுது நினைவுக்கு வந்ததா? யாரென்று கண்டுபிடித்தீர்களா?

மதுரை விசாகா பள்ளியில் இரண்டாம் வகுப்புப் படிக்கும் ஆறு வயதுச் சிறுவன் சுபாஷ்குமார்தான். 1990ஆம் ஆண்டில் இவன் வரைந்த ஓவியம், அகில இந்திய அளவில் நடைபெற்ற குழந்தைகளுக்கான ஓவியப் போட்டியில் முதல் பரிசு பெற்று, அதுவே குழந்தைகள் தினத்தன்று வெளியான சிறப்புத் தபால்தலையில் இடம் பெற்றது.

1991ஆம் ஆண்டில் சுபாஷ்குமாருக்கு இன்னுமோர் பரிசு கிடைத்துள்ளது. உலக அளவில் ஜப்பானில் நடைபெற்ற குழந்தைகளுக்கான ஓவியப் போட்டியில் கலந்து கொள்ள இவனுக்கு அழைப்பு வந்தது. இதில் 102 உலக நாடுகளைச் சேர்ந்த 35,000 சிறுவர்கள் பங்கெடுத்துக் கொண்டனர். சுபாஷ்குமார் வரைந்து அனுப்பிய 'முயல் தம்பதியர்' என்ற ஓவியம் முதல் பரிசு பெற்றது.

கோகுலம் வாசகர்களை மகிழ்விக்க 'வீட்டுக்கு ஒரு மரம்' என்ற கருத்தை விளக்கும் வண்ண ஓவியம் ஒன்றை வரைந்து அனுப்பும்படி சுபாஷ்குமாரைக் கேட்டோம். அவன் எழுதி அனுப்பிய ஓவியம்தான் எதிர்ப் பக்கத்தில் நீங்கள் காண்பது.

இந்த சாதனையாளன், தனது திறமைகளை மேலும் வளர்த்துக் கொண்டு இன்னும் பல பெரிய சிறப்புகளைப் பெற்றுப் பெருமையடைய வேண்டும் என்று கோகுலம் வாசகர் சார்பில் மதுரை சுபாஷ்குமாரைப் பாராட்டி வாழ்த்துகிறோம்!



மலைக்கோட்டை மர்மம்

வி.ர.வசந்தன்



9 புதிய செய்திகள்

அந்த மனிதன் ஆனந்தனின் காதில் கிசுகிசுப்பாக, ''பயப்படாதே. நான் உனக்கு ஒரு தீங்கும் செய்ய மாட்டேன். பேசாம என் கூடவா'' என்றான்! அந்தக் குரல் இதற்கு முன்பு எங்கேயோ கேட்ட குரலாகத் தோன்றியது. அதிர்ச்சியில் பிரமை பிடித்து நின்ற அவனை வலுக்கட்டாயமாக இழுத்துக் கொண்டு மலைக் கோட்டை முனிஸ்வரன் கோயிலை நோக்கி நடந்தான் அவன்.

ஆனந்த் ஒருமுறை அந்த மனிதனின் பிடியிலிருந்து தலையைத் திருப்பிப் பார்த்த போது, சந்திரகிரி ஜனங்கள் ஒற்றையடிப் பாதையில் வெகுதூரம் போய் விட்டிருப்பதையும், ஒரு பெரிய பாறையைக் கடந்து சென்று தன் பார்வையிலிருந்து மறைவதையும் கண்டான்.

கோயிலை நோக்கித் தன்னை இழுத்துச் செல்லும் இந்த மனிதன் யாராக இருக்கும்? என்ன நோக்கத்துடன் இவன் வந்திருக்கிறான்? நாம் மலை மீது செல்ல முயற்சிப்பது இவனுக்கு எப்படித் தெரிந்தது, என்று பலவாறு எண்ணிக் கொண்டே நடந்தான் ஆனந்த்.

முனிஸ்வரன் கோயிலைச் சுற்றி முட்புதர்களும், கள்ளிச் செடிகளும் மண்டிக் கிடந்தன. முகம் தெரியாத மையிருட்டில் சுவரில் பட்டை பட்டையாக அடித்திருந்த வெள்ளை மட்டுமே தெரிந்தது.

ஆனால், அந்த மனிதனோ அந்த இடத்திற்கு வெகுநாள் பழக்கப்பட்டவனைப் போல, எந்தத் தடுமாற்றமும் இல்லாமல் இருட்டில் ஆனந்தையும் இழுத்துக் கொண்டு கோவில் படிகளில் ஏறினான்.

ஆனந்த் தன் கைகளை உதறி, அவனிடமிருந்து விடுவித்துக் கொண்டு அழுகையும் கோபமுமாக, ''நீ யாரு? என்னை எதுக்கு இங்க கொண்டு வந்தே?'' என்று கேட்டான்.

அவன் எந்த பதிலும் சொல்லவில்லை. தன் மடியில் வைத்திருந்த நெருப்புப் பெட்டியை எடுத்து 'சரக்' கென்று ஒரு குச்சியைப் பற்ற வைத்து கோவில் சுவர் பொந்து ஒன்றில் ஒளித்து வைத்திருந்த மண் விளக்கை எடுத்து ஏற்றினான். பரவிய வெளிச்சத்தில் அந்த மனிதனின் முகத்தை உற்று நோக்கிய ஆனந்த் மிகுந்த வியப்பும் மகிழ்ச்சியும் அடைந்தவனாக, ''நீங்களா!'' என்று கேட்டான்.

வெள்ளியாற்றில் நாகராஜனால் அவிழ்த்து விடப்பட்ட படகில் இருந்து அவனையும் அஸ்வினியையும் காப்பாற்றிய அதே பெரியவர் தான்!

''என்னைக் கொஞ்சமும் எதிர்பார்த்திருக்க மாட்டே இல்லியா?'' என்று அவர் பரிவுடன் கேட்க, ஆனந்த், ''என்னை எதுக்கு இங்க


செல்லம்

இழுத்து வந்தீங்க'' என்று ஆத்திரத்தோடு கேட்டான்.

'சட்'டென்று அவன் வாயைப் பொத்திய அவர் 'மெதுவாய்ப் பேசு, பாஞ்சாவோட ஆட்கள் இந்த மலை முழுவதும் நம்மை எதிர் பார்த்துட்டு இருக்காங்க,'' என்றார்.

ஆனந்த் வியப்புடன், ''நம்மை எதிர்பார்த்தா!'' என்று கேட்டான்.

''ஆமாம், உன்னையும், என்னையும் மட்டுமில்ல, போலீசைக் கூட எதிர்பார்த்துத் தயாராத்தான் இருப்பாங்க... இந்த மலைக் கோட்டை முனிஸ்வரன் கோயிலைத் தாண்டி மேலே அன்னிய ஆட்கள் நடமாட்டம் இருந்தாலே, பாஞ்சாவுக்கு உடனே செய்தி போயிரும்.... அதோட, இப்ப அவன் ரெண்டு முக்கியமான காரியங்களைச் செய்திருக்கான். .... அதனால, அவனோட ஆட்கள் ரொம்பவும் விழிப்பா இருப்பாங்க. இந்த நேரத்துல அவசரப்பட்டு, என்ன காரியம் செய்ய இருந்தே?'' என்றார் அவர்.

''ரெண்டு முக்கியமான காரியமா!''

''ஆமாம், ஒண்ணு உங்க வீட்ல இருந்த மணிமாறனை அவன் கடத்திட்டுப் போனது... இன்னொண்ணு, இந்த சந்திரகிரி ஜனங்க எல்லாரையும் ஒட்டு மொத்தமா, குடிபெயர்த்து மலை மேல கொண்டு போனது.''

அவர் சொன்னதைக் கேட்டுப் பெரும் திகைப்புக்குள்ளான ஆனந்த், ''அப்படின்னா, மணிமாறனை அவன் கடத்திட்டுப் போனது உங்களுக்குத் தெரியுமா?'' என்று கேட்டான்.

புன்னைக்காய் எண்ணெயில் எரிந்து கொண்டிருந்த மண் விளக்கிலிருந்து கிளம்பிய புகை நெடி அவனுக்குத் தொண்டைக் கமறலை ஏற்படுத்தியது. அதைக் கவனித்த பெரியவர், ''தம்பி இருமலை அடக்கிக்க. உங்கிட்ட நிறையப் பேசணும். இந்த விளக்கு எரியறது கூட ஆபத்து. இங்க ஆள் இருக்கிறது தெரியும். விளக்கை அணைச்சுடறேன்'' என்றார்.

விளக்கை அணைத்துவிட்டு வந்தவர், தரையில் ஒரு தூணோடு சாய்ந்து அமர்ந்து கொண்டு, அவனையும் உட்காரும்படி சொன்னார். இருட்டில் தட்டுத் தடுமாறி அவரருகே உட்கார்ந்தான் ஆனந்த்.

அவர் சன்னமான குரலில், ''தம்பி, உங்கிட்ட சொல்ல வேண்டிய காரியத்தை எல்லாம் சொல்லிடறேன்.... பாஞ்சாவோட அக்கிரமத்துக்கு முடிவு காலம் நெருங்கியாச்சு'' என்றார்.

சந்தேகம் விலகாமல் அவரைப் பார்த்துக் கொண்டிருந்த ஆனந்த் குறுக்கிட்டு, ''பெரியவரே, அதெல்லாம் இருக்கட்டும், எனக்கு இப்ப ஒரு முக்கயமான காரியம் தெரிஞ்சாகணும்.... முதல்ல நீங்க யார்னு சொல்லுங்க...? பாஞ்சா என்னை எதிர் பார்க்கறது ஒரு வேளை நியாயம், உங்களை எதுக்கு அவன் எதிர் பார்க்கணும்! அதோட, பாஞ்சா இங்க சட்ட விரோதமா செய்யற தொழில் என்ன என்பதையும் நீங்க சொல்ல வேண்டும்,'' என்று கேட்டான்.



''மியூசிகல் சேர் போட்டில இசை நின்னு போயும் ஏன் இவங்க உட்காரமா ஓடிக்கிட்டிருக்காங்க?''

சற்று நேரம் அமைதியாக இருந்தவர், மிகவும் மெல்லிய குரலில், அவன் காதோடு அவன் கேட்ட கேள்விகளுக்கெல்லாம் பதிலைச் சொல்லலானார்.

அதைக் கேட்கக் கேட்க ஆனந்தின் உடல் ஒரு கணம் சிலிர்த்துப் போயிற்று. மிகுந்த பரபரப்படைந்தவன், தன் காதில் விழுந்தது உண்மை தானா என்று நம்பக் கூடாதவனாகத் தவித்தான். ''நீங்க சொல்றது, உண்

மையா? உண்மையா!'' என்று பல தடவை கேட்டான்.

''உண்மைதான் தம்பி, ஆனா இது இப்போதைக்கு உன்னோடயே இருக் கட்டும்.... பாஞ்சாவின் பிடியில் இருந்து இந்த கிராம மக்களை விடு விக்கிற நேரத்துக்காகத்தான் இப்படித் தலை மறைவா காத்திருந்தேன்.... அவங்க மறுவாழ்வு தொடங்க அரசாங் கம் அருமையான வாய்ப்பை ஏற் படுத்திக் கொடுத்திருக்கு.... இந்த நேரத்துல நாம அவசரப்பட்டுக் காரி யத்தைக் கெடுத்துடக் கூடாது'' என் றார்.

''இன்னும் என்ன பொறுமை வேண்டியிருக்கு....? நான் வீட்டை விட்டுக் கிளம்பி ஒரு மணி நேரத் துக்கும் மேலாச்சு, இப்பவே போய் எல்லாக் காரியத்தையும் அப்பாக்கிட்ட சொல்றேன். நாளைக்குக் காலையில அவர் எப்படியும் போலீசுக்குப் புகார் கொடுப்பார்... ஒரு போலீஸ் படையே இந்த மலையைச் சூழ்ந்து கிட்டா பாஞ்சாவால என்ன பண்ண முடி யும்?'' என்று எழுந்தான் ஆனந்த்.




அவன் கையைப் பிடித்து இழுத்து உட்கார வைத்த பெரியவர், ''தம்பி, அதனால என்ன நடக்கும் தெரியுமா? பாஞ்சாவையும் அவன் கூட்டத்தை யும் நிச்சயமா பிடிக்க முடியாது. தகவல் தெரிந்ததும் அவன் எப்படி யாவது தப்பிச்சுப் போயிருவான். அதோட, இதெல்லாம் மணிமாறனால வந்ததுன்னு, அவனைப் பழி தீர்க்காம விடமாட்டான். மணிமாறனைக் காப் பாத்தற எண்ணம் உனக்கிருந்தா, தயவு செஞ்சு கொஞ்சம் பொறுமையா இரு'' என்று உணர்ச்சி வசப்பட்டுத் தழு தழுத்த குரலில் கேட்டுக் கொண்டார்.

சற்றே அமைதியாடைந்தவனாய் அமர்ந்த ஆனந்த், ''ஐயா, மலை மேல போய்த்தான் பாஞ்சாவைப் பிடிக்க முடியாதுன்னு சொல்றீங்க... ஆனா, தனது பொருள்களைக் கூட வெளியே கொண்டு போக அவன் வாகன வசதி உள்ள இடத்துக்கு வந்து தானே ஆகணும்....? அந்த வழி உங்களுக்குத் தெரியுமா....? அது மட்டும் தெரிஞ்சா அவனை எளிதா அங்கேயே மடக்கிட லாமே?'' என்று கேட்டான்.

பெரியவர் அவன் கையை இறுகப் பிடித்துக் கொண்டு, ''இப்படித்தான் நிதானமா சிந்திக்கணும்.... அவன், தன் உற்பத்திப் பொருட்களைக் கடத்தற வழி எனக்குத் தெரியும்.... சொல்றேன் கேளு, இத்தனை வருஷமா நான் மறைஞ்சு வாழறேன், இது கூடவா தெரிஞ்சுக்காம இருந்திருப்பேன்?'' என்று கூறத் தொடங்கினார். மிகுந்த கவனத்தோடு அவர் சொல்வதைக் கேட்டான் அவன்.

அன்று இரவு நடுநிசிக்குப் பின், ஆனந்த் தன் வீட்டிற்குத் திரும்பிய போது வீட்டில் விளக்குகள் எல்லாம் எரிந்து கொண்டிருந்தன! தங்கை அஸ்வினியும் அப்பாவும் அம்மாவும் மிகுந்த பரபரப்போடு அவனைத் தேடிக் கொண்டிருந்தனர்.

அவனைக் கண்டதும் ஓடி வந்து கட்டி அணைத்துக் கொண்ட அம்மா,



''எங்கேடா ஆனந்த் போயிட்ட! கொஞ்ச நேரத்துல நாங்க எப்படியெல்லாம் பதறித் துடிச்சுப் போயிட்டோம் தெரியுமா....? ஏற்கெனவே மணிமாறனைக் காணோம்னு தவிச்சுட்டு இருக்கிற நேரத்துல, உன்னையும் காணோம்னா என்ன நினைக்கத் தோன்றும்? இப்படி சொல்லாம, கொள்ளாம எங்கே போனே....? அதுவும் இந்த ராத்திரியில?'' என்று பதறினாள்.

ஆனந்த் அமைதியாக, ''மணிமாறன் இருக்கிற இடத்தைக் கண்டு பிடிச்சுட்டேன் அம்மா'' என்றான்.

''எங்கே இருக்கான், எங்கே இருக்கான்?'' என்று பரபரப்படைந்து மற்ற மூவரும் கேட்க, ''எல்லோரும் உட்காருங்க, சொல்றேன்'' என்றவன், பாஞ்சாவின் மலைச் சரிவுத் தோட்டத்தைப் பற்றியும், அதில் வேலை செய்வதற்காக அவன் கிராமத்து ஜனங்களைக் கொத்தடிமைகளாக வைத்திருப்பதையும் மணிமாறனின் தகப்பனார் அதற்கு உடன்பட மறுத்ததால் அவரை அவன் பகைத்ததையும், சந்திரகிரி மக்கள் அரசாங்க உதவியை ஏற்று மறுவாழ்வு தொடங்காமல் இருக்க, அவர்களைத் தந்திரமாக அவன் மலை மீது குடியேற்றி விட்டதையும், இப்போது மணிமாறனால் தனக்கு ஆபத்து வரும் என்று நினைத்து அவனைக் கடத்திக் கொண்டு போயிருப்பதையும் விவரித்த போது அம்மாவும், அப்பாவும் வியப்பால் வாயடைத்துப் போயினர்.

''இதெல்லாம் உனக்கு எப்படித் தெரியும் ஆனந்த்?'' என்று கேட்டார் பிரேம் நாத்.

தான் மணிமாறனிடமிருந்து தெரிந்து கொண்டவற்றையும், மலைக் கோட்டை முனிஸ்வரன் கோயிலில் தனக்கு அந்தப் பெரியவர் தெரிவித்த விவரங்களையும் ஒன்று விடாமல் விவரித்தான் அவன்.

அதையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த அம்மாவுக்கும் அப்பாவுக்கும் மூச்சே நின்று விடும் போலிருந்தது. எப்படிப்பட்ட ஆபத்தான காரியத்தில்

அவன் துணிந்து இறங்கி இருக்கிறான் என்பதை நினைத்து அவர்கள் அச்சமும் கலவரமும் அடைந்தனர். ஆனாலும், மணிமாறனிடம் அவனுக் கிருக்கும் அக்கறையை நினைத்து மனம் நெகிழ்ந்தனர்.

''எப்படியோ போனது போகட் டும், உடனே மணிமாறனை மீட்பதற் கான வழியைப் பாருங்க'' என்றாள் அம்மா.


சற்று நேரம் அமைதியாக சிந்தித்த பிரேம்நாத், ''ஒண்ணும் பயப்பட வேண்டாம், நாளைக்குக் காலையில கலெக்டருக்கும், புவனபுரம் போலீசுக் கும், முழு விபரத்தையும் சொல்லிட றேன்..... அந்தப் பெரியவர் தெரிவித்த படி பாஞ்சாலை, அவன் தோட்டத்தி லேயே மடக்க வேண்டியதுதான் சரி... மணிமாறனையும், இந்தக் கிராமத்து ஜனங்களையும் மீட்டுடலாம்'' என் றார்.

அவர்கள் மீண்டும் படுக்கைக்குச் சென்ற போது, கிழக்கே விடி வெள்ளி முளைத்திருந்தது. அஸ்வினி ஆனந் திடம், ''எங்கிட்ட கூடச் சொல்லாம நீ மட்டும் இப்படித் தனியா எழுந்து போக உனக்கு என்ன துணிச்சல்?' என்று பாய்ந்தாள்.

ஆனந்த் அவளைப் பார்த்து, ''கோவிச்சுக்காதே, உனக்கு மட்டும் இப்ப ஒரு பெரிய இரகசியத்தைச் சொல்லப் போறேன்'' என்றவன், அவ ளருகில் சென்று மெதுவாக, ''அன் றைக்குப் பரிசல்ல இருந்து நம்மைக் காப்பாற்றிய பெரியவர் உண்மையில் யார் தெரியுமா?'' என்று கேட்டுவிட்டு உண்மையைக் கூறினான்.

அதைக் கேட்டு நம்ப முடியாமல் திணறிய அஸ்வினி ''உண்மையா கவா?'' என்று தன் கண்களை அகல விரித்தாள்.


(வளரும்)



''ஊருக்குப் போற மாமாவுக்கு டாடா காட்டு!''

''அதான் காதை அசைச்சுக் காட்ட றேனே...!''

''ஏம்மா, எப்பத்தான் நீ எனக்கு நீச்சல் சொல்லிக் கொடுப்பே?''





''கழுகாரே, என் பையன் சமர்த்து. ஒருதரம் சொன்னா, அப்படியே ஒப்பித் துடுவான். அவனுக்கு ஏன் பாடம் சத்துத் தர மாட்டேங்கறீங்க?''

''திட்டினாலும் அப்படியே திரும்பிச் சொல்றானே?''


- செ. காணிக்கைராஜ்




'பொய் மணி'
கருத்து: ஆர்.வி.பதி
அமைப்பு 'ரே'
முத்து நல்லவன்தான் ஆனால்- ஒருநாள் தன் நண்பன் பாலுவுடன் வந்து கொண்டிருந்தான் அப்போது ஒரு பெரியவர்-
தம்பி மணி என்ன?
முத்து கைக் கடிகாரத்தைப் பார்த்து-
ஒன்ப- ! தூங்க.
சித்திரம்:
பெரியவர் பதறியபடி சென்றார்-
ஐயோ ஒன்பதே கால் வண்டியைப் புடிக்கணுமே!
மணி எட்டரை தானே! ஏன் பொய் சொன்னே? பாவம் எப்படிப் பதறி ஓடறார்!


பதறி ஓடணும்னு தானே பொய் சொன்னேன்!
அவர் ஓடறது எத்தனை வேடிக்கையா இருக்கு பார்!
நீ எப்பத்தான் மாறப் போறியோ?
மறுநாள்- சைக்கிளில் தபால் காரர் தம்புசாமி வந்தார்-
தம்பி! மணி என்ன? என் வாட்சு திடீர்னு ஓடலே..
ஒன்பதே காலுங்க! முச்சந்தி தபால் பெட்டியில நீங்க ஒன்பது மணிக்கே தபால் எடுக்கணுமே?


அவசர அவசரமாக தம்புசாமி தபால் பெட்டியைத்திறந்து கடிதங்களை எடுக்க..
தபால்
அப்போது— சபாபதி ஒரு கடிதத்துடன்...
இதையும் வாங்கிக்-
-கோ..!
தபால்
நேரம் ஆயிட்டுது!
கோபமுடன் சபாபதி—
எட்டே முக்கால் கூட ஆகலே..
என்ன..?
அந்தப் பையன் பொய் மணி சொல்-
-லிட்டானே!


ஓ.. அவனா?! போன வாரம் என்னையும் அப்படித்தான் சொல்லி பதறி ஓடச்செய்தான்!
அப்போது– முத்து வருவதைக் கண்ட ஒருவர்–
அதோ! அவன் தான். தரும அடி அடிங்க..
முத்து அடி வாங்குவதைக் கண்ட சபாபதி–
அவன் என் பையன் தான்! எவ்வளவோ புத்தி சொல்லியும் திருந்தலே!
அழுது கொண்டே வந்த முத்து தந்தை- -யிடம்.
எனக்கு புத்தி வந்தது. இனிமே பொய் மணி சொல்ல மாட்டேன்!


பட்டத்துக் கழுதை

சின்னபாபு

சோணகிரியூர் மகாராஜா சொக்கப்பர் அடக்க முடியாத கோபத்துடன் எதிரேயிருந்த அமைச்சரையும் அரச குருவையும் பார்த்தார். இருவரும் நடுங்கினர்.

''பட்டத்து ராணி, பட்டத்து இளவரசர், பட்டத்து யானை, பட்டத்துக் குதிரை என்று எல்லாமே இருக்கும் போது ஏன் பட்டத்துக் கழுதை என்று ஓர் கழுதையைத் தேர்ந்தெடுத்துப் பெருமைப்படுத்தக் கூடாது?''

''உங்கள் கேள்வியில் உள்ள நியா



யம் எங்களுக்குத் தெரிகிறது மகாராஜா. ஆனால், இதுவரை உங்கள் முன்னோர்களிலும் சரி, மற்ற அரசபரம்பரைகளிலும் சரி, யாருமே பட்டத்துக் கழுதை என்ற ஒன்றை வைத்துக் கொண்டதாக வரலாறே கிடையாது'' என்றார் அரச குரு.

''நான் மற்றவர்களிமிருந்து மாறுபட்டவன். வரலாறு படைக்கப் பிறந்தவன். யாருமே செய்யாதது என்பதற்காக நானும் செய்யாமல் இருப்பது மடத்தனம். எனக்கும் மற்றவர்களுக்கும் வித்தியாசம் வேண்டாமா?'' என்று கனல் பொங்கக் கேட்டார் சொக்கப்பர்.

''இருந்தாலும் மகாராஜா....'' என்று அமைச்சர் இழுத்தார்.

மன்னர் பொறுமையிழந்தார்.

''எந்த நொண்டிச்சாக்கும் எனக்குத் தேவையில்லை. க ழு தை இனம் உங்களை என்ன செய்தது? எதற்காக அதை இப்படிக் கரித்துக் கொட்டுகிறீர்கள்? யானையைவிட, குதிரையைவிட எந்த விதத்தில் கழுதை குறைந்து விட்டது? தன்னுடைய உருவம், தனக்கு ஆண்டவன் அளித்துள்ள வலிமைக்கு ஏற்றபடி அது தன்னாலான தொண்டை மனித குலத்துக்குப் பொறுமையோடு செய்து கொண்டுதானே இருக்கிறது?''

கழுதை இனத்துக்குப் பரிந்து பேசும் மன்னரை வியப்போடு நோக்கினர் அரசகுருவும் அமைச்சரும். மன்னர் தொடர்ந்தார்.

''பொறுமைக்கு இலக்கணம் பூமித்

தாய் என்கிறீர்களே....? அது கூடத் தப்பு என்கிறேன் நான். பொறுமை மீறினால் பூமிகூட புகம்பங்களை உண்டாக்கி, நாடு நகரங்களை அழித்து விடுகிறது. ஆனால், எந்தக் கழுதையாவது தனக்கு மனிதன் இழைக்கும் கொடுமைகளைப். பொறுக்காது அவனை உதைத்ததாக வரலாறு உள்ளதா? எத்தனை பாரம் ஏற்றினாலும், என்ன வேலை வாங்கினாலும் கழுதை எத்தனை பொறுமையோடு தாங்கிக் கொள்கிறது? கழுதை இனத்திற்கு நான் சிறப்புச் செய்ய விரும்புகிறேன். அதனால், நல்ல சிறப்பான ஒரு கழுதையைத் தேர்ந்தெடுத்து அதைப் பட்டத்துக் கழுதையாக்குங்கள்.''

அமைச்சரும், அரசகுருவும் திகைப் போடு மகாராஜாவை நோக்கினர்.

''பட்டத்து யானைக்கும், பட்டத்துக் குதிரைக்கும் என்னவெல்




லாம் பெருமைகள், சிறப்புகள் வழங்கப்படுகின்றனவோ, அத்தனையும் பட்டத்துக் கழுதைக்கும் கிடைக்கும்படி செய்யுங்கள். எல்லாவற்றையும் விட முக்கியமானது, முடிசூட்டு விழா முடிந்ததும் நடக்கும் ஊர்வலத்தில், நான் பட்டத்து யானையின் மேலோ, இல்லை குதிரையின் மேலோ ஊர்வலம் வரப்போவதில்லை! பட்டத்துக் கழுதையின் மேல்தான் ஊர்வலம் வரப்போகிறேன்.''

பிரமித்துப் போன அமைச்சருக்குத் தன் நிலையை அடையச் சிறிது நேரமாயிற்று!

சொக்கப்பர் ஒல்லியானவர் அல்ல. நல்ல குண்டு! பட்டத்துக் குதிரையின் மேல் பவனி வருவது என்றாலே அந்தக் குதிரை அவரைத் தாங்குமா என்பது சந்தேகம்! அந்த நிலையில் கழுதைமேல் மகாராஜா பவனி வருவது என்றால் நடக்கக் கூடிய காரியமா? கழுதை தரையோடு தரையாய் உட்கார்ந்து விடுமே!

'நீங்கள் குண்டு. உங்களைக் கழுதையால் தாங்க முடியாது' என்பதை மகாராஜாவிடம் எப்படி எடுத்துச் சொல்வது என்று அரசகுரு தயங்கினார். ஆனால், அமைச்சர் தயங்கவில்லை.





"ஆபரேஷன் தியேட்டர்ல டாக்டரும் நர்ஸும் பேசிக்கிட்டே இருப்பாங்களாப்பா?"

"ஏன்டா இப்படிக் கேட்கறே?"

"பின்னே ரெண்டு பேரும் ஏன் வாய்ல துணியை வெச்சுக் கட்டிக்கிறாங்க?"

- சீர்காழி வி. ரேவதி

வந்தது வரட்டும் என்று அவர், "அரசே! நீங்கள் பட்டத்துக் கழுதை மேல் வேண்டுமானாலும் பவனி வாருங்கள், இல்லை பட்டத்துக் ஆடு என்று ஒன்றைத் தேர்ந்தெடுத்து அதன் மேல் வேண்டுமானாலும் பவனி வாருங்கள். எனக்கு மறுப்பே இல்லை. உங்கள் விருப்பத்தை நிறைவேற்றுவது என் கடமை. ஆனால், நீங்கள் பட்டத்துக் கழுதைமேல் பவனி வருவதில் ஓர் ஆபத்து இருக்கிறது. உங்களைத் தாங்கக் கூடிய அளவுக்கு வலுவுள்ள கழுதை எதுவும் இந்த உலகில் இருக்கும் என்ற நம்பிக்கை எனக்கு இல்லை" என்று திறமையாகக் கூறிவிட்டார்.

சொக்கப்ப மகாராஜா யோசனையில் ஆழ்ந்தார். அமைச்சர் துணிச்சலாக எழுப்பிய பிரச்சனையில் உண்மை இருப்பதை அவர் உணர்ந்தார். 'சட்'டென்று அவருக்கு ஒரு யோசனை தோன்றியது.

"அமைச்சரே... ஒரு கழுதைக்குப் பதில் எட்டுக் கழுதைகளை வைத்துத் தேரை இழுக்கும்படி செய்யுங்கள். நான் கழுதைத் தேரில் பவனி வந்துவிட்டுப் போகிறேன். என்னுடைய நோக்கமெல்லாம், பட்டத்துக் கழுதைக்குச் சிறப்புச் செய்ய வேண்டும் என்பதுதான். அதோடு, இந்தப் பொல்லாத பட்டத்து யானையையும், பட்டத்துக் குதிரையையும் மட்டம் தட்ட வேண்டும் என்பதும்தான்," என்று தனது இறுதி முடிவைத் தெரிவித்தார் மன்னர் சொக்கப்பர்.

மன்னர் விருப்பப்படியே செய்வதாக அமைச்சரும் அரசகுருவும், விடை பெற்றுச் சென்றனர்.

சொக்கப்ப மகாராஜா இப்படிக் கோமாளியாக மாறியதற்குப் பல காரணங்கள் உண்டு. சின்ன வயதில் இருந்தே மகாராஜாவுக்கு மற்றவர்களைச் சீண்டி அவர்கள் வேதனையை வேடிக்கை பார்க்கும் அல்பத்தனமான ஆசை இருந்தது. குறிப்பாக மிருகங்களைச் சீண்டுவதில் அவருக்கு அளவில்லாத ஆசை.

ஒருமுறை அரண்மனை சமையலறையில் எலிப் பொறி வைத்திருந்தார்கள். அதில் ஓர் எலி சிக்கிக்கொண்டது. சொக்கப்பர் தனது திறமைகளையெல்லாம் காட்டி அதன் இடுப்பில் ஒரு கயிற்றைக் கட்டி, உயிரோடு அதை வெளியே எடுத்து வந்தார்! எலி சும்மா இருக்குமா? அது அங்கமிங்கும் ஓடியது. கயிற்றைக் கையில் பிடித்தபடி சொக்கப்பரும் தன் வயதை ஒத்த தோழர்கள் பின் தொடர ஓடினார் கூடவே! அந்த எலி விளையாட்டை அரண்மனை முழுவதும் விளையாடினார் சொக்கப்பர்.

அரண்மனை வாசலில் பட்டத்து யானை, கரும்பைக் கடித்தபடி நின்றுகொண்டிருந்தது. கயிற்றில் கட்டிய எலியோடு அங்கே வந்த சொக்கப்பருக்கு, யானையைப் பார்த்ததும் ஒரு விபரீதமான ஆசை தோன்றியது. எலியை யானை இருந்த பக்கம் ஓட்டினார். யானை அரண்டு பிளிறியபடி ஓட, சொக்கப்பர் எலியோடு அதைத் துரத்தினார். ஒரு நிலை வந்ததும் யானை வெருண்டு திரும்பியது. சொக்கப்பரைத் துதிக்கையால் சுழற்றித் தூக்கியது! யார் செய்த புண்ணியமோ, சொக்கப்பரின் உயிர் அன்று தப்பியது! அன்றிலிருந்து, பட்டத்து யானை சொக்கப்பரைக் கண்டாலே கோபத்தோடு பிளிரும்!

யானை அப்படி ஆயிற்றா? பட்டத்துக் குதிரைக்கு என்ன ஆச்சு தெரியுமா? திபாவளியன்று சொக்கப்

பர் கம்பி மத்தாப்பு விட்டுக் கொண்டிருந்தார். எதிரே பட்டத்துக் குதிரையை அழைத்துக் கொண்டு போனார்கள். அதன் குஞ்சம் நிறைந்த வாலைப் பார்த்ததும், சொக்கப்பருக்கு ஒரு பயங்கரமான ஆசை பிறந்தது! எரிகின்ற கம்பி மத்தாப்போடு வந்தார். முடி அடர்ந்த அதன் வால் குஞ்சத்தில் வைத்தார்! அது 'திகு திகு' வென்று எரிந்தது! வலிமை பொருந்திய அந்த அரேபியக் குதிரை, இரும்புச் சட்டம் போன்ற தன் பின்னங்காலால் ஓங்கி ஓர் உதை கொடுத்தது! அதன் விளைவு, மூன்று மாதங்கள் வரை சொக்கப்பர் படுத்த படுக்கையாகக் கிடந்தார்!

இவ்வளவு அனுபவப்பட்ட பிறகும் கூட சொக்கப்பரின் மனப்போக்கு மாறவில்லை.

ஒரு முறை யானை வெடி ஒன்றைக் கொளுத்தி, சுவர் ஓரமாக நின்று கொண்டிருந்த கழுதையின் மேல் போட்டார். வெடி பயங்கரமாக வெடித்தது! ஆனால், கழுதை சிறிதும் அசையக்கூட இல்லை!

''எவ்வளவு பொறுமையுள்ள அற்புதமான விலங்கு? '' என்று கழுதைகள் மேல் அலாதியான அன்பு ஏற்பட்டது சொக்கப்பருக்கு. அந்தக் கழுதை, காலில் அடிபட்டு நடக்கக்கூட முடியாமல் இருந்ததாலேயே, யானை வெடியின் அதிர்வை வேறு வழியில்லாது தாங்கி நின்றது என்ற உண்மை அவருக்குத் தெரியவில்லை.

முடிசூட்டுவிழா நகர்வலத்திற்கு சொக்கப்பர் பட்டத்து யானையையும், பட்டத்துக் குதிரையையும் விலக்கி விட்டு, கழுதைக்கு ஏன் முதலிடம் தந்தார் என்பது உங்களுக்குப் புரிந்திருக்குமே.

சொக்கப்பர் ஆணையிட்டபடி பணிகள் வேகமாக நடந்தன. இராஜ்யத்தில் இருந்த கழுதைகளுக்கெல்லாம் திடீரென்று அதிர்ஷ்டம் அடித்தது! பட்டத்துக் கழுதையாக ஒன்றைத் தேர்ந்தெடுக்கவும், தனியான கழுதைப் படை அமைக்கவும் அவைகளை அரண்மனை முற்றத்தில் வந்து திரளும்படி அமைச்சர் அறிவிப்புக் கொடுத்திருந்தார். வலிமையுள்ள கழுதைகளாக நூற்றி ஒன்பது கழுதைகள் தேர்ந்தெடுக்கப்பட்டன. ஒன்று தலைமைக் கழுதையாக; பட்டத்துக் கழுதையாக கௌரவிக்கப்பட்டது. அதற்குத் தோழர்களாக எட்டுக் கழுதைகள். மீதி நூறு கழுதைகளைக் கொண்டு கழுதைப் படை அமைக்கப்பட்டது.

பட்டத்து யானைக்கு உள்ளது போலவே பட்டத்துக் கழுதைக்கு தங்கப்பட்டம், இரண்டு பக்கமும் பொன் குஞ்சங்கள், அலங்கார பொன் ஆடை, வெள்ளி மணிகள், கால்களுக்கு தங்கச் சலங்கைகள், பொன் கயறு சேணம், 'வண்ணக் குடை எல்லாம் தயாராயின!

பட்டத்துக் கழுதையின் எட்டுத் தோழர்களுக்கும் இதே போன்ற தனி அலங்காரம். முடிசூட்டு விழாவிற்கு எல்லா நாடுகளிலிருந்தும் மன்னர்கள் வந்து திரண்டனர். சொக்கப்பரின் மேலுள்ள அன்பினாலோ, மரியாதையினாலோ அல்ல. புதுமையான பட்டத்துக் கழுதையையும், கழுதைகள் பூட்டிய முடிசூட்டுவிழா பவனியையும் காணத்தான்.

முடிசூட்டுவிழா முடிந்தது. சொக்கப்

★ பள்ளிகளில் பெற்றோர் தினம் நடத்துவது வழக்கம். ஆனால் பாம்பாய் அந்தேரியில் உள்ள ஹோலி பேமிலி உயர்நிலைப்பள்ளி புதுமையாக 'தாத்தா - பாட்டி' தினம் ஒன்றைக் கொண்டாடியது! மாணவ மாணவிகளின் தாத்தா பாட்டிகளை மட்டும் வரவழைத்து அவர்களுக்கு உற்சாகம் ஊட்டி, பலவித கலை நிகழ்ச்சிகளை அவர்கள் முன்பு நடத்தியது இந்தப் பள்ளி!

- தா. ஷேக் உசேன், செஞ்சி - 2.





எலும்புக் கூட்டுக்கும் தூக்கு!

★ 17 ம் நூற்றாண்டின் இறுதியில் இரண்டாம் சார்லஸ் என்னும் மன்னன் இங்கிலாந்தை ஆண்டான். அவனுடைய தந்தையின் மரணத்திற்குக் காரணமாயிருந்த 12 பேர்களுக்கு அவன் மரண தண்டனை விதித்தான்.

மரண தண்டனை விதிக்கப்பட்ட குற்றவாளிகளில் ஒருவரான ''ஆலிவர் கிராம்வெல்'' தண்டனையை நிறைவேற்றுவதற்கு முன்பே இறந்து விட்டார்.

எனினும் அரசனின் ஆணையை நிறைவேற்ற வேண்டும் என்ற கட்டளையின்படி - இறந்த அவருடைய கல்லறையைத் தோண்டி அவருடைய எலும்புக்கூட்டைத் தூக்கில் தொங்கவிட்டனர்!

- ஆறுபாதி புகழேந்தி, மயிலாடுதுறை.



தெரியாதையா

★ ராமு என்ற மாணவன். அவனுக்கு ஒன்றுமே தெரியாது. ஆசிரியர் ஏதாவது கேள்விகள் கேட்டால் 'தெரியாது' என்றே பதில் வரும். ஒருநாள் இன்ஸ்பெக்ஷன் வர ராமுவிடம் கேள்வி கேட்குமாறு ஆசிரியரிடம் இன்ஸ்பெக்டர் கூறினார். ஆசிரியருக்கு ஒன்றும் தோன்றவில்லை. ஒரு வினாடி சிந்தித்து ராமுவைப் பார்த்து 'ஆந்தைக்குப் பகலில் கண் தெரியுமா?' என்றார். உடனே ராமு வழக்கம் போல் 'தெரியாது' என்று கூற இன்ஸ்பெக்டர் மகிழ்ந்தார்.

- மு. சாத்தப்பன், கோனாபட்டு.


பர், தங்கத் தேரில் ஏறி அமர்ந்தார். அந்தத் தேரை இழுத்துச் செல்லப் பூட்டப்பட்டிருந்த எட்டுக் கழுதைகளுக்கு, பட்டத்துக் கழுதை தலைமை வகித்து இழுத்தது! தேர் நகர்ந்தது.

அந்த ஒன்பது கழுதைகளுக்கும் அரண்மனைக்கு வந்ததிலிருந்து தின்பதற்குக் கா கி த ம் கிடைக்கவில்லை! பச்சைப்புல், வேகவைத்த கொள், வெல்லம், அரிசி, தேங்காய், கரும்புகள் கிடைத்தன. அரசரது ஆணைப்படி, பட்டத்து யானை பட்டத்துக் குதிரைக்குச் சமமாகவல்லவா அவைகளை நடத்த வேண்டும்? அதனால், அவைகளுக்குக் காகிதம் போடவில்லை! காகிதம் தின்னாததால் உற்சாகமிழந்திருந்த அவை, எங்கேயாவது காகிதம் கிடைக்காதா எ ன் று பார்த்துக் கொண்டே இருந்தன!

ஊர்வலம் நகர்ந்தது. கழுதைத் தேரில் பவனி வரும் சொக்கப்பருக்குத் தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவிக்க சோணகிரிக் குழந்தைகள் இரண்டு பக்கமும் அணிவகுத்துத் திரண்டிருந்தனர். புதுமையான கழுதைத் தேர் ஊர்வலம் அவர்கள் உற்சாகத்தை அதிகப்படுத்தியது. அவர்கள் தங்கள் கைகளில் சோணகிரிக் கொடியைப் பிடித்திருந்தனர். அவைகளெல்லாம் காகிதத்தால் ஆ ன வை! அவர்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்து கொடியசைத்தனர்.

காகிதத்திற்காக ஏங்கியிருந்த கழுதைகள் காகிதத்தைக் கண்ட மகிழ்ச்சியில் பெரிய குரலெடுத்துப் பாடின. அவைகளுக்குத் தலைமை வகித்த பட்டத்துக் கழுதையார், பாதையை விட்டு விலகி, குழந்தைகள் கையில் இருந்த கொடிகளை நோக்கி நகர்ந்தார்! அவரது தோழர்களும் அவரைப் பின்பற்றினர். ஊர்வலம் திசைமாறியது. கூட்டம் தடுமாறியது! யா ன் க ள் பிளிறின. பீதியடைந்த கழுதைகள் ஓட்டமாக ஓடின. மகாராஜாவின் தேரும் தறிகெட்டு ஓடியது. அப்புறம் என்ன? சொக்கப்ப மகாராஜா இப்பொழுது படுத்த படுக்கையாகக் கிடக்கிறார். உடல் தேறியதும் பட்டத்துக்கு உரியதாக இனி எதைத் தேர்ந்தெடுக்கப் போகிறாரோ!






★ நாட்டிங்ஹாம் நகரத்தில் விக்டோரியா சென்டரில் பூமிக்கடியில் ஒரு கார் பார்க்கிங் இருக்கிறது. இதுதான் பிரிட்டனிலேயே மிகப் பெரிய கார் பார்க்கிங் சுரங்கம். இதில் ஒரே சமயத்தில் 1650 கார்களை நிறுத்த முடியும்.

- க.இரா. விஜயகுமார், செஞ்சி - 2.



★ உலகின் மிகச்சிறிய நாடு பஸிபிக் பெருங்கடலில் உள்ள துவாலு. இந்நாட்டின் பரப்பளவு 0.2 ச.கி.மீ மட்டுமே. இதன் மக்கள் தொகை 0.11 மில்லியன். இதன் தலைநகரம் போங்காபலே. இந்நாடு பவழப்பாறைகளாலானது.

- மு. பூபாலன், மூஞ்சூர்பட்டு - 57.



★ இந்தியா சுதந்திரம் பெறுவதற்கு முன் நடந்த நிகழ்ச்சி இது :

ஒருமுறை வி.வி. கிரி அவர்கள் இரயில் பயணம் செய்தார். அவருடன் ஒரு ஆங்கிலேயரும் பயணம் செய்தார்.

கிரி குளிப்பதற்காகச் சென்ற சமயத்தில் அந்த ஆங்கிலேயர் அவருடைய செருப்பை எடுத்து வெளியே எறிந்து விட்டார்.

திரும்பி வந்த கிரி நிலைமையைப் புரிந்து கொண்டார். அந்த ஆங்கிலேயர் குளிக்கச் சென்ற சமயத்தில், அவருடைய கைக் கடிகாரம் சீட்டில் இருந்ததை பார்த்தார் கிரி. அதை எடுத்து வெளியே எறிந்தார்.

சற்று நேரத்தில் திரும்பி வந்த அந்த ஆங்கிலேயர், ''என்னுடைய கைக் கடிகாரத்தைப் பார்த்தீரா?'' என்று கிரியிடம் கேட்டார்.

அதற்கு கிரி, ''ஆம் எனது செருப்பைத் தேடிக் கொண்டு போயிருக்கிறது'' என்றார்.

- தா. ஷேக் உசேன், செஞ்சி.




★ இராமாயணத்தை எழுதிய ''ராமதாஸர்'' தினமும் ராமாயணத்தை மக்களுக்குப் படித்துக் காட்டுவார். அனுமார் மாறுவேடத்தில் வந்து கேட்பார். ஒரு முறை ''அனுமார் அசோகவனத்தை அடைந்தார். அங்கு பூத்திருந்த வெண்ணிற மான புஷ்பங்களைப் பார்த்தார்'' என்று படித்தார். அனுமார் சொன்னார், ''வெள்ளைப் பூக்களை அல்ல, அவை சிவப்பு நிறமுடையதே!'' ''இல்லை!'' என மறுத்தார் ராமதாஸர். ''பார்த்தவன் நான் சொல்கிறேன்'' என்றார் அனுமார். வழக்கு ராம

ரிடம் சென்றது. ''பூக்கள் வெள்ளை நிறமே. அனுமாரின் கண்கள் சிவப்பாக இருந்ததால் அ வ ரி ன் கண்களுக்கு வெள்ளை வண்ணப் பூக்கள் கூடச் சிவப் பாகவே தெரிந்தன,'' என்றார் ராமர்!

மனதின் கோபம் வெள்ளை மலர் களைக் கூட சிவப்பாகக் காட்டியது. கொடிது கொடிது கோபம் கொள்வதே! ''ஆதலினால் நான் சொல்வேன் சினத்தை முன்னே வென்றிடுவீர். மேதினியில் மரண மில்லை.'' என்றார் பாரதியார்.

- சுகாராஜ், மதுரை.



இரவில் அதிக எடை!

★ கப்பலின் எடையானது, பகலை விட இரவில் அதிகமாக இருக்கும்! 'ஆகர் ஷண சக்தி' சந்திர ஒளியில் அதிகரிப்பதால் ஏற்படும் மாற்றத்தால்தான் இது என்கின் றனர் விஞ்ஞானிகள்!

- எஸ். மனோகரன், சங்கமங்கலம்.



★ ஜெர்மனியின் பிரதமராக இருந்த பிஸ்மார்க் மூன்று பள்ளிகளில் படித்தவர். மூன்று அரசர்களிடம் சேவை செய்தவர். மூன்று போர்களில் பங்கு கொண்டவர். மூன்று சமாதான ஒப்பந்தங்களில் கையெ முத்திட்டவர். அவருக்கு மூன்று பெயர் களும் மூன்று பட்டங்களும் உண்டு. மூன்று குழந்தைகளுக்குத் தந்தை. மூன்று முறை அவரைக் கொல்ல முயற்சி நடந்தது.

- ந. நவமணி, நல்லாலம்.



★ திருச்சிக்குப் பக்கத்திலே உள்ள வாய்த்தலை கிராமத்திற்குப் போனால் ஒரு அதிசயத்தைப் பார்க்கலாம். இராஜஸ்தா னில் எலியை வணங்குவதைப் போல. வாய்த்தலை கிராமத்தார் முதலையை தெய்வமாக வழிபடுகின்றனர்! அதுமட்டு மல்ல, முதலைக்கென்று சிறு கோயிலும் அமைத்துள்ளனர். முதலைக்குக் கோயில் வேறு எங்காவது உள்ளதா?

; செம்பை, பாலகிருஷ்ணன்.



கழித்தல் குறியைத் தந்தவர்!

★ கணிதத்தில் பயன்படுத்தப்படும் கழித்தல் குறியைக் கண்டு பிடித்தவர் யார் என்று தெரியுமா? வியர்னார் டோவால் என்ற இத்தாலி நகர வியாபாரி. அவர் அதனை 1202 ஆம் ஆண்டு கண்டு பிடித்தார்.

- கே.எல். குமணன்,
கல்லிடைக்குறிச்சி.



★ ஆதி காலத்தில் குமரிமாவட்டத் தில் புலிகள் அதிகம் வாழ்ந்திருக்கும் போலிருக்கிறது. சில ஊர்களின் பெயரைப் பாருங்கள். வியப்பாக இருக்கும். புலியூர் குறிச்சி, வீரப்புலி, புலியிறங்கி, புலித்தான் குறிச்சி.

- தா. சிந்துகுமார்,
திருவட்டார் (குமரி)



✱ மகளிருக்கான ஓப்பன் போட்டியில் ஆர்த்தியின் ஆட்டத்தைக் கவனிக்கிறார் நேஷனல் சேம்பியன் அநுபமா கோகலே.

வயது பத்துதான் — சாதனை பெருமைதான்!

நேரு நூற்றாண்டு விழாவை ஒட்டி இந்தியன் ஓவர்சீஸ் வங்கி பள்ளிச் சிறுவர் சிறுமியர்க்கான பல போட்டிகளை நடத்த ஏற்பாடு செய்தது. அதில் செஸ் போட்டியும் இருந்தது.

'செஸ் போட்டியில் கலந்து கொள்ள நாமும் பெயர் கொடுத்தால் என்ன?' என்ற ஆசை எழுந்தது அந்தச் சிறுமியின் மனத்தில். இவ்வளவுக்கும் அவளுக்குச் செஸ் ஆட்டத்தின் ஆனா, ஆவன்னா கூடத் தெரியாது! அவள் அண்ணன் ஆடுவதைப் பார்த்திருக்கிறாள். அண்ணனிடம் கேட்டுக் கற்றுக் கொள்ளலாமே என்று யோசித்தாள். ஒருவேளை போட்டியில் தோற்று விட்டால் எல்லோரும் கேலி செய்வார்களே என்ற தயக்கமும் எழுந்தது.

தங்கையின் மன ஓட்டத்தைச் சரியாகப் புரிந்து கொண்டு விட்டான் அண்ணன் ராஜா. அவளை விட அவன் ஒன்றரை வயது பெரியவன். அவ்வளவே.

''அடுத்த வாரம்தானே போட்டி? அதுக்குள் நன்றாக செஸ் ஆட நான் உனக்கு சொல்லித் தரேன். தைரியமா போட்டிக்குப் பெயரைக் கொடு'' என்று தங்கையை ஊக்கினான் அண்ணன்.

''தோத்துப் போனால் எல்லோரும் கேலி பண்ணுவாங்களே?''

''அட, ஆட்டம்னா வெற்றியும் தோல்வியும் கலந்துதான் இருக்கும். எப்பவும் நமக்குத்தான் வெற்றி கிடைக்கணும்னால் அது விளையாட்டே



மிலிடெரி ஓட்டல்ல கோழியை வேலைக்கு வைக்கவே கூடாது! வந்தவர் "கோழிப் பிரியாணி" கேட்டதும் இப்படி ஓடுதே!

- ச. காளிக்கைராஜ்

இல்லே. ஆரம்பத்தில், போட்டிகளில் கலந்து கொள்வது என்பதே, ஒரு அனுபவம் பெற வேண்டும் என்பதற்காகத்தான் இருக்க வேண்டும். ஒவ்வொரு போட்டியும் ஒவ்வொருவிதமான அனுபவத்தைத் தரும். நீ எங்கேயெல்லாம் கோட்டை விடறேங்கறதை அறிந்து கொள்ளவும், திருத்திக் கொள்ளவும் போட்டிகள் உனக்கு வாய்ப்பளிக்கும். தைரியமாகக் கலந்து கொள்'' என்று ஊக்கினான் ராஜா.

ஒருவழியாக அந்தச் சிறுமி, எட்டு வயதிற்குட்பட்ட பள்ளி மாணவ மாணவிகளுக்கான செஸ் போட்டியில் கலந்து கொள்ளப் பெயர் கொடுத்தாள். அண்ணன் சொல்லிக் கொடுத்ததைக் கவனமாகக் கேட்டு கற்றுக் கொண்டாள். புதிய உற்சாகத்துடனும் நம்பிக்கையுடனும் போட்டியில் கலந்து கொண்டு விளையாடினாள்.

போட்டியை நடத்தும் பொறுப்பை 'ஆல் இந்தியா செஸ் சங்கம்' ஏற்றிருந்தது. சங்கத்தின் இணைச் செயலாளர் ஏ. ஜே. மணவாளன் பள்ளி மாணவ மாணவிகள் ஆடும் ஆட்டத்தைக் கண்காணித்துக் கொண்டிருந்தார். ஆர்த்தி (இதுதான் சிறுமியின் பெயர்) ஆடிய ஆட்டம் அவரது கவனத்தைக் கவர்ந்தது. அவள் கலந்து கொள்ளும் முதல் போட்டி அதுதான் என்பதையும், ஒரு வாரமாகத்தான் அவள் அதைக் கற்று வருகிறாள் என்பதையும் அறிந்த போது அவருக்கு அதிசயமாக இருந்தது. அவர் எதிர்பார்த்தபடியே அந்தப் போட்டியில் எட்டே வயதான சிறுமி ஆர்த்தி இரண்டாவது இடத்தைப் பெற்றுப் பரிசு வாங்கினாள்!

ஆர்த்திக்கு செஸ் ஆட்டத்தில் உள்ள ஆர்வம், மின்னல் வேகத்தில் சிந்தித்து, முடிவெடுத்து, கவனத்தோடு காய்களை நகர்த்துவது, அணுகுமுறை எல்லாமே அவளுக்கு செஸ் ஆட்டத்தில் நல்ல எதிர்காலம் இருப்பதைக் கோடிட்டுக் காட்டின. இதைச் சரியாகக் கணக்கிட்டு விட்ட மணவாளன், ஆர்த்தியின் தந்தையிடம், முறைப்படி ஆர்த்திக்குப் பயிற்சி அளித்தால் வெகு விரைவில் செஸ் ஆட்டத்தில் அகில இந்திய இடத்தைப் பிடிக்கும் வாய்ப்பு பிரகாசமாக உள்ளதை எடுத்துக் கூறினார்.

செஸ் ஆட்டத்தில் உள்ள ஆர்வம் பெண்ணின் படிப்பைப் பாதித்து விடுமோ என்று தயங்கிக் கொண்டிருந்தார் ஆர்த்தியின் தந்தை இராமசாமி. இந்தத் தயக்கத்தை ஆர்த்தியின் பள்ளித் தலைமை ஆசிரியர் வெங்கடாசலம் தான் போக்கி வைத்தார்.

ஆர்த்திக்கு இப்பொழுது ஒன்றரை ஆண்டுகளாக முறைப்படி செஸ் ஆட்டத்தில் பயிற்சி அளித்து வருபவர் ஆர். ஸ்ரீதரன்.

நேரு நூற்றாண்டு விழாவில் பெற்ற பரிசு, ஆர்த்திக்குப் புதியதொரு பாதையைத் திறந்து விட்டுள்ளது. இயற்கையான ஈடுபாடு, ஸ்ரீதரனின் பயிற்சி முறைகள், பெற்றோர்களின் ஊக்கம், பள்ளி ஆசிரியர்களின் கவனிப்பு, அண்ணனின் ஆர்வம் எல்லாமாகச் சேர்ந்து செஸ் ஆட்டத்தில் பல வெற்றிகளைக் காண அவளுக்கு உதவியுள்ளது. குறிப்பிடத்தக்கவை மாநில அளவிலான பத்து வயதிற்குட்பட்ட ஜூனியர் போட்டியில் பெற்ற முதலிடம், இந்திய அளவில் ஓப்பன் டென்னிஸ் போட்டியில் பெற்ற 7வது இடம்.

இடையில் வேறு எத்தனையோ பரிசுகள். ஆர்த்தி பெற்றுள்ள பரிசுகள், அவளுடைய ஆட்டத்தைப் பற்றிய விமர்சனங்கள் ஆகியவற்றைப் பார்த்த போது இந்தச் சிறுமி எதிர்காலத்தில் இந்தியாவுக்குப் புகழ் சேர்க்கவுள்ள சாதனையாளர் என்ற நம்பிக்கை உறுதிப்பட்டது.


''முதல் போட்டியில் பரிசு பெற்றேன் என்றாலும், பின்னால் நான் எத்தனையோ போட்டிகளில் தோற்றும் இருக்கிறேன். இதில் வேடிக்கை, ஓப்பன் போட்டிகளில் நான் என்னை விட மூத்தவர்களைத் தோற்கடித்ததும், என்னை விட வயதில் சிறியவர்களிடம் நான் தோற்றதும்தான்!'' என்று அடக்கமாகச் சிரிக்கும் ஆர்த்தி, ''எனது வெற்றிக்குக் காரணம் எனது ஊக்கமும திறமையும் மட்டும்தான் என்று நான் கூற மாட்டேன். பெற்றோர்கள் கொடுக்கும் உற்சாகம். ஸ்ரீதரன் அவர்கள் தரும் பயிற்சி, நான் பரிசு பெறும் போதெல்லாம் காலையில் எல்லா மாணவர்களும் கூடியிருக்கும் வழிபாடு மண்டபத்தில் அதை அறிவித்து என்னையும் அழைத்துப் பாராட்டும் எங்கள் பள்ளி முதல்வர் வெங்கடாசலம் அவர்கள் காட்டிய உற்சாகம், தேர்வு நாட்களில் போட்டியில் கலந்து கொள்ள வெளியூர் போகும்படி இருந்தால் எனக்கென்று தனியாகத் தேர்வு நடத்தி என்னைத் தளர விடாது தட்டிக் கொடுத்து வரும் ஆசிரியர்களின் அன்பு ஆகிய எல்லாம்தான் எனது வெற்றிக்குக் காரணம்'' என்று நன்றிப் பெருக்குடன் குறிப்பிடுகிறாள்.

சென்னை எம். சி. டி. எம். சிதம்பரம் செட்டியார் மெட்ரிகுலேஷன் பள்ளியில் பயின்று வரும் ஆர்த்தி வகுப்பில் முதல் மூன்று இடங்களுக்குள் வந்து விடுகிறாள். இன்னும் கடுமையாகப் பயிற்சி பெற்று உலக சேம்பியனாக வேண்டும் என்பது ஆர்த்தியின் இலட்சியம். இதற்குத் தேவையான திறமை, இடைவிடா முயற்சி, ஒத்துழைத்துப் பெருமைப்படுத்தும் பயிற்சியாளர், ஆசிரியப் பெருமக்கள், உற்சாகமளிக்கும் பெற்றோர் என்று எல்லாம் பொருத்தமாக ஆர்த்திக்கு அமைந்திருக்கிறது. அதனால், ஆர்த்தியின் இலட்சியம் நிறைவேறும் நாள் வெகு தொலைவில் இல்லை. 'கோகுலம்' வாசகர் சார்பில் இந்த எதிர்கால உலக சேம்பியனுக்கு இப்பொழுதே நமது அட்வான்ஸ் பாராட்டுக்கள்! வாழ்த்துகள்!

அட்டை வண்ணப்படம் : யோகா

பொறந்தா யானைப் பயலா பொறக்கணும். என்ன தப்பு செஞ்சாலும் அவனை மட்டும் பெஞ்சு மேல நிக்க வைக்க மாட்டேங்கறாரே இந்த வாத்தியார்!





கழுத்து நிறையச் சங்கிலி போடணும்னா எத்தனை பவுன் வேணும்?

- ச. காளிக்கைராஜ்

பரபரப்பூட்டும்

ஒரு நாள் கிரிக்கெட் போட்டிகள்



தம்பி! ஒரு நாள் கிரிக்கெட் போட்டி என்றால் டீவியில் வைத்தக் கண் வாங்காமல் பார்த்து மகிழ்கிறாய் அல்லவா? அது பற்றிச் சில ரசமான தகவல்களைச் சொல்கிறேன் கேள்!

முதல் ஒரு நாள் சர்வதேசப் போட்டி 1971 ஜனவரி 5 ஆம் தேதி ஆஸ்திரேலியாவின் மெல்போர்ன் நகரில் ஆஸ்திரேலியா இங்கிலாந்து நாடுகளுக்கிடையே நடந்தது. ஆனால், ஒரு நாள் போட்டிகள் 1963 லேயே துவங்கி விட்டன. இது 'கில்லெட்' கோப்பைக்காக இங்கிலாந்திலுள்ள 'கௌண்டி' களுக்கிடையே ஆடப்பட்டன.

ஒருநாள் தொடர் போட்டிகள் முதன் முதலாக இங்கிலாந்துக்கும் ஆஸ்திரேலியாவிற்குமிடையே இங்கிலாந்தில் 1972 - ஆம் ஆண்டு துவங்கியது. அப்பொழுது அதன் பெயர் 'புருடென்ஷியல்' டிராஃபி. 1984 லிருந்து இதன் பெயர் 'டெக்ஸ்கோ' டிராஃபி

இந்த ஒருநாள் போட்டிகள் நாளடைவில் எல்லா நாடுகளிலும் பரவி மிகுந்த வரவேற்பைப் பெற்றதால் 'சர்வதேச கிரிக்கெட் கௌன்ஸில்' இதற்கென உலகக் கோப்பைப் போட்டியை நடத்தலாம் என்று முடிவு செய்து முதல் உலகக் கோப்பைப் போட்டி 1975 இல் இங்கிலாந்தில் நடத்தப்பட்டது. இது நான்கு வருடத்திற்கு ஒருமுறை நடக்கும். இதுவரை நான்கு உலகக் கோப்பைப் போட்டிகள் நடத்தப்பட்டுள்ளன.

1977-78 இல் ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த பெரும் பணக்காரர் 'கெர்ரி பேக்கர்' என்பவர் மற்றொரு கிரிக்கெட்

தொடரை ஆரம்பித்து வைத்தார். இது 'உலகத்தொடர் கிரிக்கெட்' என்றழைக்கப்பட்டது. இப்போட்டிகள் பகலில் மட்டுமின்றி இரவிலும் நடத்தப்பட்டன. இப்போட்டிகள் சர்வதேச கிரிக்கெட் கௌன்சில் நடத்தும் போட்டிகளுக்குச் சமமாக மட்டுமில்லாமல் எதிராகவும் நடத்தப்படுவதாகக் கருதப்பட்டதால் இதில் பங்கு கொண்டவர்கள் 'டெஸ்ட்' மற்றும் இதர சர்வதேசப் போட்டிகளில் பங்கேற்பதிலிருந்து விலக்கி வைக்கப்பட்டனர். இச் சம்பவங்கள் பெரும் பரபரப்பை ஏற்படுத்தினாலும் பின்னால் இந்த நிலைமாறி 'உலகத் தொடர் கோப்பை' என்ற பெயரில் இதுவும் சர்வதேச கிரிக்கெட்டில் ஒரு முக்கியப் பங்கு வகிக்கிறது.

'ஷார்ஜா'விலும் ஒரு நாள் போட்டிகள் 1948 லிருந்து துவங்கப்பட்டு உலக நாடுகள் பலவும் வந்து பங்கேற்கின்றன. பாலைவனத்திலும் கிரிக்கெட் நடத்த முடியும் என உலகுக்குக் காட்டியவர் 'அப்துல் ரெஹ்மான் புகாடீர்' என்பவர். பெரும் பணக்காரரான இவர் ஒரு வர்த்தகர். கிரிக்கெட் ஆடுவோருக்கு உதவுவதற்காகவே உருவான சங்கத்தின் தலைமைப் பொறுப்பேற்று மிகவும் சிறப்பான முறையில் ஒருநாள் போட்டிகளை ஷார்ஜாவில் நடத்தி வருபவர் முந்நாள் பாகிஸ்தான் வீரர் 'ஆஸீஃப் இக்பால்'. இப்போட்டிகளில் பங்கேற்கும் ஆட்டக்காரர்கள் கணிசமான தொகையை நன்கொடையாகப் பெறுகிறார்கள். என்ன தான் நம் இந்தியக் குழு, ஷார்ஜாவில் சில கசப்பான அனுபவங்களைப் பெற்ற போதிலும், அங்கு சென்று ஆடிவருகிறது. ஷார்ஜாவில் வருடத்திற்கு இருமுறை, ஏப்ரலில் ஒன்றும் அக்டோபரில் ஒன்றும், ஒரு நாள் கிரிக்கெட் தொடர்கள் நடத்தப்படுகின்றன. இந்த ஆண்டு அக்டோபர் மாதம் நடந்த தொடரில் இந்திய வீரர்கள் 'ஸி.எஸ். நாயுடு' 'பிரசன்னா' ஆகியோர்க்கு 'நன்கொடைகள்' கிடைத்தன.

ஒருநாள் போட்டிகளின் முக்கிய விதிமுறைகள் என்ன தெரியுமா?

★ உலகக் கோப்பைப் போட்டிகள் எல்லாமே 60 ஓவர்கள் என்றே ஆடப்படுகின்றன. தட்பவெப்பநிலை காரணமாக சென்ற உலகக் கோப்பையின் போது ஒரு அணிக்கு 50 ஓவர்கள் என்று நிர்ணயிக்கப்பட்டது.



சாதனையாளர் - கபில்தேவ்

நீ. சூர்யப்பிரகாஷ்



சாதனையாளர் - வி. ரிச்சர்ட்ஸ்



சாதனையாளர் - சேதன் சர்மா

★ போட்டிகள் தட்பவெப்பநிலையால் தடைப்பட்டால் இழந்த நேரத்திற்கேற்றார் போல ஒரு அணியின் அதிக பட்ச ஓவர்கள் மாற்றி அமைக்கப்படும்.

★ ஆடும் 'பிட்ச்' ஐச் சுற்றி 30 அடி தூரத்தில் நீள்வட்டமாக ஒரு எல்லைக் கோடு வரையப்பட்டிருக்கும். ஃபீல்டிங் செய்யும் அணி 'பௌலர்', 'விக் கெட் கீப்பர்' தவிர குறைந்த பட்சம் மேலும் நாலு ஃபீல்டர்களை அந்த நீள்வட்டத்திற்குள் நிறுத்தி வைத்திருக்க வேண்டும். அப்படி இல்லாமல் குறைவாக நிறுத்தப்பட்டிருந்தால் நடுவர் 'நோபால்' என்று கூறுவார்.

★ ஆடும் நிலையில் 'பேட்ஸ் மேன்' தோள்களுக்கு மேல், 'பௌலர்' வீசும் பந்து எழும்பிச் சென்றால் அதுவும் 'நோபால்' எனக் கருதப்படும்.

★ ஆட்டம் முடிந்த பொழுது இரு அணிகளும் சம ஓட்டங்களை எடுத்திருந்தால், ஒரு அணி மற்றொரு அணியைவிடக் குறைந்த ஓவர்கள் ஆடியோ அல்லது குறைந்த 'விக் கெட்கள்' இழந்தோ இருப்பினும், அந்த ஆட்டம் வெற்றி-தோல்வியின்றி சம நிலையில் முடிந்ததாக அறிவிக்கப்படும்.

போட்டிகள் ஒரே நாளிலிலேயே முடிவடைந்து விடுவதாலும், ஆட்டக்காரர்கள் அனைவருமே மிகவும் சுறு சுறுப்பாக ஆட வேண்டியிருப்பதாலும், ஒருநாள் போட்டி ரசிகர்கள் எண்ணிக்கை பயங்கர வேகத்தில் அதிகரித்து வருகின்றது.

ஒருநாள் போட்டிகளில் பங்கேற்கும் ஆட்டக்காரர்களில் பலர் ஐந்து நாள் நடக்கும் 'டெஸ்ட்' போட்டிகளில் ஆடும்பொழுது அதற்கேற்றபடி தங்கள் ஆட்டத்தை மாற்றி ஆட முடியாமல் தவிக்கிறார்கள். ஒரு சில தலை சிறந்த ஆட்டக்காரர்களால் மட்டும் தான், இந்த இரண்டுவிதமான போட்டிகளுக்கும் ஏற்றவாறு தங்கள் ஆட்டத்தை மாற்றி சிறப்பாக ஆட முடிகிறது.

இதுவரை நடந்துள்ள 697 ஒருநாள் போட்டிகளில் ஏற்படுத்தப்பட்டுள்ள சில உலக சாதனைகளைப் பார்ப்போம்:

பாட்டிங் :

●● வெஸ்ட் இண்டிஸின் விவியன் ரிச்சர்ட்ஸ் 1984 இல் இங்கிலாந்துக்கெதிராக ஆடி 189 ஓட்டங்கள் எடுத்தும் ஆட்டமிழக்காமலிருந்தார்.

●● ஒரு இன்னிங்ஸில் அதிக ஓட்டங்கள் எடுத்த நாடும் 'வெஸ்ட் இண்டிஸ்'தான். 1987 இல் கராச்சியில் நடைபெற்ற உலகக் கோப்பை ஆட்ட மொன்றில் அது இலங்கைக்கெதிராக 50 ஓவர்களில் 4 விக்கெட்களை இழந்து

360 ஓட்டங்களைக் குவித்தது.

●● ஒரு இன்னிங்ஸில் மிகவும் குறைந்த ஓட்டங்கள் எடுத்த நாடு கனடா. 1979 இல் இங்கிலாந்துக்கெதிராக 45 ஓட்டங்கள் மட்டுமே அதனால் எடுக்கமுடிந்தது.

●● ஒருநாள் போட்டிகளில் உலகிலேயே மிக அதிக ஓட்டங்கள் எடுத்த பெருமை 'வெஸ்ட் இண்டிஸை'ச் நாட்டைச் சேர்ந்த 'டெஸ்மன்ட் ஹெயின்ஸ்' ஐச் சேரும். - ஓட்டு மொத்தமாய் 7000 ஓட்டங்களுக்கும் மேல். அதிக முறை சதம் அடித்த பெருமையும் இவருக்கே - 16 முறை.

பௌலிங் :

●● ஒரு இன்னிங்ஸில் அதிக விக்கெட்கள் எடுத்து சாதனை புரிந்தவர்கள் இருவர். பாகிஸ்தானின் 'ஆகிப் ஜாவேத்'. வெஸ்ட் இண்டிஸின் 'வின்ஸ்டன் டேவிஸ். இவர்கள் தலா ஏழு விக்கெட்களைக் கைப்பற்றினர்.


●● எல்லாப் போட்டிகளையும் சேர்த்து மொத்த விக்கெட்களில் முதல் இடத்தில் உள்ளவர் நம் இந்திய வீரர் 'கபில் தேவ்'. மொத்தம் 216 விக்கெட்கள்.

●● இதுவரை ஆறு பௌலர்கள் ஏழு முறை ஹாட்-டிரிக் சாதனை புரிந்துள்ளார்கள். அவர்கள், பாகிஸ்தானின் 'ஜலாலுதின்', 'வாஸிம் அக்ரம்' (இரண்டு முறை) 'ஆகிப் ஜாவேத்' இந்தியாவைச் சேர்ந்த 'சேதன் சர்மா', 'கபில் தேவ்'; ஆஸ்திரேலியாவின் 'புரூஸ் ரீட்'.

பங்கேற்ற பெருமை:

●● ஒரு நாள் போட்டிகளில் மிக அதிகமாகப் பங்கேற்ற பெருமை ஆஸ்திரேலியாவின் 'ஆலன் பார்டரை'ச் சேரும். - 227 போட்டிகள்.

ஒருநாள் போட்டிகளில் தலைசிறந்த நாடுகளுக்குள் ஒன்றாகத் நிகழ்கிறது இந்தியா. 1974 இல், முதன் முதலாக ஒருநாள் போட்டியில் கலந்து கொண்ட இந்தியா இதுவரை ஒன்பது கோப்பைகளை வென்றுள்ளது.







அப்பாடா!

பள்ளி வாசகசாலையில் ஒரு விழா, ஏராளமானோர் கூடியிருந்தனர். கோபுவும் போனான். தலைமை வகித்த பெரியவர் 'வளவள'வென்று பேசிக் கொண்டிருந்தார். கோபு தன் அருகில் இருந்த சிறுவனிடம் ''இப்படி 'வளவள'வென்று பேசிக் கழுத்தறுக்கும் இந்தக் கிழம் யாரென்று தெரியவில்லையே?'' என்று எரிச்சலோடு கேட்டான். சிறுவன் கோபுவை எரிச்சலோடு பார்த்து விட்டு, ''நான் யார் தெரியுமா?'' என்று கேட்டான். ''தெரியாதே!'' என்றான் கோபு. ''அந்தக் கழுத்தறுக்கும் கிழத்தோட ஒரே பேரன்'' என்றான் சிறுவன்.

''அது சரி, நான் யார் தெரியுமா?'' என்று கேட்டான் கோபு. ''தெரியாதே!'' என்று வியந்தான் சிறுவன். ''அப்பாடா!'' என்று கூறி விட்டு ஓட்டம் பிடித்தான் கோபு!

- டி. தென்னரசு, செஞ்சி.

தலை தப்பியது!

அருணகிரிபுரத்தை ஆண்டு வந்த அரசன் செல்ல நம்பி ஒரு கொடுங்கோலன். இரவில் மாறுவேடம் போட்டுக் கொண்டு போவான். எந்த வீட்டிலாவது திண்ணையில் உறங்குவது போல் இருந்து, மறுநாள் ஏதாவது ஒரு காரணத்தைச் சுமத்தி அந்த வீட்டுத் தலைவனுக்கு தண்டனை வழங்கி மகிழ்வான்.

ஒருநாள் வெளியூரிலிருந்து வைத்தியர் ஒருவர் வந்தார். அவர் ஒரு சத்திரத்தில் தங்கினார். மன்னன் மாறுவேடத்தில் அவரை உளவு பார்த்தான். அதை எப்படியோ வைத்தியர் கண்டுபிடித்து விட்டார். அது அரசன் என்பது அவருக்குத் தெரியாது. யாரோ திருடன் என்று எண்ணி ஒரு கட்டையை எடுத்து வீசினார். அது மன்னனின் பல்லில் பட்டு விட்டது! மன்னன் 'ஐயோ!' என்று அலறிக் கொண்டு ஓடிவிட்டான்!

அடுத்தநாள் காலை வைத்தியருக்கு மன்னரிமிடருந்து ஓலை வந்துவிட்டது. தன்னை வந்து காணும்படி. அவர்

போனார். தனது பல்லுக்கு வைத்தியம் செய்யும்படி மன்னர் கேட்டார்.

குரலில் இருந்தே மன்னரை அடையாளம் கண்டு பிடித்து விட்ட வைத்தியர் எல்லையில்லாத ஆத்திரம் கொண்டார்.

''வைத்தியம் வேறு செய்யணுமா? ஆளைப்பார்! வேறு வேலை பார்!'' என்று ஏளனமாகக் கூறிவிட்டார்.

ஏற்கெனவே மன்னன் கொடுங்கோலன். அதில் அடிவேறு வாங்கி பல் வலியால் அவஸ்தைப்படுபவன். அவனுக்குக் கோபம் வரக் கேட்கவா



வேண்டும்?

''என்னை அவமானப் படுத்திய இந்த வைத்தியப் பதரைச் சிறையில் தள்ளுங்கள்!'' என்று உத்தரவிட்டான்.

வைத்தியர் அப்பொழுதுதான் தன் நிலைக்கு வந்தார். தான் பேசியது குற்றமே என்பதை உணர்ந்தார். இருந்தும் என்ன பயன்? மன்னர் சிறையிலடைக்க உத்தரவிட்டு விட்டாரே!

வைத்தியர் நல்ல அறிவாளி. உடனே சமாளித்துக் கொண்டு, ''மன்னவா, நான் உங்களை மரியாதைக் குறைவாகப் பேசவில்லை. ஆளைப் பார் என்றது ஆலமரத்து இலையையும், வேலைப்பார் என்றது வேப்பம் பட்டையையும் குறிக்கும். இவை இருண்டும் கைவசம் இருக்கையில் வேறு வைத்தியம் எதற்கு என்று கேட்கவே அப்படிக் கூறினேன்'' என்றார்.

மன்னனுக்கு வைத்தியரை மன்னிப்பதைத் தவிர வேறு வழியில்லாது போயிற்று! வைத்தியர் தலை தப்பியது!


ச. காணிக்கைராஜ்,
கிடாரங்கொண்டான்.

சொந்த வலிமை

சுரைக்கொடி ஒன்று வீட்டின் கூரை மேல் படர்ந்திருந்தது. வீட்டின் பக்கத்தில் ஒரு துளசிச் செடியும் இருந்தது. ஒரு நாள் சுரை, துளசியைப் பார்த்து ஏளனமாகச் சிரித்தது.

''ஏன் சிரிக்கிறாய்?'' என்று கேட்டது துளசிச்செடி. ''சிறிய செடியே! உன்னைக்கண்டு நான் இரக்கப்படுகிறேன். சிறு காற்றடித்தாலும் நடுங்குகிறாய். என்னைப்பார்! நான் வளர்ந்து எவ்வளவு உயரத்தில் இருக்கிறேன்'' என்று பெருமை பேசியது சுரைக் கொடி.

''உண்மைதான்! நீ மிக உயரத்தில் இருப்பது எனக்கும் தெரிகிறது. அதைப்பற்றி நான் எதுவும் கூறவில்லை. ஆனால், நான் என் சொந்த வலிமையில் நிற்கிறேன். அந்த வீட்டுக் கூரையின் உதவியின்றி உன்னால் சுயமாக நிற்க முடியுமா? அது இல்லாவிட்டால் உன்னால் நிற்கக் கூட முடியாதே? தரையில் படர்ந்து தான் செல்வாய் என்பதை மறக்காதே என்றது துளசிச்செடி.




சுரைக்கொடி பதில் சொல்லவில்லை. என்ன பதில் சொல்ல முடியும்?

- ஆறுபாதி புகழேந்தி,
மயிலாடுதுதுறை.

மனித வண்டி!

குப்பன் சரக்கு வண்டி ஓட்டிப் பிழைத்து வந்தான். அந்த ஊரையும் பக்கத்து ஊரையும் பிரித்த பெரிய ஆற்றின்மேல் பாலம் ஒன்று அமைத்திருந்தார்கள். அதில் வண்டிகள் செல்ல பத்து காசு கட்டணம் வசூலித்து வந்தார்கள். அந்தக் கட்டணம் நியாயமாகத் தோன்றியதால் யாரும் மறுக்கவில்லை. கொடுத்து வந்தார்கள்.

திடீரென்று ஊர் பஞ்சாயத்துக்காரர்கள் பத்து காசு கட்டணத்தை ஒரு ரூபாயாக உயர்த்தினார்கள். குப்பன்



போன்ற ஏழைகள், இதனால் பெரிதும் பாதிப்புக்கு ஆளானார்கள். குப்பன் சிறிது படித்தவன். எதையும் நன்கு யோசித்துச் செய்பவன். அதனால் எல்லோரும் அவனிடம் வந்து இந்தக் கட்டண உயர்வை நீக்க ஏதாவது வழி காணும்படி கேட்டுக் கொண்டனர்.

குப்பன் யோசித்தான். பாலத்தின் ஆரம்பத்தில் இரண்டு முனைகளிலும் மாட்டி வைக்கப்பட்டிருந்த போர்டைப் பார்த்தான்.

''மாடு, குதிரை வண்டிகள், பாலத்தைக் கடக்க ரூ. ஒன்று கட்டணம்,'' என்று எழுதியிருந்ததைத் திரும்பத் திரும்பப் படித்தான். அவனுக்கு ஒரு யோசனை தோன்றியது. நண்பர்களை அழைத்தான். தன் யோசனையைக் கூறினான். அதன்படி அடுத்த நாள் எல்லோரும் கூடினர். தங்கள் வண்டிகளில் இருந்த மாடுகளைக் கழற்றி விட்டனர். தாங்களே வண்டிகளை இழுத்துக் கொண்டு பாலத்தைக் கடக்க முயன்றனர். காவலாளி தடுத்தார்.

''எங்களைத் தடுக்க முடியாது. மாடு, குதிரை வண்டிகளுக்குத்தான் கட்டணம் போட்டிருக்கிறீர்கள். நாங்கள் இழுப்பது மனித வண்டி. இதற்குக் கட்டணம் கட்டும்படி அறிவிப்பில் இல்லை'' என்றான் குப்பன்.

காவலாளி திகைத்து நிற்க, குப்பன் தனது நண்பர்களுகளோடு வண்டியை இழுத்தபடி பாலத்தைக் கடந்தான். திரும்ப வந்து மாடுகளை ஓட்டிக் கொண்டு போனான். பிறகு வண்டியில் மாடுகளைப் பூட்டி ஓட்டிக் கொண்டு போனான்.

காவலாளி திகைத்தான்! பஞ்சாயத்தாரும் திகைத்து, பழைய கட்டணத்தையே அமுல்படுத்தினர்!

- என். சுந்தரராஜன், மதுரை - 1.

அப்பாஜி அப்பாஜிதான்!

ஒரு நாள் கிருஷ்ணதேவராயர் வேட்டைக்குப் போனார். நல்ல கோடை காலம் வெயில் கொளுத்தியது. குதிரை ஏறிவந்த களைப்பு, ஒரு குளக்கரையில் உள்ள பெரிய ஆலமரத்தின் நிழலில் அமர்ந்தார். அந்த வழியே மூன்று பெண்கள் குளத்திற்குத் தண்ணீர் எடுக்க வந்தார்கள்.

ஒரு பெண், குளத்தங்கரையில் விரிந்து கிடந்த அந்த ஆலமரத்தைப் பார்த்தபடியே ''காலும் கழியும் ஒன்றடி!'' என்றாள். இரண்டாவதாக வந்தவள் ''இறகும் இலையும் ஒன்றடி!'' என்றாள். மூன்றாமவள்



''வாயும் கனியும் ஒன்றடி!'' என்று கூறினாள்.

இவற்றைக் கேட்டுக் கொண்டிருந்த அரசருக்கு அவர்கள் பேசியதன் பொருள் விளங்க வில்லை. யோசித்துப் பார்த்தார். என்ன யோசித்தும் அந்த வார்த்தைகளின் உண்மைப் பொருள் புலப்படவில்லை. தவித்தார்.

அடுத்த நாள் சபை கூடியது. இவற்றைச் சொல்லி ''அந்தப் பெண்கள் கூறியதன் உட் பொருள் என்ன?'' என்று கேட்டார். ஒருவராலும் அவற்றுக்கு உரிய விளக்கத்தைச் சொல்ல முடியவில்லை. இறுதியில் அப்பாஜி சொன்னார்... 'நீண்ட நெடும் சிந்தனைக்குப் பின்பே நான் இந்த வாக்கியங்களின் உட் பொருளைத் தெரிந்து கொள்ள முடிந்தது. அரசே! இந்த மூன்று பெண்களும் அந்த ஆல மரத்தில் உள்ள கிளி ஒன்றைப் பற்றித் தான் குறிப்பாகப் பேசி இருக்க வேண்டும்.'

''அப்படியா?'' என்றார் அரசர் வியப்புடன்.

''ஆம்! காலும் கழியும் ஒன்றடி என்றது அந்தக் கிளியின் காலும் மரக் கிளையும் ஒன்றுபோல் உள்ளன என்று குறிப்பிட்டதாகும். இரண்டாமவள் 'இறகும் இலையும் ஒன்றடி' என்றது கிளியின் சிறகுகளை இலையோடு ஒப்பிட்டு இரண்டும் பச்சை வண்ணம் என்று சொன்னதாகும். மூன்றாவது பெண் 'வாயும் கனியும் ஒன்றடி என்றாளே.... அது அந்தக் கிளியின் வாயும் மரத்துக் கனியைப் போல் சிவப்பாக இருந்தது என்ற பொருளில் கூறியதாகும்!'' என்றார் அப்பாஜி.

மூன்று பெண்களையும் வரவழைத்துக் கேட்டு அப்பாஜி சொன்னது உண்மைதான் என்பதை அரசர் உணர்ந்து கொண்டார். அப்பாஜியின் அபார அறிவைப் பாராட்டினார்.

- ஆ. வெங்கடேசன்,
திண்டிவனம்.

விடுகதைப் போட்டி



விடுகதையில் ஆர்வமுடைய வாசகர்களின் தொடர்ந்த வேண்டுகோளுக்கு இணங்க இந்த விடுகதைப் போட்டி அறிவிக்கப்படுகிறது. தொலைக்காட்சியைப் பற்றி நீங்கள் விடுகதை எழுதி அனுப்ப வேண்டும். சிறந்த விடுகதைகளுக்குப் பரிசு தரப்படும். பரிசு பெற்றோர் புகைப்படம் கோகுலத்தில் வெளியாகும். இந்தப் போட்டியில் 15 வயதிற்கு உட்பட்டோர் மட்டுமே கலந்து கொள்ளலாம். கூப்பனை இணைத்து அனுப்ப வேண்டும்.

விடுகதைப் போட்டி

பெயர் :..

வயது :..

முகவரி :..

பின்கோடு : ....

முடிவு தேதி : 15.2.92



கேட்கட்டும டாக்டர்?

டாக்டர். கு. கணேச

★ பி. எஸ். மணிமாறன், பரங்கிப் பேட்டை.

டாக்டர், நான் படிக்கும் பாடங்கள் நினைவில் நிற்காமல் மறந்து விடுகிறது. நினைவில் வைக்க ஆலோசனை வழங்கவும்!

'நமக்குத்தான் படிக்கிற பாடங்கள் மறந்து விடுமே' என்கிற எண்ணம், உன் நினைவுத் திறனின் முதல் எதிரி. எனவே, முதலில் அதை விரட்ட வேண்டும். அடுத்தது, உன் நினைவுத் திறனில் நீ முழு நம்பிக்கை வைக்க வேண்டும். படிப்பின் மேல் நீ வைத்துள்ள உண்மையான ஆர்வத்தையும், ஆசையையும், அக்கறையையும் பொறுத்துத்தான் உன் நினைவுத் திறன் வளரும். ஆகவே, பாடங்களில் அதிக ஆர்வம் காட்ட வேண்டும். படிப்பதில் உனக்கு உள்ளார்ந்த அக்கறை இருக்க வேண்டும். தினமும் படித்து நினைவில் நிறுத்த வேண்டிய பாடங்களை அடிக்கடி நினைத்துப் பார்ப்பது, மீண்டும் மீண்டும் மனதிற்குள் சொல்லிப் பார்ப்பது, குறிப்பேட்டில் எழுதிப் பார்ப்பது போன்ற பயிற்சிகள் உன் நினைவுத் திறனை வளர்க்க உதவும். சிரசாசனம், தியானம், காலை மாலை இருவேளைகளில் நடைப் பயிற்சி செய்வது போன்றவை மனதைத் தெளிவுபடுத்துவதுடன், உன் நினைவுத் திறனையும் வளர்க்க வல்லவை. செயல்படுத்து. முயற்சி திருவினையாக்கும்!

★ பி. சசிகுமார், வந்தவாசி.

அரிசி தின்பதால் வயிற்றில் நாக்குப் பூச்சி வளரும் என்கிறார்களே, அது உண்மையா?

உண்மையில்லை!

★ எஸ். பிரகாஷ், சென்னை - 15.

முதலுதவிப் பெட்டியில் வைக்க வேண்டிய பொருட்கள் எவை?

ஓரங்குல அகல ஒட்டும் துணி (PLASTER), கிருமி நீக்கம் செய்யப் பட்ட கட்டுத் துணிகள் (BANDAGES), கத்தரிக்கோல், ஒரு கட்டுப் பஞ்சு, இழுக்க நீளாத முரட்டுக் கட்டுத் துணி,




எலும்பு முறிவுக்குப் பயன்படுத்தப் படும் மரச் சிம்புகள், தீப்புண்ணுக்கு இடப்படும் 'சில்வர் சல்ஃபா டயசின்' மருந்து, சிராய்ப்புகளுக்கு போடப் படும் ஜென்சன் வயலட் களிம்பு, தோல் காயங்களுக்குத் தடவப்படும் நியோமைசின் களிம்பு, புண்களைத் துடைக்க 2 சதவீத டிங்க்சர் அயோடின் கரைசல், இரத்த உறைவைக் குறைக்க டர்பென்டைன் மருந்து, வலி நிவாரணி மாத்திரைகள், வாந்தி, வயிற்றுப் போக்கை நிறுத்த உதவும் மாத்திரைகள் போன்றவை முதலுதவிப் பெட்டியில் அவசியம் இருக்க வேண்டிய பொருட் களாகும்.

★ அ. திருமுருகன், செஞ்சி.

நரம்புச் சிலந்தி என்றால் என்ன டாக்டர்? இந் நோய் எதனால் வருகிறது?

எப்படித் தடுப்பது? சற்று விளக்கமாகக் கூறுங்கள், ப்ளீஸ்!

நரம்புச் சிலந்தி நோய் என்பது 'GUINEA WORM' எனப்படும் பூச்சியால் உண்டாகிறது. அசுத்தமான கிணறுகளில் தேங்கிக் கிடக்கும் தண்ணீரிலும், குளம், குட்டைகளில் காணப்படும் அசுத்தமான தண்ணீரிலும் 'சைக்ளாப்ஸ்' (CYCLOPS) எனப்படும் ஒற்றைக் கண் பூச்சிகள் இருக்கின்றன. இவற்றினுள்ளே நரம்புச் சிலந்தியின் முட்டைப் புழு (LARVA) இருக்கும். இந்த அசுத்தத் தண்ணீரை மக்கள் பருகும் போது, சைக்ளாப்ஸ் உள்ளே சென்று, , நரம்புச் சிலந்திப் பூச்சியின் முட்டைப் புழு வெளிப்பட்டு, மனிதனின் தோலிலும் தசையிலும் தங்கி முழுப் பூச்சியாக வளர்ச்சி பெறுகிறது. சில நாள் கழித்து, அவை மனிதனின் தோலைத் துளையிட்டு வெளிவரத் துவங்குகின்றன. அப்போதுதான் நரம்புச் சிலந்தி என்ற கொப்புளம் தோன்றுகிறது. நாளடைவில் இக் கொப்புளம் வெடித்து பூச்சி தானாக வெளியேறும். இந் நோயைக் குணமாக்க நிக்லோசமைட், மெபெண்டசால் போன்ற மாத்திரைகள் இருந்த போதிலும், கொப்புளத்திலிருந்து வெளிப்படும் பூச்சியை ஒரு சுத்தமான குச்சியில் மெதுவாகச் சுருட்டி வெளியே எடுத்துத் தீயில் பொசுக்கி விட வேண்டும். அப்போதுதான் மற்றவர்களுக்கு இந் நோய் பரவாமலிருக்கும். சுத்தமான தண்ணீரில் குளித்து, சுத்தமான தண்ணீரையே குடித்தோமானால், நரம்புச் சிலந்தி நோயை எளிதில் தடுத்து விடலாம்.



★ அ. முஸ்தபா, தக்கோலம்.

'கால் ஆணி' என்பது என்ன? இது எதனால் தோன்றுகிறது? அதை அறுத்து எடுப்பது நல்லதா? மருந்து கட்டுவது நல்லதா?

கால் ஆணி என்பது பாதத்தில் உள்ள தோல் உள்நோக்கி வளர்வதால் உண்டாகக்கூடிய ஒரு நிலை. தவறான முறையில் தயாரிக்கப்பட்ட காலணிகளை அணிவதாலும், மென்மையற்ற, கடினமான காலணிகளை அணிவதாலும் கால் ஆணி தோன்றலாம். பாத நரம்புகள் தளர்ச்சி அடைந்தாலும், சர்க்கரை வியாதி இருந்தாலும் கால் ஆணி ஏற்பட வாய்ப்புண்டாகிறது. காரணம் எதுவாயினும், கால் ஆணியை ஆரம்பக் கட்டத்திலேயே அறுவை சிகிச்சை நிபுணரிடம் காண்பித்து, அதை முழுமையாக அகற்றி விட வேண்டும். இதுவே கால் ஆணிக்கு முழு நிவாரணம் தரும். மாறாக கால் ஆணிக்கு மருந்து கட்டுவதால் தற்காலிக நிவாரணம்தான் கிடைக்குமேயன்றி, முழு நிவாரணம் கிடைப்பதில்லை.

★ தராசு முருகன், திருஅம்பர்.

சிறுவர்கள் 'பார்' (BAR) பயிற்சிகள் செய்யலாமா?

தாராளமாகச் செய்யலாம். சோவியத் ரஷ்யாவில் பிறந்த குழந்தைகள் யோகாசனமும் உடற்பயிற்சிகளும் செய்யும் போது நம் நாட்டுச் சிறுவர்கள் 'பார்' பயிற்சிகள் செய்வதற்குத் தயக்கம் காட்டலாமா?

பானை பெற்ற பாடம்

கோயில் கோபுரம் போல அந்தப் பானை அடுக்கு இருந்தது. அடியில் பெரிய பானை, நடுவில் அதை விடச் சிறிய பானை, உச்சியில் எல்லாவற்றையும் விட மிகவும் சிறிய பானை. இந்தப் பானை அடுக்கு, பழைய வீடு ஒன்றின் மூலையில் சாய்ந்து கொண்டு இருந்தது. அடிப் பானை, வீட்டின் உரல் போல் பருமனாக இருந்தது. உச்சியில் உள்ள பானை குண்டு சொம்பு போல இருந்தது.


எல்லாப் பானைகளுக்கும் மேலே அது இருந்ததால், அது தன்னைப் பற்றி மிகவும் உயர்வாக நினைத்துக் கொண்டிருந்தது. அந்த நினைப்பு நாளடைவில் தற்பெருமையாக மாறியது. பிறகு அது அளவுக்கு மீறிய செருக்காக வளர்ந்தது.

ஒரு நாள் அந்தச் சிறிய பானை, கீழே, ஓரத்திலிருந்த பருத்த சட்டியைக் கூப்பிட்டது. பதில் கூறிய அந்தச் சட்டி, ''சிறிய பானையே, நலம்தானா?'' என்று கேட்டது.

''நான் சிறிய பானை அல்ல; சிறந்த பானை'' என்று ஆணவத்துடன் சொன்னது அது. 'நீ சிறந்த பானை என்பதை ஏற்றுக் கொள்கிறேன். ஆனால், நீதான் சிறந்த பானை என்பதை ஏற்க முடியாது'' என்று மறுத்தது சட்டி. ''நான்தான் சிறந்தவன். மிகவும் உயர்ந்தவன். ஆகவேதான் உயர்ந்த இடத்தில் இருக்கிறேன். நான் சிறந்தவன் என்பதால் தான், இத்தனைப் பானைகளுமாகச் சேர்ந்து என்னைத் தாங்கிக் கொண்டிருக்கின்றன'' என்று ஆதாரம் காட்டிப் பேசியது உச்சிப் பானை.

"ஒருவர் வாழ்க்கையில் உயர்வு பெறும் போது அவருக்குச் செருக்குக் குறைந்து விட வேண்டும்'' என்று அறிவுரை சொன்னது சட்டி.

ஒருநாள் இரவில், சின்ன எலி ஒன்று, சிறிய பானையில் நுழைந்தது. அங்கேயே தங்கி வாழத் தொடங்கியது. சில நாட்கள் சென்றன. அந்த எலியை ஒரு பூனை பார்த்து விட்டது. அதைப் பிடிப்பதற்கு மேலே தாவியது. அதன் காரணமாக, அந்தச் சிறிய பானை, கீழே விழுந்து சுக்கல் சுக்கலாக உடைந்து விட்டது. ''அறிவுரையை விட, அனுபவமே நல்ல விளைவை உண்டாக்கும்'' என்று பக்கத்திலிருந்த மிடாவிடம் சொல்லி வருத்தப்பட்டது பெரிய பானை.



– மலையமான்

எத்தனை சொற்கள்? - போட்டி முடிவு

அசத்துவது என்று சொல்லுவார்களே, அது எப்படியிருக்கும் தெரியுமா? இந்தப் போட்டியில் ஏற்பட்ட அனுபவத்தைப் போலத்தான் இருக்கும்! டே அப்பா! 2,476 பேர் இந்தப் போட்டியில் கலந்து கொண்டிருக்கிறார்கள்! சொற்களைக் கண்டுபிடிக்க அகராதியை அலசியிருக்கிறார்கள். ஒரு சுவையான செய்தி. இந்தப் போட்டி குழந்தைகளைத் தவிர பெரியவர்களையும் கூடக் கவர்ந்திருக்கிறது. 64 வயதுப் பெரியவர் ஒருவர் கரூரில் இருந்து 2500 சொற்களை எழுதி, கூப்பனோடு அனுப்பியிருக்கிறார். கூடவே ஒரு கடிதம், தானும் பங்கு கொள்ள வேண்டும் என்ற ஆர்வத்தில் எழுதியிருப்பதாகவும், அதைப் பரிசுக்கென எடுத்துக் கொள்ள வேண்டாம் என்றும்! சென்னை தாம்பரத்தில் இருந்து ஒரு பேராசிரியர், 3000 சொற்களை எழுதி வந்து, நேரில் காண்பித்து 'பரிசுக்காக எடுத்துக் கொள்ள வேண்டாம்' என்று காட்டி விட்டுப் போயிருக்கிறார்! நல்ல காலம்! இவர்களது பெருந்தன்மைக்கு நன்றி! இல்லாவிட்டால் பரிசை இந்த இருவருமே தட்டிச் சென்றிருப்பார்கள்!

நூறு சொற்களுக்கு மேல் எழுதியவர்களின் பட்டியலைத் தயாரித்து, விதிமுறைப்படி இருக்கிறதா என்பதைப் பரிசீலித்ததில் 72 பேர் தேறினர். இவர்களில் அதிக சொற்கள் எழுதியவர்களுக்குப் பரிசு தரப்பட்டுள்ளது.

முதல் பரிசு ரூ 40/-

எம். பிருந்தா,
உதயேந்திரம்
- 2101 சொற்கள்

இரண்டாவது பரிசு ரூ 30/-

பி. சங்கர்,
நச்சாந்துபட்டிசாலை
- 1339 சொற்கள்

மூன்றாவது பரிசு ரூ. 20/-

வி. ராதா,
குப்புசாமி நாயுடுபுரம்
- 1083 சொற்கள்

ஆறுதல் பரிசு ரூ. 10/-


1. டி. ஆனந்த்,
சென்னை - 80
- 602 சொற்கள்.
2. வி. எஸ். ஜெயா,
விருதுநகர்
- 577 சொற்கள்.

இவர்கள் எழுதியுள்ள சொற்களை வெளியிட வேண்டுமானால் தனியாக இரண்டு கோகுலம் வெளியிட வேண்டும்! பரிசு பெற்றவர்களுக்கும், போட்டியில் கலந்து கொண்டவர்களுக்கும் கோகுலம் வாசகர் சார்பில் பாராட்டு, நன்றி!

''நம் பையனுக்கு 'அ'னா, 'ஆ'வன்னா சொல்லிக் கொடுக்கிறது ரொம்பக் கஷ்டம். 'அ' அணில், 'ஆ' ஆடுன்னேன். உடனே ஆட ஆரம்பிச்சுட்டான். இன்னும் திருந்தலே!

- ச. காளிங்கராஜ்





சார் தபால்!

விருந்தென இனித்தன!

❖ ஆபத்து வரும் போது புத்திசாலித்தனம் இருந்தால் உயிர் பிழைக்கலாம் என்பதை 'புத்தி சாலி பிழைப்பான்' விளக்கியது.
செண்பகராயநல்லூர், எஸ். ஆர். சோமசுந்தரம்.

❖ 'பொங்கல் பாவாடை' மிக அருமை. காந்திஜி அணிந்த உடைக்குக் காரணமான நிகழ்ச்சிதான் நினைவிற்கு வந்தது. 'புலியைப் பார்த்துப் பூனை சூடு போட்டுக் கொள்வது போல' பெற்றோரின் சக்தி அறியாது அவர்களை நிர்ப்பந்திக்கும் பிள்ளைகளுக்கும் ஒரு பாடமாகவும் அமைந்தது.
திருக்கோவிலூர், டி. சிவக்குமார்.

❖ 'யார் சொன்னது?' நாடகம் கோகுலத்திற்கு மேலும் அழகு சேர்த்தது. 'அரசனும் தெய்வமும் அன்றே கொல்லும்' என சொல்ல வைத்தது. நாங்கள் கேட்கும் சத்தான கேள்விகளுக்கு முத்தான பதில்களைக் கொத்தாகத் தரும் சேரம்பிக்கு பாராட்டுகள் பல!
மதுக்கூர், ரமேஷ்.

❖ புத்தாண்டில் அடியெடுத்து வைத்து சாதி,மத வேறுபாடு இன்றி காலண்டர்களைப் பற்றி வெளியிட்டு அனைத்துத் தரப்பினரின் மகிழ்ச்சியையும், பாராட்டுதலையும் பெற்றது 'கோகுலமே'. நீடூழி வாழ்க.
அடியக்கமங்கலம், பி. சஹாபுதீன்.

❖ பிருந்தாவனக் கவியரங்கத்தில் விருந்தென இனித்தன கவிதைகள்.
வடமபாதிமங்கலம், வே. பூங்குன்றன்.

❖ இரும்பனான் படக்கதை மிகவும் அருமையாக இருந்தது.
செஞ்சி - 2. க. இரா. விஜயகுமார்.

❖ "கையில் இருந்தால் பொம்மை. வானில் பறந்தால் உண்மை" கட்டுரைக்கு ஏற்றவாறு இம்மாத இதழின் மேலட்டைப் படம் புதுமையாக மிளிர்ந்திருக்கிறது. அழகான அட்டைப் படங்களை அருமையாக செலக்ட் செய்து போடுவதற்காக உங்களுக்கு அவார்டே தரலாம்.
தக்கோலம், அ. முஸ்தபா.

❖ 'மலைக்கோட்டை மர்மம்' தொடர்கதைதான் திகிலடையச் செய்கிறது என்றால், ஓவியர் செல்லமும், தனது ஓவியங்கள் மூலம் எங்களை மேலும் திகிலடையச் செய்கிறாரே! திகிலோ, திகில்!
செஞ்சி (தெ. ஆ.), தா. ஷேக் உசேன்.

❖ பத்தாம் ஆண்டில் அடியெடுத்து வைக்கும் கோகுலத்திற்கு இதயம் நிறைந்த இனிய நல் வாழ்த்துகள்!
சேலம் - 5, என். சுரேஷ்.

❖ ஜனவரி அட்டை கண்ணைப் பறித்தது! 8வது அதிசயம் என் கருத்தைப் பறித்தது!
மொரப்பூர், சி. அருள்மணி.

❖ இதுநாள்வரை பச்சோந்தியானது சூழ்நிலைக்கு ஏற்பத் தன் நிறத்தைத் தானே மாற்றிக் கொள்ளும் என்றுதான் நினைத்திருந்தோம். அது தவறு. நிறம் மாறும் செயல் ஓர் அனிச்சைச் செயல் என்றும் அது பச்சோந்தியின் கட்டுப்பாட்டில் இல்லை என்றும் அறிய வைத்ததோடு அல்லாமல் சுற்றுப்புறச் சூழலில் உள்ள உயிரினங்களைக் கவனித்தும் அவைகளின் செயல்பாடுகளையும் அறிந்து ரசிக்க வேண்டும் என்ற பாடத்தையும் கற்றுத் தந்த கோகுலத்தைப் பாராட்டுகிறோம்.
ஸ்ரீமுஷ்ணம், த. எழில்செல்வி.

❖ அமெரிக்க ஜனாதிபதியாக ரூஸ்வெல்ட் நான்கு முறை தேர்ந்தெடுக்கப்பட்ட செய்தி ஆச்சர்யத்தையும், அவரது முடக்குவாத நோயை ஜார்ஜியா கொதி நீர் ஊற்று முற்றிலும் நீக்கிய விபரம் அதிசயத்தையும் தந்து விட்டது!
கருமத்தம்பட்டி, அ. இராஜப்பன்.

❖ ரப்பரைப் பற்றிய ஆழி அவர்களின் சிறப்புச் செய்திகள் மனதைத் திருடிக் கொண்டன.
மொரப்பூர், 'எம். எச். 'கோகுலப்ரியா'.

❖ 'மெட்ராஸ் ஐ' எதனால் வருகிறது, எப்படி அதிலிருந்து நம்மைக் காத்துக் கொள்ள வேண்டும் என்பதை டாக்டர் தெளிவாக்கி விட்டார். பாராட்டுகள்.
கருமத்தம்பட்டி, இரா. அருண்பிரகாஷ்.

❖ "முத்துப் பல்லக்கு" சிறுகதை படித்தேன். "முத்து"வைப் போலவே... இந்த சிறுகதையும்... விலைமதிப்பற்றது. பாராட்டுக்கள் பல...!
புதுவண்டிப்பாளையம், அனில்ப்ரியா.

❖ உலகநாதனின் உலக்கை எங்களைச் சிரிக்க வைத்தது - கில்லிதாண்டு விளையாடும் அரசனைப் பார்த்து சிரித்துச் சிரித்து மகிழ்ந்தோம். சின்னபாபுவுக்கு வாழ்த்துகள்.
சின்னசேலம், அ. முகம்மது முபீன்.

பரதன் அச்சகத்தில் பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக அச்சிட்டு வெளியிடுபவர் : வி. முரளி. ஆசிரியர் : கி. ராஜேந்திரன்.
முகவரி : ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை - 600 032. தொலைபேசி : ஆசிரியர் குழு அலுவலகம் : 2344145; சர்க்குலேஷன் மானேஜர் : 2344190; விளம்பரம் - சந்தா : 2344157; டைரக்டர் : 2341543.
ஆண்டுச் சந்தா - உள்நாடு : ரூ. 36/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 140/-; விமானத் தபால் : ரூ. 360/-.
ஆறுமாதச் சந்தா - உள்நாடு : ரூ. 18/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 70/-; விமானத் தபால் : ரூ. 180/-.



வரிசை சிறிதும் வளையாமல்
விரைந்து கற்க விரைகிறோம்!

REGISTERED NO. TN MS (S) 281

Registered as a Newspaper in Srilanka

